விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 29 செவ்வாய்க்கிழமை (13.01.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 025

# ஊழலில் ஈடுபடுவோர் தண்டிக்கப்படுவார்கள்!



## புதிய அமைச்சரவையில் ஜனாதிபதி உரை

(கொழும்பு)

ஊழல் மோசடிகளில் ஈடுபடும் தரப்பினர் எவராக இருப்பினும் தராதரம் பாராது தண்டிக்கப்படுவர் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆணித்தரமாக தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## புனித பாப்பரசர் இன்று வருகை



புனித பாப்பரசர் பிரான்ஸிஸ் திருத்தந்தை இன்று செவ்வாய்க்

23ஆம் பக்கம் பார்க்க....

## பிரதி அமைச்சராக விஜயகலா நியமனம்



ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி

23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் ஆளுநர் ஒருவரை வடக்கிற்கு நியமிக்க வேண்டும்

### ஜனாதிபதியிடம் கூட்டமைப்பு நேரில் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**வட மாகாணத்திற்கு தமிழ் ஆளுநர் ஒருவரை அரசு நியமிக்க வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவிடம் நேரடியாக கோரிக்கை விடுத்துள்ளது.**

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதி

24ஆம் பக்கம் பார்க்க....

## புதிய அமைச்சரவை நேற்று அறிவிப்பு

### அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் ஜனாதிபதி முன் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்ட அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க உட்பட அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் சத்தியப்பிரமாணம் செய்துக் கொண்டனர். அமைச்சுகளின் பணிகளை அரசியலமைப்புச் சட்ட

23ஆம் பக்கம் பார்க்க....



## கடமைகளை ஜனாதிபதி ஆரம்பிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்திற்கு சென்று உத்தியோகபூர்வமாக தனது பணிகளை ஆரம்பித்தார்.

இந்த வைபவத்தில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க கலந்து கொண்டதுடன், வைபவம் மிகவும் எளிமை

24ஆம் பக்கம் பார்க்க....

## நாளை 14ஆம் திகதி பொது விடுமுறை

(கொழும்பு)

பாப்பரசரின் இலங்கைக்கான வருகையை முன்னிட்டு நாளை 14 ஆம் திகதி அரச வங்கி பொது விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

14 ஆம் திகதி காலிமுகத்திடலில் இடம்பெறும் பிரதான தேவ ஆராதனையை முன்னிட்டு அன்றைய தினம் விசேட விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக பொது

24ஆம் பக்கம் பார்க்க....

## பாதுகாப்பு அமைச்சராக சரத் பொன்சேகா நியமனம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் குடியுரிமை பறிக்கப்பட்டிருந்த ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு அதனை மீண்டும் வழங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அவரை புதிய அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சராகவும் நேற்று நியமித்துள்ளார்.



யுத்தம் நடைபெற்ற காலத்தில் 20 வருடங்களாக பாதுகாப்பு

23ஆம் பக்கம் பார்க்க.

## பஷில், நாமலுக்கு எதிராக முறைப்பாடு

(கொழும்பு)

முன்னாள் பொருளாதார அமைச்சர் பஷில் ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோருக்கு எதிராக ஜே.வி.பி இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய தீர்மானித்துள்ளது.

ஆணைக்குழுவில் இன்றைய தினம் இவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்படும் என ஜே.வி.பியின்

24ஆம் பக்கம் பார்க்க....

## போர்க்குற்ற விசாரணைக்காக சர்வதேசத்திடம் எவரையும் ஒப்படைக்க மாட்டோம்-ராஜித

(கொழும்பு)

போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைக்காக சர்வதேச சமூகத்திடம் எவரையும் ஒப்படைக்க மாட்டோம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள ஆணையாளர் பணியகம் நடத்தும்



விசாரணையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றவாளியாக காணப்பட்டால், புதிய அரசாங்கம் என்ன செய்யும் என்று ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வழங்கிய செவ்வியில், போர் ஒன்றின் போது தவறுகள் இடம்பெறும் என்று சரத் பொன்சேகா சொன்னதைக் கேட்டிருக்கிறேன். ஆனால், வெள்ளைக்

23ஆம் பக்கம் பார்க்க....

## நீதிமன்றில் ஆஜராகுமாறு மகிந்தவுக்கு உத்தரவு!

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்வரும் 26 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்துவத்தில் இருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக கொட்டிகாவத்தை - முல்லேரியாவ பிரதேச சபையின் தலைவர் பிரசன்ன சோலங்க ஆராச்சி தாக்கல் செய்த செய்த வழக்கு ஒன்றுக்கு அமைய முன்னாள் ஜனாதிபதி உட்பட 4 பேரை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## செல்வி ஸ்டெலா பொன்னையா

51, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஸ்டெலா பொன்னையா 09.01.2015 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், இராஜசிங்கம் (USA), சந்திரசேகரம் (UK), யாட்லி (ஜேர்மனி), ஹில்டா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், லூர்த்தம்மா (USA), காலஞ்சென்ற சோபா மற்றும் ஜான்யா, நடராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஸ்பென்சர் - சீத்தா (USA), மன்னன் - தர்ஷா (USA) றோய் - றோஸி (USA), டயன் - யமுனா (USA), அனிற்றா - றொஷான் (USA), அனுஷா - சுஜித் (UK), ஷாலா - அமரன் (UK) சுபத்ரா - ராஜு (UK) சுகன்யா - நேசன் (இலங்கை), சில்வியா (ஜேர்மனி). ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரோஷன் (ஜேர்மனி), சுரேக்கா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு பெரியம்மாவும், தானியா (USA), பிராண்டன் (USA), லிவானா (USA), நெவின் (USA), டிலன் (USA), றியா (USA), எய்டன் (USA), கெவின் (USA), ஈத்தன் (UK), றெனேய் (UK), சச்சின் (UK), ஆனந்த் (UK), பாரதி, (UK), திவ்வியா (UK), அஞ்சலி (UK), சுனேகா (இலங்கை) ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் நாளை (14.01.2015) புதன்கிழமை காலை 10.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
விஞ்ஞானசிங்கம்
(ஒன்றுவிட்ட சகோதரன் - அவுஸ்திரேலியா)
T.P: 0765930239

(9134)

# கிழக்கு மாகாணசபையில் விரைவில் ஆட்சி மாற்றம்

## 20-ம் திகதிவரை சபை ஒத்திவைப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபையின் நடவடிக்கைகள் எதிர்வரும் 20ஆம் திகதி வரை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி கிழக்கு மாகாண சபை அமர்வு தவிசாளர் ஆரியவதி கலப்பதியினால் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இதன்படி நேற்று 12ஆம் திகதி திங்கட்கிழமை கிழக்கு மாகாண சபை மீண்டும் கூடிய போது, கட்சித் தலைவர்களின் கூட்டத்தை தொடர்ந்து சபை அமர்வு ஆரம்பிக்கப்பட்ட நிலையில் சபை நடவடிக்கைகள் முற்பகல் 11 மணி வரை ஒத்திவைக்கப்பட்டன.

இதன் பின்னர், சபை நடவடிக்கைகள் 11.15 மணியளவில் ஆரம்பமான போது, ஜனாதிபதி தேர்தலில் மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், கிழக்கு மாகாணசபையிலுள்ள ஆளும் கட்சியினர் பலர் எதிர்க்கட்சியின் பக்கம் வந்துள்ளதாக எதிர்க்கட்சி தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான தண்டாயுதபாணி சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இதனால் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டியுள்ளதுடன், அதற்கான கால அவகாசமாக எதிர்வரும் 20ஆம் திகதி வரை சபையை ஒத்திவைக்குமாறு தண்டாயுதபாணி கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கோரிக்கையை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் குழுத் தலைவர் எல்.எம். ஜெமிலும் வழிமொழிந்தார்.

இதனைத் தொடர்ந்து சில உறுப்பினர்கள உரையாற்றியதைத் தொடர்ந்து, சபை நடவடிக்கைகளை எதிர்வரும் 20ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாகவும், கிழக்கு மாகாண சபையின் வரவு செலவுத் திட்டத்தை அன்றைய தினம் புதிய அரசாங்கம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் ஆரியவதி கலபதி தெரிவித்தார்.

அத்துடன், கிழக்கு மாகாணசபையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கான சம்பளங்கள் வழங்கப்பட வேண்டியுள்ளதால், இந்த நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறும் அவர் கோரிக்கை விடுத்தார். (செ-11)

# பசுபதிப்பிள்ளை விபத்தில் காயம்

(கிளிநொச்சி)

வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை நேற்று விபத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக நேற்று மாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற விபத்திலே அவர் படுகாயமடைந்துள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்காக திரும்பிய போது பின்னே வந்த வாகனம் அவர் மீது மோதியதிலேயே படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த அவர், கிளிநொச்சி வைத்தியசாலையில் தீவிரசிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(செ-4-277)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

இலவச ஆங்கில கற்கைநெறி வகுப்புகள் (3 Months)

பாடசாலை செல்வோர், பாடசாலை விட்டு விலகியோர், தொழில் புரிவோர் இணைந்து கொள்ளலாம்.

ஆரம்பம் : February 2015
பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு :-
NALTC
116, Adiyapatham Road,
Thirunelvely, Jaffna.
Tel : 021 222 7560
(சி-9816)

உடனடி தொழில்வாய்ப்பு

எதிர்காலத்தில் நிரந்தர தொழில்வாய்ப்பினை பெற வேண்டுமா?
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/டொபி/பிஸ்கட்/டிபிடிபி/கிளவுஸ்/பால்மா/சோயா... போன்ற பல தொழிற்சாலைகளில் உற்பத்தி/உதவியாளர்/லேபல்/பொதியிடல்/களஞ்சியப் பிரிவுகளுக்கு 18-50 வயது ஆண் பெண் உடனடியாகத் தேவை.
சம்பளம் 18,000/= 32,000/= (நண்பர்கள்& குழுக்கள், தம்பதியர் ஒரே தொழிற்சாலையில்)
உணவு, தங்குமிட வசதியுடன் வருகை அன்றே வேலை

தொடர்புக்கு 0776838231/0771116770
(C-9812)

# மானிப்பாய் கோவில்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகைமையுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி: கணக்காளர்
சம்பள குறி இல. 104/10
சம்பள அளவுத் திட்டம்: 10700-120×10-130×10-13200
(66/2006 இன்படி)

(அ)

கூட்டுறவுப் பணியாளர் 11ஆவது சம்பளத் திட்ட கணக்கு பதிவியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுவினைஞர் பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12ஆவது சம்பளத் திட்டகணக்கு பதவியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ)

ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன இறுதியாண்டு பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அல்ல்து கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்டப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றின் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ)

கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திர சித்தி/ கூட்டுறவுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 04 ஆண்டுகால அனுபவம். அல்லது க.பொ.த. உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

மேற்படி பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு விண்ணப்பங்கள் யாவும் 28.01.2015 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பொதுமுகாமையாளர் ப.நோ.கூ.சங்கம், மானிப்பாய் என்ற முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அனுப்பப்படும் தபால் உறையின் இடது மூலையில் கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடல் வேண்டும்.கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றிய பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அப்பணியாளர்கள் தங்கள் சங்கத்திற்கு ஊடாக விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்
கோவில்பற்று ப.நோ.கூ.சங்கம் (வ.து),
மானிப்பாய்.

2015.01.13

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
யாழ்ப்பாணம்

# வருடாந்த பொதுக் கூட்டம்

காலம்: 01.02.2015 ஞாயிற்றுக்கிழமை
காலை 9 மணி
இடம்: கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

கல்லூரியின் அனைத்துப் பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் கல்லூரி பழைய மாணவர் சங்க காரியாலய அறையில் 23.01.2015க்கு முன்பதாகச் சமர்ப்பிக்கவும்.

கு.கௌதமன்
செயலாளர்

(C-9814)

# பன்னிரண்டாம் ஆண்டு பக்தி மலர் காணிக்கை



திருவேரகம், அல்லாரை, மீசாலை

## திருமதி தம்பு செல்லமுத்து (தம்புரீச்சர்)

(ஓய்வுபெற்ற கனிஸ்ட அதிபர், யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்)

திதி - 13.01.2015

பிறப்பு 29.04.1940
இறப்பு 26.12.2002

அன்பின் பிறப்பிடமாய்
அமைதியின் திருவுருவாய்
பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து
இணையில்லா வாழ்வை எமக்களித்து
இன்று நீங்கள் எங்களுடன் இல்லை
என்றாலும்......
உங்கள் எண்ணங்களை சுமந்து
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை, உறவுகள்

(9133)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் குற்றச்சாட்டுக்கள் நிரூபணம்; வல்வெட்டித்துறை நகரசபை கலைப்பு

## புதிய நிர்வாகம் விரைவில் தெரிவாகும்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வல்வெட்டித்துறை நகர சபையின் நிர்வாகம் கலைக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபை கலைக்கப்பட்டுள்ளதான வர்த்தமானி அறிவித்தலினை உள்ளூராட்சி அமைச்சர் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வல்வெட்டித்துறை நகரசபையின் தலைவராக அ.அனந்தராஜ் இருந்து வந்துள்ளார்.

இவரின் தலைமையின் கீழான நிர்வாகத்தில் பல்வேறு செயற்றிட்டங்களில் ஊழல்கள் இடம்பெற்றதாக நகர சபையின் உபதலைவர் சதீஸ் உட்பட பல உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டி வந்தனர்.

குறிப்பாக நெல்சிப் திட்டம், இறைச்சிக்கடை கேள்விக்கோரல் என்பவற்றில் வல்வெட்டித்துறை நகர சபையின் முன்னைய தலைவர் அனந்தராஜ் பெரும் மோசடியில் ஈடுபட்டு வந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது.

இம்மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் விசாரணைக் குழுவொன்றினை நியமித்திருந்தார்.

இவ்விசாரணைக்குழு கடந்த பல மாதங்களாக விசாரணைகளை மேற்கொண்டு விசாரணையின் இறுதியறிக்கையினை முதலமைச்சரிடம் சமர்ப்பித்திருந்தது.

இம் மோசடி விசாரணை அறிக்கையில் நகர சபைத் தலைவர் மோசடியில் ஈடுபட்டமை உறுதி செய்யப்பட்டிருந்தது. இவ் அறிக்கையின் பிரகாரம் வல்வெட்டித்துறை நகர சபையினை வடமாகாண முதலமைச்சர் கலைத்து அதனை மத்திய அரசிற்கும் கடிதம் மூலம் தெரியப்படுத்தி இருந்தார்.


இந்நிலையில் நகர சபை கலைக்கப்பட்டதாக வர்த்தமானி அறிவித்தலை உள்ளூராட்சி அமைச்சு கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசாவிடம் கேட்ட போது, கடந்த ஒரு வருடகாலமாக செயலிழந்து போயுள்ள வல்வெட்டித்துறை நகர சபை மீளவும் செயற்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது ஜனாதிபதி தேர்தல் முடிவுற்றுள்ள நிலையில் தேர்தல் ஆணையாளரின் அறிவித்தல் கிடைத்தவுடன் நகர சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படும் என்றார் அவர்.

இதேவேளை வல்வெட்டித்துறை நகர சபையின் புதிய தலைவராக தமிழரசுக் கட்சியும் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான எஸ்.குலநாயகம் தெரிவு செய்யப்படலாம் என நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-4)

# செந்தில் தொண்டமான் நீதிமன்றில் சரண்!



(கொழும்பு)

தபால் ஊழியரை தாக்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் நேற்றுக் காலை பண்டாரவளை நீதிமன்றில் சரணடைந்துள்ளார்.

சட்டத்தரணி ஒருவர் ஊடாக அவர் நீதிமன்றில் சரணடைந்ததாக எல்ல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அத தெரணவிடம் தெரிவித்தார்.


செந்தில் தொண்டமான் தற்போது நீதிமன்றில் உள்ளதாகவும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்ல -நியூபேர்க் தோட்டத்தில் வாக்காளர் அட்டை உள்ளிட்ட அஞ்சல் விநியோகத்தில் ஈடுபட்டு வீடு திரும்பிய எல்ல தபால் ஊழியர் ஞானசேகரன் மீது செந்தில் தொண்டமான் தாக்குதல் நடத்தினார்.

அதனை அடுத்து எல்ல பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் பேரில் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு பண்டாரவளை நீதிமன்றம் செந்தில் தொண்டமானுக்கு பிடியாணை பிறப்பித்தது.

இந்நிலையில் செந்தில் தொண்டமான் நேற்றுக் காலை நீதிமன்றில் ஆஜராகியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்து அரசுடன் ஒட்டிக்கொண்டிருந்த தொண்டமானை கைது செய்யுமாறு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்த போதும் நேற்று வரை அவர் தலைமறைவாக இருந்து வந்தார். இந்த நிலையில் நேற்று நீதிமன்றில் சரணடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




# சைவப்புலவர் தேர்வு வழிகாட்டல் விரிவுரைகள்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் இளம் சைவப்புலவர், சைவப்புலவர் வழிகாட்டல் விரிவுரை வகுப்புக்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளன.

சைவப்புலவர், இளம் சைவப்புலவர் தேர்வுகளுக்கு விண்ணப்பித்தோர் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது. மேலதிக விபரங்களுக்கு சைவப்புலவர் செ.கந்த சத்தியதாசனின் தொலைபேசி இலக்கமான 077 613 1176 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும். (இ

# இணைபவர்களுக்கு அமைச்சர் பதவியா?

## ஐ.தே.கவிலிருந்து விலக நேரிடும் ஹரின் எச்சரிக்கை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு தெரிவித்து தற்போது அரசில் இணைந்து வரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டால் 24 மணிநேரத்தில் ஐ.தே. கட்சியின் அனைத்து பதவிகளில் இருந்து விலக போவதாக ஊவா மாகாண எதிர்க்கட்சித் தலைவர் ஹரின் பெர்னாண்டோ திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். இதனடிப்படையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சஜின்வாஸ் குணவர்தன, விநாயகமூர்த்தி முரளிதரன், உதித்த லொக்குபண்டார, அனுர விதானகமகே ஆகியோருக்கு அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டால் விலக போவதாக ஹரின் பெர்னாண்டோ அறிவித்துள்ளார்.

இதேவேளை மகிந்த அரசில் இருந்தவர்களுக்கு அமைச்சுப் பதவி கொடுப்பதில் மைத்திரி அரசாங்கம் பின்னடித்து வருவதாகவும் அவர்களுக்கு சாதாரண பதவிகளையே வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (இ-5)

# இராசி பலன்

13.01.2015

(மார்கழி 29, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு

அட்டமி பின்னிரவு 12.48 மணிவரை

சித்திரை பின்னிரவு 3.42 மணிவரை

இராகுகாலம் 3.33-5.03 மணிவரை

சுபநேரம் 11.03-12.33 மணிவரை

வளவன்

**மீனம்:** காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்புமாக அமையும், தொழில் ரீதியான பயணங்களின் போது கூடுதல் கவனம் தேவை, வரவும் செலவும் சமமாகும் நாள்.

**மேடம்:** இனிமையான சம்பவங்கள் இடம்பெறலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**இடபம்:** தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும், உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள்.

**கும்பம்:** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், உடல் நலம் சீராகும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், தொல்லை கொடுத்த சிலரே உதவ முன்வரலாம், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், மகிழ்ச்சியான பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வருமானம் திருப்திகரமானதாக அமையும், சான்றோர் களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள்.

**சிம்மம்:** உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு:** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட முற்படுவீர்கள்.

**துலாம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது, சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**கன்னி:** சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், தொழில் ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 123

-மூலாதாரச் சக்கரம்-
-துக்கஹரணா தியானம்-

இந்த மூலாதார சக்கரம் முதுகுத் தண்டின் அடியில் இருக்கிறது. சமஸ்கிருதத்தில் மூலாதாரா என்றால் இருப்புத் தன்மையின் மூலமும் அடிப்படையும் என்று பொருள். மூலா என்றால் மூலம். ஆதாரா என்றால் அடிப்படை. இந்தச் சக்கரம் கட்டுப்பாடற்ற கனவுகளாலும் கற்பனைகளாலும் பூட்டப்படுகிறது. கனவுகளை விட்டுவிட்டு நிஜத்தை வரவேற்பதன் மூலம் இந்தச் சக்கரத்தை மலரச் செய்ய முடியும். தியான முறை துக்கஹரணா தியானம் -குலார்ணவ தந்திரத்திலிருந்து எடுக்கப்பட்டது. மூலாதாரா சக்கரம் காமம், கட்டுப்பாடற்ற கனவுகள், கற்பனைகள் ஆகியவற்றுடன் தொடர்புடையது.

மிகவும் அதிகமாக பேசப்படும், எண்ணப்படும், எழுதப்படும் விடயம் காமம். மிகவும் தவறாகப் புரிந்து கொள்ளப்படும். தவறாக விளக்கப்படும் குழப்பமான விடயமும் காமம்தான்.

ஒன்று நாம் அதைத் தவிர்க்க முயற்சி செய்கிறோம். அல்லது அதில் தீவிரமாக ஈடுபட முயற்சி செய்கிறோம். காமம் நமது விழிப்பற்ற ஆழமாக புதைக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பத்திலிருந்தே நமக்குத் காமத்தைப் பற்றி உண்மையைத் தெளிவுபடுத்துபவர் யாருமில்லை. ஏனைய எந்த விடயத்தையும் விட தெளிவு படுத்தப்பட வேண்டிய தேவை காமத்திற்கு மிகவும் அதிகம். அது விழிப்புணர்வின் ஒளியில் விளக்கப்பட வேண்டும். நமது தற்போதையநிலை, மையிருட்டில் இரவில் ஒரு காட்டில் நடந்து செல்லும் மனிதனை ஒத்தது. எங்காவது ஒரு பெரிய பள்ளம் தோண்டப்பட்டு வைக்கப்பட்டிருக்கலாம். இந்த விடயத்தைத் தவிர்க்க முயற்சி செய்யும் மனிதன் முழு விழிப் புணர்வற்ற நிலையில் இருக்கிறான். அவனுக்குப் பள்ளம் எங்கிருக்கிறதென்று கூடத் தெரியாது. பிறகு அவனால் எப்படி அதை தவிர்க்க முடியும். அதில் ஈடுபடும் மனிதனுக்குப் பள்ளம் எங்கு இருக்கிறது என்பது தெரியும். ஆனால் அவனுக்கு அதில் நேராக குதிப்பதைத் தவிர வேறெந்த வழியும் தெரியாது. இதில் ஏதாவது ஒன்று தீர்வாக இருக்க முடியுமா? என்ன செய்வது.


ஒருவனுக்குப் பள்ளம் எங்கிருக்கிறதென்பது தெரிய வேண்டும். அதைச் சுற்றிச் சரியான பாதையிலும் செல்ல வேண்டும்.

காமம் என்ற விடயமே எப்பொழுதும் பெருகித் தரை விரிப்புக்கடியில் தள்ளப்பட்டு விடுகிறது. அது சமூகப் பழக்க வழக்கங்களால் தடை செய்யப்பட்ட ஒரு விடயம்.

பெற்றோர்கள் அதைப் பற்றி வெளிப்படையாகக் குழந்தைகளுடன் விவாதிப்பதில்லை. முதலில் அதனுள் இருக்கும் உண்மைகள் பற்றி பெற்றோர்களுக்கே தெரிவதில்லை. எந்த விடயமாயினும் அதைப்பற்றி அறிந்த நிபுணர்களிடம்தான் கேட்க வேண்டும். இல்லையெனில் நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ளத் தவறிவிடுவீர்கள். சரியாகப் புரிந்து கொள்ளத் தவறும் பொழுது தவறாக புரிந்து கொண்டுவிடுவீர்கள்.

ஒரு சின்னக் கதை...

## மனக்கோட்டைகளைத் தகர்த்தல்!



ஒரு பெண்ணிற்கு அவளது பையனின் பள்ளி ஆசிரியரிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அந்த ஆசிரியர் பையனால் கரும்பலகையை தெளிவாக பார்க்க முடியாததால் எழுதும் பொழுது தவறுகள் செய்வதாக எழுதியிருந்தார். அந்தப் பெண்மணி உடனே அவளது மகனை ஒரு கண்டாக்டரிடம் அழைத்துச் சென்றாள். அந்தப் பையனைப் பரிசோதித்த டாக்டர், பரிந்துரை செய்திருந்தது; முடிவெட்டுதல்.

(சிரிப்பு)

இதைக் கண்டு நாம் சிரிக்கிறோம்; ஆனால், நான் சொல்கிறேன், பல சமயங்களில் நாமும் இதைத்தான் செய்து கொண்டிருக்கிறோம். முதல் தடவையிலேயே நீங்கள் சரியான மனிதரிடம் சென்றுவிட்டால் உங்களுக்குக் தீர்வு கிடைத்துவிடும். இல்லாவிடில் பெயரளவில் நிபுணர்கள் என்று சொல்லப்படுபவர்களின் பயனற்ற ஆலோசனைகளையெல்லாம் பின்பற்றிக் கொண்டு ஒரே வட்டத்திலேயே மீண்டும் சுற்றிச் சுற்றி வந்து கொண்டு உங்கள் வாழ்க்கையை வீணடித்துக் கொண்டிருப்பீர்கள்.

அதைவிட மோசமானது, நீங்கள் இதே ஆலோசனைகளை எதிர்கால சந்ததியினருக்கும் வழங்கிக் கொண்டிருப்பது, இவ்வாறுதான் சம்பிரதாயங்கள் ஆரம்பிக்கின்றன. ஒரு முறை சம்பிரதாயங்களை அனுமதித்து விட்டால் பிறகு அதை உடைத்துக் கொண்டு வெளியே வருவது மிகவும் கடினமான காரியமாகிவிடும்; ஏனெனில், சம்பிரதாயங்கள் காலப்போக்கில் உண்மையாகிவிடும்.

ஒரு குரு தோன்றும்பொழுது, உங்களுக்குச் செய்யப்பட்டதையெல்லாம் திருப்புவதே, அவரது முதல் வேலையாகிறது. அதன் பிறகு, அவரால் உங்களுக்குள் ஊடுருவிச் செல்ல முடியும்!

(தொடரும்)


பரமஹம்ஸ சுவாமி

# அதிசய உலகம்

### தலையை கிறுகிறுக்க வைக்கும் கண்ணாடிப் பாலம்

விடுமுறையை கழிக்க பல கண்டங்களை கடந்து செல்லும் சுற்றுலா பயணிகளை மகிழ்விப்பதற்காக பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவது வழக்கம். இதற்காக புதிய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில், அவர்களின் தலையை கிறுகிறுக்க வைக்கும் காட்சி அடங்கிய கண்ணாடியிலான ஒரு பாலத்தை லண்டன் அரசாங்கம் அமைத்துள்ளது.

குறித்த பாலம் 120 வருடங்கள் பழமையானதாயினும் அதனை புதுப்பிக்கும் முகமாக அதே பாலத்தில் சிறிய தூரத்துக்கு கண்ணாடி பொருத்தப்பட்டுள்ளது. 36 அடி நீளத்தையும் 6 அடி அகலத்தையும் கொண்டுள்ள நடைபாதையானது, தற்போது மக்களின் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டுள்ளது.



கிட்டத்தட்ட லண்டனில் உள்ள தோமஸ் நதிக்கும் மேலே 140 அடி உயரத்துக்கு பாலத்தின் உயர்மட்ட நடைபாதை முழுவதும் நீக்கும் படியாக இக்கண்ணாடி நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது.


லண்டன் வாழ்கையில் எப்போதுமே கண்டிராத இப்பாலமானது 20 வலுவான தொகுதி கண்ணாடிகளையும் கொண்டுஅமைக்கப்பட்டுள்ளது. ஒரு கண்ணாடி 1,000 பவுண்ட் எடையைகொண்டுள்ளது. இந்தபாலத்தில் நடப்பவர்கள் கீழே பார்த்தார்களாயின் பறப்பது போன்றதொரு உணர்ச்சி ஏற்படும். இதனுள் பிரவேசிப்பதற்கான கட்டணமும் அறவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# சமைப்போம் சுவைப்போம்

## பீட்ரூட் சூப்

**தேவையான பொருட்கள்:-**

பீட்ரூட் துருவல் -ஒரு கப்
கேரட் துருவல் - அரை கப்
வெண்ணெய்- ஒரு டேபிள்ஸ்பூன்
பூண்டு - 2 பல்
(பொடியாக நறுக்கவும்)
வெங்காயம் - ஒன்று
(பொடியாக நறுக்கவும்)
சீரகம் - ஒரு டீஸ்பூன்
(வறுத்துப் பொடிக்கவும்)
சோயா சாஸ் - ஒரு டேபிள்ஸ்பூன்
உப்பு, மிளகுத்தூள் - தேவையான அளவு



**செய்முறை**

ஒரு பாத்திரத்தில் வெண்ணெயை சூடாக்கி, நறுக்கிய பூண்டு, வெங்காயம், சீரகம் சேர்த்து நன்கு வதக்கவும். இதனுடன் துருவிய பீட்ரூட், கேரட் சேர்த்து, பாதி வேகும் வரை வதக்கி, தண்ணீர் சேர்த்து வேகும் வரை கொதிக்கவிடவும். பிறகு, இதை ஆற வைத்து வடிகட்டி- உப்பு, மிளகுத்தூள், சோயா சாஸ் சேர்த்து பரிமாறவும். விருப்பப்பட்டால் கிரீம் சேர்த்துப் பரிமாறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் வெறுப்பா ?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்.

காலை 9.00 – பி.ப 1.00

மதச்சார்பற்றது

**கைகொடுக்கும் நண்பர்கள்**

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

021 222 8117, 0779008776 (இ-9787)


## சஜின்வாஸ் ஆதரவாம்

(கொழும்பு)

காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இல்லத்துக்கு நேற்றுக் காலை சென்று தனது ஆதரவை தெரிவித்துள்ளதாக தெரிய வருகின்றது. (இ-5)


St John Ambulance SRI LANKA

## சென்ஜோண் அம்புலன்ஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு

சென்ஜோண் அம்புலன்சில் பின்வரும் சேவைகளுக்கு ஆட்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளார்கள்.

- அம்புலன்ஸ் சாரதி ("A" ரக அனுமதிப்பத்திரம்)
- எழுதுவினைஞர் (முழுமையான கணனி அறிவு உள்ளவர்கள்)
- முதலுதவி விரிவுரையாளர்
- நோயாளர் பராமரிப்புத் தொண்டர்கள் (ஆண் தொண்டர்களுக்கு நாள் ஒன்றிற்கு 1400/= வழங்கப்படும்)

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான நேர்முகத் தேர்வு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள சென்ஜோண் அம்புலன்ஸ் காரியாலயத்தில் 16.01.2015 வெள்ளிக்கிழமை பி.ப 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு அம்புலன்ஸ் சேவை தொடர்பு இலக்கமான 021 321 4444 உடன் தொடர்பு கொள்ளவும்.

மாவட்ட ஆணையாளர், சென்ஜோண் அம்புலன்ஸ், யாழ்.மாவட்டம். (913)



## பாராட்டி வாழ்த்துகிறோம்



வி.திருவாங்கன் 160



இ.நந்தீசன் 156

எமது பாடசாலையில் 2014 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் அவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களையும் வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:- மு/ஒலுமடு தமிழ் வித்தியாலயம், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள். (9128)



முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடாத்தும்

## முல்லைக்கிண்ணம் 2015

Sponsored by UR Friend Foundation

முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம்
UR Friend Foundation
ஆதரவில் நடாத்தும் மாபெரும்

**கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி**

எதிர்வரும்
23,24,25 ம் திகதிகளில்
மு/மல்லாவி மத்திய கல்லூரி
கூடைப்பந்தாட்டத் திடலில்
வடமாகாண ரீதியாக, ஆண்கள்
அணிகளுக்கிடையே நடாத்தப்படவுள்ளது.
இச்சுற்றுப்போட்டியில்
பங்குபற்ற விரும்பும் அணிகள்
தங்கள் அணி விபரங்களை 18/01/2015 ற்கு
முன்னர் எமது கூடைப்பந்தாட்டச் சங்கத்திற்கு
கிடைக்கும் வண்ணம் அனுப்பிவைக்குமாறு
கேட்கப்படுகின்றீர்கள்.

போட்டி ஒழுங்குகள் 18/01/2015 மாலை 4.00 மணிக்கு மு/மல்லாவி மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெறும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
077 519 3669 (9129)



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நடாத்தும்

FIRST **Jaffna Marathon 2015** 31 Jan 2015

Sponsored by UR Friend Foundation

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின்
125வது ஆண்டுவிழாவை முன்னிட்டு
UR Friend Foundation
அனுசரணையில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
நடாத்தும் மாபெரும்

## Jaffna Marathon

எதிர்வரும்
Free ஜனவரி 31ம் திகதி சனிக்கிழமை
நடைபெறவுள்ளது.
பங்குபற்ற விரும்புபவர்கள் (இருபாலரும்)
கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு
விண்ணப்பப்படிவங்களைப்
பெற்று 25 .01.2015 ற்கு முன்னர்
பங்குபற்றுவதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

- முதல் 10 இடங்களை பெறுபவர்களுக்கு பெறுமதியான பணப்பரிசில்கள் வழங்கப்படும்.
- குறித்த நேரத்தில் ஓடி முடிக்கும் அனைவருக்கும் பதக்கம் வழங்கப்படும்.
- ஓட்டத் தூரத்தை நிறைவு செய்யும் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்க அலுவலகம்
யாழ்ப்பாணம்.

jaffnamarathon@gmail.com
021 320 2500 (9130)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 13 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L (டுபாய்)<br>தொ.இ: B/75 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 35<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA/ பொது முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: G/98 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 39 செவ் 2 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில் (அமெரிக்கா PR)<br>தொ.இ: B/81 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 50 செவ் 7 இல்<br>உயரம்: 4'10"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>தொ.இ: G/122 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 23 செவ் 1 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: O/L/ (மலேசியா)<br>தொ.இ: B/83 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: காரத்திகை<br>கி.பா: 40 செவ் 1 இல்<br>உயரம்: 4'10"<br>தகைமை/தொழில்: நூலகர்<br>தொ.இ: G/123 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 16 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: 10 தரம்/ சொந்த தொழில்<br>தொ.இ: B/90 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 35 1/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA/ அரச தொழில்<br>தொ.இ: G/127 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


# அனுமதியின்றி பனைகள் தறித்த 3 சந்தேக நபர்கள் கைதாகினர்

தென்மராட்சி கொடிகாமம், இயற்றாளை பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி பனை மரச்சிலாகைகளை அரிந்துகொண்டிருந்த மூன்று சந்தேகநபர்களை கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்ததாக கொடிகாமப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 148 பனை மரச்சிலாகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில் அனுமதிப்பத்திரமின்றி 10 பனை மரங்களை தறித்து அவற்றை சிலாகைகளாக்கியமை தெரியவந்துள்ளது.

யுத்தத்தால் வடபகுதியில் பல பனை மரங்கள் அழிவடைந்துள்ளன. பனை அபிவிருத்திச் சபை, வடமாகாண விவசாய அமைச்சு மற்றும் பொது அமைப்புக்கள் ஆகியன பனை மரங்களை மீண்டும் உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

மீள் உருவாக்கத்தில் இருக்கின்ற பனை மரங்களை பாதுகாத்து புதிய பனை மரங்களை வளர்த்தெடுத்தல் என்னும் தொனிப் பொருளில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-29)




# தொண்டைமானாறு அக்கரை பகுதியில் புதிய படை முகாம் அமைக்க முயற்சி

## தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

**கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தொண்டைமானாறு அக்கரையில் புதிய படைமுகாம் ஒன்றினை அமைக்கும் முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

நாட்டின் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்று மறுநாளே இப்படை முகாம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன எனவும் அம்மக்கள் தெரிவிக்கின்றனர். முன்னர் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்த குறித்த பகுதியில் தற்காலிக படை முகாம் ஒன்று காணப்பட்டிருந்தது.

தற்போது தொண்டைமானாறு ஆற்றின் கரையோரப்பகுதியான அக்கரைப்பகுதியில் குறித்த இராணுவ முகாம் அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்காக அங்கு கட்டைகள் அடிக்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டு படைமுகாமை அமைப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்றைய தினம் குறித்த பகுதியில் மண்ணகழும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர்.

இராணுவத்தினர் மண்ணகழ்வில் ஈடுபடுவதனால் மண்ணரிப்பு அபாயம் ஏற்பட வாய்ப்புள்ளது எனவும் சந்நிதி முருகன் கோவில் அருகாமையில் உள்ளதனால் படைமுகாம் அங்கு அமைவது பொருத்தமற்றது எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் புதிதாக பொறுப்பேற்றுள்ள புதிய அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அம்மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும்தொண்டைமானாறிலுள்ள படைமுகாம்களையும் அகற்றுவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-4)




## திரையிடப்படுகிறது 'தமிழ் பசங்க'

(யாழ்ப்பாணம்)

**தமிழ் பசங்க** என்ற திரைப்படம் நாளை மறுதினம் 15 ஆம் திகதி ஆனைக்கோட்டை வெஸ்லி திரையரங்கில் பி.ப.3 மணிக்கு திரையிடப்படவுள்ளது.

ஆர். பிரதீப் இயக்கத்திலும் கதை உருவாக்கத்திலும் வெளியாகும் இத்திரைப்படம் எம் வேல்ட் இன் தயாரிப்பாகும்.

ராஜிஸ்ரன், அகில், விமல்ராஜ், அசாத், சயூகான், மகா, பிரியா மற்றும் பலரின் நடிப்பில் இத்திரைப்படம் வெளியாகிறது.

ஜெனார்த்திக் மற்றும் ஏ.வி. டனிஸ் ஆகியோர் இசையமைத்துள்ளனர்.

நீண்டகால இடைவெளியின் பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகின்ற திரைப்படம் இது வென்பது குறிப்பிப்பிடத்தக்கது. (இ

# எமது விடுதலை வேட்கையை அழித்துள்ள அதர்மவாதிகள் தண்டனை பெற்றுள்ளனர்

## சிறிதரன் எம்.பி.தெரிவிப்பு

(மானிப்பாய்)

தர்மத்தின் விரோதிகள் இம் மண்ணுக்கே பாரமானவர்கள். தர்மத்தின் வழி நின்று போராடிய எமது விடுதலை வேட்கையை அழித்த அதர்மவாதிகள் வாழ்ந்ததாக வரலாறு இல்லை. இவர்கள் நீதி தேவதையின் முன் தண்டிக்கப்பட்டுள்ளனர் என கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், சுதந்திரபுரம் வயாவிளான் பகுதி மக்களுக்கு பசுமைத்தேசத்தின் கீழ் விதை தானியங்களை வழங்கிவைத்து கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் தங்களின் ஜென்ம கொடுங்கோலாட்சியாளனுக்கு தக்கநேரத்தில் தக்க பதிலடியை வழங்கியிருக்கிறார்கள்.

காலம் காலமாக ஆட்சிப்பீடமேறிய சிங்களத்தலைமைகள் எம்மின சுதந்திர வேட்கையை அழித்தொழிப்பதிலேதான் கங்கணம் கட்டி நின்றார்களே தவிர எம்மினத்தின் விடுதலை பற்றி சிந்திக்கத்தவறிவிட்டனர்.

இதற்கான பதிலை மக்கள் வழங்கியிருக்கிறார்கள். இதற்கேற்றால் போல தக்க நீதியை தமிழர்களுக்கு தற்போதுள்ள மைத்திரி அரசாங்கம் வழங்கவேண்டும என்றார்.



இந்நிகழ்வில் தமிழரசுக்கட்சியின் புன்னாலைக்கட்டுவன் கிளைக்குழுத்தலைவர் லோகன், சுதந்திரபுர கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர் சிங்கம் நவம், விண்மீன் விளையாட்டுக்கழகத் தலைவர் சிறீவண்ணம் எனப்பெருமளவானோர் கலந்து கொண்டனர். (இ-23)

# பொங்கல் தின சிறப்புப் பட்டிமன்றம்

(மானிப்பாய்)

தென்மராட்சி இளைஞர் இலக்கிய மன்றத்தினரின் ஏற்பாட்டில் பொங்கல் தின சிறப்புப் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது,

இந் நிகழ்வு பொங்கல் தினமான நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் மாலை 3 மணி முதல் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி இளைஞர் இலக்கிய மன்றத்தினரின் தலைவர் இ.ஷாமிலன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் மங்கல விளக்கினை மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய முகாமையாளர் இ.இராமலிங்கம் ஏற்றுவார்.

கடவுள் வாழ்த்தை தொடர்ந்து சிறப்புப் பட்டிமன்றம் இடம்பெறும்.

சண்டிலிப்பாய் பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர் வரணியூர் வே.சிவராஜா தலைமையில் "தமிழர் தம் பண்பாட்டை இன்றும் தாங்குவது மங்காத பழைமையா? மாறி வரும் புதுமையா? என்னும் தலைப்பில் இடம்பெறவுள்ளது. (இ-23)





வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரனின் கோரிக்கையின் பிரகாரம் சங்கானை விழிசுட்டிப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வட மாகாண சபையின் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் கடந்த சனிக்கிழமை உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.இந் நிகழ்வின் போது 50 இற்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இந்த உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதம நீதியரசருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ்"க்கு எதிராக உயர் நீதிமன்றத்துக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றத்துக்கு முன்பாகவும் நீதியமைச்சுக்கு முன்பாகவும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுகின்றமையால் பிரதம நீதியரசர் உயர் நீதிமன்றுக்கு நேற்று திங்கட்கிழமை செல்லவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை, 44 ஆவது பிரதம நீதியரசருக்கு 48மணிநேர காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அப்பதவியிலிருந்து அவரை நீக்கிவிட்டு முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவை நியமிக்குமாறும் கோரியுள்ளனர். (இ-5)

# தீவிரவாதத்துக்கு எதிரான பேரணியை வரவேற்கிறேன்

## பான் கீ மூன் தெரிவிப்பு

கடந்தவாரம் பாரீஸில் சார்லி ஹெப்டோ பத்திரிகை அலுவலகத்தில் நிகழ்ந்த தீவிரவாதத் தாக்குதலில் இறந்தவர்களின் நினைவாக நடத்தப்பட்ட பேரணியை தான் வரவேற்பதாகவும் இந்த உலகில் தீவிரவாதம் எங்கு தலைதூக்கினாலும் அதற்கெதிரான எதிர்ப்பை பதிவுசெய்தாக வேண்டும் என்றும் ஐ,நா,வின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

பாரீசில் பத்திரிகை அலுவலகத்திலும், கொஷார் சுப்பர் மார்க்கெட்டிலும் நடைபெற்ற தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அங்கு கொல்லப்பட்ட ஒரு பொலிஸ்காரரர் குடும்பத்தினருக்கும் இரங்கலைத் தெரிவித்து பிரான்ஸ் தலைநகரம் பாரீசில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாபெரும் பேரணி ஊர்வலம் நடைபெற்றது. உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன், ஜெர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்கல், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, பாலஸ்தீன ஜனாதிபதி முகமது அப்பாஸ், பிரான்ஸ் ஜனாதிபதி ஹோலாந்த் உட்பட 50இற்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதி நிதிகள் கலந்துகொண்ட



இப்பேரணியில் பொதுமக்கள் சுமார் 10 இலட்சம் பேர் பங்கேற்றனர்.

இப்பேரணியில் ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் சார்பாக தனது சிறப்புத் தூதர் ஸ்டாஃபான் டி மிஸ்தூராவை அனுப்பி வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மகிந்த ஆட்சியில் நடந்த ஊழல்கள் குறித்து மைத்திரியின் ஆட்சியில் விசாரணை நடக்கும்

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தின் போது பல்வேறு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட ஊழல் செயற்பாடுகள் தொடர்பில் மக்களை தெளிவூட்ட உத்தேசித்துள்ளதாக தெரிவிக்கும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க, ஊழல் செயற்பாட்டினை மேற்கொண்டவர்கள் எந்த ஒரு தரப்பினராக இருந்தாலும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.



ஜாதிக ஹெல உறுமயவினால் நியமிக்கப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்பு முன்னணி அமைப்பினால் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் அபிவிருத்தி என்ற போர்வையில் அரசில் அங்கத்துவம் பெற்றிருந்த அமைச்சர்கள் உட்பட அரச அதிகாரிகள் பல்வேறு ஊழல் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

முன்னைய அரசாங்கத்தில் அபிவிருத்தி என்ற போர்வையில் முன்னெடுக்கப்பட்ட உச்சக்கட்ட ஊழல் செயற்பாடுகள் காரணமாகவே இன்று எமது நாடு பொருளாதார வீழ்ச்சியின் கீழ் பாரிய கடன் சுமைக்கு ஆளாகி இருப்பதோடு மக்கள் அதிகளவான வாழ்க்கை சுமையை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வாறான ஒரு நிலையில் எமது புதிய அரசில் இவற்றுக்கான உரிய தீர்வை முன்வைக்க உத்தேசித்துள்ளதோடு ஊழல் மோசடிகள் தொடர்பில் உரிய தகவல்களை திரட்டி இதனுடன் தொடர்புடையவர்கள் எந்த தரப்பினராக இருப்பினும் எந்த ஒரு பதவியில் இருப்பினும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்.

எனவே, முன்னைய அரசின் ஆட்சி காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஊழல் மோசடிகள் தொடர்பில் எமக்கு இதுவரையான காலப் பகுதியில் பல்வேறு தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இது தொடர்பில் மேலும் தகவல்களை திரட்டும் முகமாக நாம் ஊழல் எதிர்ப்பு முன்னணி என்ற ஒரு அமைப்பினை உருவாக்கியுள்ளோம்.

அரசாங்கத்தினால் அரங்கேற்றப்பட்ட ஊழல் மோசடிகள் தொடர்பில் அறிந்த அனைத்து தரப்பினரும் எமது தொலைபேசி இலக்கமான 011-2884583 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு எமக்கு அறியதருவதோடு எமது மின் அஞ்சல் முகவரியான anticorruptionfront2@gmail.com (link sends e-mail) என்ற முகவரிக்கு உங்களுக்கு கிடைக்க பெற்ற தகவல்களை பதிவு செய்ய முடியும். இவ்வாறு தகவல்கள் தருபவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மீளிணக்கம், சர்வதேச உறவுகள் சுமுகமானதாக்கப்பட வேண்டும்

இன சமூகங்களிடையே மீளிணக்கம் மற்றும் சர்வதேச உறவுகள் சுமுகமானதாக்கப்பட வேண்டும் என ஈ.பி.ஆர்.எல். எப் .(பத்மநாபா) பொதுச் செயலாளர் த.ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

இலங்கையின் அண்மைய வரலாற்றில் மிக அமைதியான முறையில் நிகழ்ந்த தேர்தல் இது. தேர்தலை பாரிய வன்முறைகள் இல்லாது நடத்தி முடிப்பதில் ஆணையாளரின் தலைமையிலான அயராத முயற்சிகள் இங்கு குறித்துரைக்க வேண்டியன.

இலங்கையின் ஜனநாயக பாரம்பரியத்தை மீட்டெடுப்பதில் அவர் மிகச்சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளார்.

இலங்கையின் பல்லின சமூக பிரிவினரின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அவர்களுக்கு பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப். தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

நாட்டின் சகல தரப்பு மக்களதும் இந்த நம்பிக்கையை அவர் ஜனநாயக அரசியல் சக்திகளுடன் இணைந்து பாதுகாப்பார் என எதிர்பார்க்கிறோம்.

அதேபோல் முன்னாள் ஜனாதிபதிக்கு வாக்களித்த மக்களின் எதிர்பார்ப்புக்களையும் அவர் கரிசனைக் கெடுத்துக் கொள்வார் என நாம் எதிர்பார்க்கிறோம்.

விசேட அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் தீவிர சீர்திருத்தங்கள் மாற்றங்கள் செய்வதுடன் மக்கள் நலம் சார்ந்த ஆக்க பூர்வமான அபிவிருத்தி நடவடிக்கைகள் உறுதியுடன் முன்னெடுக்கப்பட வேண்டியிருக்கிறது.

இன சமூகங்களிடையே மீளிணக்கம் மற்றும் சர்வதேச உறவுகள் சுமுகமானதாக்கப்பட வேண்டும். இலங்கையின் கீர்த்தி வாய்ந்த இலவசக் கல்வி மற்றும் சுகாதார சேவைகள் உறுதியாக்கப்படுவதோடு மக்களின் குடியிருப்பு குடிநீர் பிரச்சினைகளுக்குதீர்வு காணப்பட வேண்டும். சுதந்திரமான சமூக அரசியல் செயற்பாடுகளுக்கான இடைவெளி அதிகரிக்கப்படவேண்டும்.

அடியாள் மற்றும் வன்முறை அரசியலுக்கு முடிவு காண வேண்டும். ஆடம்பரமற்ற மக்களுக்கு நெருக்கமான எளிமையான அரசியல் பாரம்பரியம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ

# பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளர் பஸ்நாயக்க கடமைகளை பொறுப்பேற்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்ட பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளர் பீ. எம். யு. டி. பஸ்நாயக்க நேற்று முன்தினம் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

சமய வழிபாடுகளைத் தொடர்ந்து தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட புதிய செயலாளர் பஸ்நாயக்க பாதுகாப்பு அமைச்சினதும் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளின் பிரதானிகள் மத்தியில் உரை நிகழ்த்தினார்.

தான் நிர்வாக சேவையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக எனக்கு அனுபவங்கள் உள்ளது. முப்படையினர் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் பயிற்சி நடவடிக்கைகள் தொடர்பாக தம்து கடமைகளை நிறைவேற்றுவதாகவும் புதிய கடமைகள் தொடர்பான நடவடிக்கைகளுக்காக சகலரினதும் ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது என்றும் அவர் அதன் போது வேண்டுகோள் விடுத்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கமின்மை ஏன் வருகிறது?

(சென்ற வார தொடர்ச்சி...)

நரம்புகள் ஓய்வில் இல்லை எனில, காற்பந்து விளையாடுவது போல ஒருவர் கனவு கண்டால், கனவு காண்பவர், அவருக்கு அருகில் படுத்திருப்பவரை காலால் எட்டி உதைக்க நேரிடும்.

அதிகாலைக் கனவு பலிக்கும், பகல் கனவு பலிக்காது என்ப தெல்லாம் வெறும் நம்பிக்கைகள் மட்டுமே.

**ஆழ்ந்த தூக்கம் அவசியம்**

மனிதர்கள் தூங்கும்போது, முதலில் உடலில் உள்ள தசைகள், நரம்புகள் ஓய்வெடுக்க ஆரம்பிக்கும். பின்னர்தான் ஆழ்ந்த தூக்கம் சாத்தியப்படும்.


ஆழ்ந்த தூக்கத்தில் கனவற்ற தூக்கம், கனவுத் தூக்கம் என இரு நிலைகள் உண்டு. ஒரு தூக்கத்தில் 90 நிமிடங்கள் முதல் 120 நிமிடங்கள் வரைதான் ஆழ்ந்த தூக்கம் இருக்கும்.

ஒருவர் எவ்வளவு மணிநேரம் தூங்கினாலும் ஆழ்ந்த தூக்கம் என்ற நிலையை அடையாவிட்டால், உடல் புத்துணர்ச்சி அடையாது. ஆழ்ந்த தூக்கத்தின் போது தான் மனிதர்களுக்கு வரும் கனவுகள் லேசாக நினைவில் இருக்கும்.

பொதுவாக விடியற்காலை 3.30 - 5.30 மணி அளவில் தான் ஆழ்நிலைத் தூக்கம் வரும.

**தூக்கத்தின்போது காலாட்டுவது ஏன்?**

தூங்கும்போது மூளையில் "டோபமைன்' என்ற சுரப்பி சரியாகச் சுரக்காத பட்சத்தில் சிலர் காலாட்டிக்கொண்டே இருப்பார்கள். தூங்கும் போது காலாட்டிக் கொண்டே இருப்பதால், தூங்கி எழுந்ததும் புத்துணர்ச்சி கிடைக்காது. சிலருக்குத் தூங்கும்போது



கால் உள்ளிழுத்துக் கொள்வது போன்ற உணர்வு இருக்கும். இது தூக்கத்தில் தடை ஏற்படுத்தும். நீரிழிவு நோயாளிகள், சிறுநீரகப் பாதிப்பு உள்ளவர்கள், இரத்தசோகை உள்ளவர்களுக்கு இந்த கால் அசைவுப் பிரச்சினை இருக்கும். கால் அசைவுக்கு என்ன காரணம் எனக் கண்டுபிடித்து அதற்கேற்ப சிகிச்சை பெற வேண்டும்.

கோப்பி,டீ அருந்துவதைத் தவிர்க்க வேண்டும்.

மாலை வேளைகளில் உள்ளங்காலில் தைலம்,எண்ணெய் தடவிக்கொள்ள வேண்டும்.

**குறட்டை தொந்தரவு**


நாம் சுவாசிக்கும் மூச்சுக்காற்று மூக்கு, வாய், தொண்டை வழியாக நுரையீரலைச் சென்றடைகிறது. தூங்கும்போது உடலில் உள்ள தசைப்பகுதிகள் தங்களது இயக்கத்தை நிறுத்திக் கொண்டு ஓய்வெடுக்க ஆரம்பிக்கும். அப்போது தொண்டை மற்றும் மூச்சுக்குழல் பகுதியில் உள்ள தசைகளும் தளர்ந்துவிடுகிறது. இதனால் சுவாசப்பாதையின் அளவு குறுகுவதால், ஒட்சிசன் நுரையீரலுக்குச் செல்வதில் சிறிய தடை ஏற்பட்டு நுரையீரலைச் சென்றடைகிறது. சுவாசப்பாதையில் ஏதேனும் அடைப்பு ஏற்படும்போது குறட்டைச் சத்தம் வருவதே பொதுவான காரணம்.

என்னென்ன காரணங்களால் குறட்டை வருகிறது?

- தூங்கும்போது சுவாசப் பகுதிகளில் தசைகள் சுருங்குவதால்
- முக எலும்புகள் மற்றும் தசை அமைப்புகள் மாற்றத்தின் காரணமாகவோ, முகத்தின் கீழ்த் தாடை உள்வாங்கியிருப்பதன் காரணமாகவோ குறட்டை வரலாம்.
- மல்லாந்து படுக்கும்போது நாககு உள்வாங்குவதன் காரணமாக குறட்டை வரக்கூடும்.
- சளியால் ஏற்படும் மூக்கடைப்பு, சைனஸ் தொந்தரவு, தொன்சில் எனப்படும் தொண்டைச் சதை வளர்ச்சி, பற்களில் கிருமி மற்றும் தைரொய்ட் பிரச்சினைகளாலும் குறட்டை வரலாம்.
- அதிக உடற்பருமன் உடையவர்கள், மது அருந்துபவர்களுக்கு குறட்டை வரலாம்.
- சில குழந்தைகளுக்கும் இந்தக் குறட்டைத் தொந்தரவு இருக்கும்.
- பெரும்பாலும் ஆண்களுக்குத் தான் குறட்டைச் சத்தம் வரும். எனினும் மாதவிடாய் கால கட்டத்துக்குப் பிறகு பெண்களுக்கும் வர வாய்ப்பு உள்ளது.

**தூக்கத்தில் மூச்சுத்திணறல் ஸ்லீப் ஆப்னியா (Sleep Apnea)**

தூக்கத்தின் போது சிலருக்கு மூச்சு நின்றுவிடக் கூடும். இதன் பெயர் தூக்கத்தில் மூச்சுத்திணறல் தூக்கத்தில் மூச்சுத்திணறலின் முக்கியமான அறிகுறி குறட்டை தான். தூக்கத்தில் மூச்சுத் திணற



லின் நோய் இருப்பவர்களுக்கு தூங்கும் போது திடீரென குறட்டைச் சத்தம் நின்றுவிட்டால், அது உயிருக்கே ஆபத்தாக முடியும்.

குறட்டை விடுகிற எல்லோருக்கும் தூக்கத்தில் மூச்சுத்திணறல் பாதிப்பு இருக்கும் எனச் சொல்ல முடியாது. சிலர் குறட்டை விடும்




போது குறட்டையின் சத்தம் திடீர் திடீர் என அதிகரித்துக் குறையும். சில சமயங்களில் சத்தமே நின்று விடும். இந்த அறிகுறிகள் இருந்தால், அவர் மூச்சுத்திணறல் பாதிப்பில் இருக்கிறார் என அறியலாம். இவர்களுக்குத் திடீரெனக் குறட்டைச் சத்தம் குறையும்போது, ஒட்சிசன் நுரையீரலுக்குச் செல்வது தடைப்பட்டு மரணம் நேரலாம். தூங்கும் போது சி - பாப் (C - Pap) என்ற கருவியை மூக்கு, வாயில் மாஸ்க் போல் மாட்டிக் கொண்டு தூங்குவதே இதற்குத் தீர்வு.

தூக்கத்தில் மூச்சுத்திணறல் பாதிப்பு இருப்பவர்களுக்கு, காலை எழும்போது நாக்கு வறண்டு தொண்டையுடன் ஒட்டிக்கொள்ளும். உடல் புத்துணர்ச்சியாக இருக்காது.

**மாணவர்களுக்கு தூக்கம் அவசியம**

மாணவர்களுக்கு தினமும் ஒன்பது மணி நேரத் தூக்கம் அவசியம். பலர் பாடசாலை முடிந்ததும் கோச்சிங் கிளாஸ், டியூஷன் என ஒன்பது மணிக்கு மேல்தான் வீட்டுக்கே வருகிறார்கள். பின்னர், இரவு நீண்ட நேரம் கண்விழித்துப் படிக்கிறார்கள். போதுமான அளவு தூங்காமல், அதிகாலை எழுந்து மீண்டும் பாடசாலைககுச் செல்கிறார்கள்.

மாணவர்கள் நன்றாகத் தூங்கவில்லை எனில், வகுப்பில் தூக்கம் வரும். பாடம் புரிவதில் சிக்கல் மற்றும் தேர்வு எழுத சோம்பேறித்தனம் அதிகரிக்கும். எனவே, மாணவர்களைப் 'படி... படி" என வற்புறுத்தி அவர்கள் தூங்கும் நேரத்தைக் குறைக்கக் கூடாது.

மாணவர்கள் நன்றாக உறங்கி எழுந்தால்தான், படிப்பில் கவனம் செலுத்த முடியும். மாணவர்கள் எவ்வளவு நேரம் படிக்கிறாரகள் என்பது முக்கியம் இல்லை, எவ்வளவு ஆழமாகப் படிக்கிறார்கள். அதை எப்படித் தேர்வில் வெளிக்காட்டுகிறார்கள் என்பது தான் முக்கியம்.

**இரவுப்பணி மேற்கொள்பவரகள் செய்ய வேண்டியவை...**

இரவுப்பணி மேற்கொள்பவர்கள் அவர்களது உடலில் உள்ள உயிர் சுழற்சிக் கடிகாரத்தை இரவுப் பணிக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்க வேண்டும். இரவுப் பணியில் இருப்பவர்கள் தாங்கள் வேலை செய்யும் நேரத்தைப் பகலாகக்கருதிக்கொள்ள வேண்டும். வேலை முடிந்து காலையில் வீட்டுககுச் செல்லும்போது தங்க ளுக்கு அப்போதுதான் இரவு என மூளையில பதிவு செய்துகொள்ள வேண்டும்.

**ஸ்ரீநைட் ஷிஃப்ட் டிப்ஸ்**

- இரவு வேலை செய்பவர்கள், உடலில் வெளிச்சம் படாதவாறு வீட்டுக்குச் செல்வது நல்லது. பேருந்து மூலம் வீட்டுக்குச் செல்பவர்கள் கைக்குட்டையை வைத்துக் கண்களை மறைத்தவாறு செல்லலாம். உறக்கக் கலக்கத்தில் செல்வதால் நேரிடும் அசம் பாவிதங்களைத் தவிர்க்க தனியாகச் செல்லாமல், நண்பர்களோடு சேர்ந்து செல்லலாம்.(தொடரும்)

## பாகிஸ்தானில் மாணவர்கள் கொலைசெய்யப்பட்ட பாடசாலை நேற்று மீண்டும் திறக்கப்பட்டுள்ளது

பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளின் கொடூரத் தாக்குதலுக்கு உள்ளான பெஷாவர் இராணுவப் பாடசாலை நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் கைபர் பக்துன்கவா மாகாண அரசு தடையில்லாச் சான்றிதழ் வழங்கியதை அடுத்து, தலிபான் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளான பெஷாவர் இராணுவப் பாடசாலை மற்றும் பிற அரசு மற்றும் தனியார் பாடசாலைகள் நேற்று மீண்டும் திறக்கப் பட்டுள்ளன.

பெஷாவர் பாடசாலையின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து, அரசு விடுவித்த உத்தரவை நிறைவேற்றிய பாடசாலைகள் செயற்படுவதற்கு தடையில்லாச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. முன்னதாக இத்தகைய பாடசாலைகளில், சி.சி.டி.வி. கமரா மற்றும் பாடசாலை வளாகத்தை சுற்றிலும் உயரமான வேலி அமைக்கப் பட்டும் இருந்தது. எனவே பாடசாலைகள் செயற்படுவதற்கு சான்றிதழ் வழங்கப்படவில்லை. "போதுமான பாதுகாப்பு வசதிகள் செய்யப்படாத பாடசாலைகள் மீண்டும் திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது என்று கைபர் பக்துன்கவா மாகாணத்தின் தகவல் தொடர்பு துறை அமைச்சர் முஸ்தாக் கானி கடந்த ஜனவரி 8ஆம் திகதி கூறினார்.

பாடசாலைகள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையானவற்றை அரசு கண்காணிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித் தார். (இ-5)

## புதிய நிர்வாக சபை

(தும்பளை)


தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவராக தி.இராஜசிங்கம், செயலாளராக வி.சுரேஷ்குமார், பொருளாளராக ம.தர்ஷாந், உப தலைவராக அ.மணிவண்ணன், உப செயலாளராக சி.செல்வக்கணேஷ் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக வீ.குலசேகரன், இ.விமலரட்ணம், சண்முகலிங்கம், யோ.கண்ணன் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். போசகர்களாக து.துரைரத்தினம் மற்றும் செ.அகிலரூபன் ஆகியோரும் கணக்காய்வாளராக வீ.குலேந்திரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-19)

# மைத்திரி அரசிலும் நம்பிக்கை இல்லை

(கொழும்பு)

**புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள மைத்திரிபால சிறிசேனவால் ஈழத்தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்று நம்பவில்லை என தமிழக கட்சியான விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாளவன் தெரிவித்துள்ளார்.**



கடலூர் முதுநகரில் விடுதலை சிறுத்தைகள் கட்சி கொடியேற்று விழா நேற்று நடந்தது. இவ் விழாவில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் கலந்து கொண்டு கட்சி கொடி யேற்றினார். முன்னதாக நடந்த கட்சி நிர்வாகியின் திருமண நிகழ்ச்சியில் திருமாவளவன் கலந்து கொண்டு பேசினார். இதன் போது,


முள்ளிவாய்க்கால் இனப்படு கொலைக்கு பிறகு, நாம் பொங்கல் கொண்டாடுவதும் இல்லை. யாருக்கும் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவிப்பதும் இல்லை. ஆனால் இந்த ஆண்டு இலங்கை ஜனாதிபதி மகிந்த தேர்தலில் ராஜபக்ஷ படுதோல்வி அடைந்த பிறகு, பொங்கல் பண்டிகை வருவதால் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக் களை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழர்களும், சிங்களவர்களும் சேர்ந்தே மகிந்த ராஜபக்ஷவை தோற்கடித்து இருக்கிறார்கள். இது நாம் எதிர்பார்த்த மகிழ்ச்சிக்குரிய செய்தி. இது அவருக்கு முதல் கட்ட தண்டனை தான். அடுத்த கட்ட தண்டனை சட்ட வடிவில் காத்திருக்கிறது.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற மைத்திரிபால சிறிசேனவும், ராஜபக்ஷவும் ஒரே குட் டையில் ஊறிய மட்டைகள் தான். ஒரு பாமபின் இரண்டு விஷபற்கள் போனறவர்கள். ஆகவே மைத்திரிபால சிறிசேனவால் இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு கிடைத்து விடும் என்று நாங்கள் நம்பவில்லை.

இந்தியாவில் உள்ள அனைத்து ஆதிதிராவிட தலைவர்களும் பிரதமர் நரேந்திரமோடியை ஆதரிக் கிறார்கள். அவரை ஆதரித்த ராம் விலாஸ் பஸ்வான் அமைச்சராகி விட்டார். மோடியை விடுதலை சிறுத்தைகள் மட்டும் தான் எதிர்க் கிறது. மதம் மாறுகிறவர்களை மீண்டும் இந்து மதத்துக்கு மாறும்படி வற்புறுத்துகிறார்கள். எந்த பாதிப்பு வந்தாலும், போர்க்குணம் கொண்டு அதை எதிர்த்து செயற்படுகிறவர்கள் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் தான் என அவர் மேலும் தெரிவித் தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் கலாமன்றம் தயாரித்து வழங்கிய வட்டிக்காரன் குறும்பட வெளியீட்டு விழா அண்மையில் நெடியகாடு பிள்ளையார் ஆலய முன்றிலில் நடைபெற்றது. இதில் பூசை வழிபாடுகளுடன் ஆலய பிரதம குரு குறும்படத்தை வெளியிட்டு வைக்க நெடியகாடு இளைஞர் கலாமன்ற மூத்த உறுப்பினர்கள் பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.

# டெங்கு தீவிரம்

## 3 நாளில் 7 பேர் யாழ். வைத்தியசாலையில் அனுமதி

"யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய் அதிகரித்து வருகின்ற நிலையில் காய்ச்சலுக்கான அறிகுறி தென்பட்டாலும் அரச வைத்தியசாலையை அனுகி உரிய சிகிச்சைகளினை பெற்றுக் கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலையில் பதில் பணிப்பாளர் வைத்திய கலா நிதிஸ்ரீபவானந்தராஜா அறிவுறுத்தியுள்ளார்."

யாழ். மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சல் மிக வேகமாக பரவி வருவதோடு உயிரிழப்புக்களும் அதிகரித்து வருகின்றன.

இதனால் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வருவோரது எண்ணிக்கையும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது.

இவ்வாறு கடந்த 3 நாட்களில் மட்டும் 7 டெங்கு நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறுகிய காலப்பகுதிகளில் திருநெல்வேலி மற்றும் நாவலர் வீதியினைச் சேர்ந்த இரு பாடசாலை மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் டெங்கு காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்படுபவர்களில் ஒரு பகுதியினர் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்த பின்னரே யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகின்றனர்.

இவ்வாறு அனுமதியாகின்றவர்கள் டெங்கு காய்ச்சலின் இறுதி நிலையான டெங்கு அதிர்ச்சி ஏற்பட்ட பின்னரே அனுமதியாகின்றனர்.

இவ்வாறான நிலையில் உயிரிழப்பினை தவிர்க்க முடியாமல் போய் விடுகின்றது. எனவே காய்ச்சல் அறிகுறி தென்பட்டால் அரச வைத்தியசாலையொன்றினை அணுகி டெங்கு காய்ச்சலா? என உறுதிப்படுத்தி உரிய சிகிச்சை களினை பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

இதேவேளை சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் நல்லூர் ஆகிய இடங்களில் டெங்கு காய்ச்சலின் தாக்கம் அதிகமாக காணப்படுவதாகவும் யாழ்.போதனா வைத்தியசாலைத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இதேவேளை நல்லூர் பிரதேச சபை, யாழ்.மாநகர சபை ஆகிய சபைகளிற்குட்பட்ட பெருவாரியான இடங்களில் குப்பைகள் அகற்றப்படாமல் தேங்கியுள்ளதனை அவ்தாணிக்க முடிகின்றது. (இ-4)

## நுண்கலை வகுப்புக்களின் புதிய பிரிவு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் நுண்கலை வகுப்புக்களின் புதிய பிரிவு எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இவ்வகுப்புக்களில் சங்கீதம், பண்ணிசை, வயலின், மிருதங்க வகுப்புக்கள் நடைபெறவுள்ளன. முற்றிலும் இலவசமாக சனி, ஞாயிறு தினங்களில் நடத்தப்பட்டு வரும் இவ் வகுப்புக்களில் இணைந்து கொள்ள விரும்புவோர் நல்லூர் ஆலய முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் பதிவுகளை மேற்கொண்டு இணைந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

## யோகாசன வகுப்புக்களின் புதிய பிரிவு 17இல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படுகின்ற யோகாசன தியான வகுப்புக்களின் புதிய பிரிவு எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இவ்வகுப்புக்கள் இலவசமாக நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறும். ஆண்கள், பெண்கள் என இருபாலாருக்கும் தனித் தனியாக நடைபெறுவதுடன் நோயாளர்களுக்கு விசேட கவனமும் செலுத்தப்படும்.

இப்பயிற்சி நெறியினை முழுமையாகபூர்த்திசெய்பவர்களுக்கு திணைக்களத்தினால் சான்றிதழும் வழங்கப்படும். சனி மற்றும் ஞாயிறு தினங்களில் நடைபெறும் இவ்வகுப்புக்கள் ஆண்களுக்கான பிரிவு காலை 6.30 மணி முதல் 7.30 மணி வரையும் பெண்களுக்கான பிரிவு காலை 7.30 மணி முதல் 8.30 மணி வரையும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இணைந்து கொள்ள விரும்புவோர் நல்லூர் ஆலய முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் பதிவுகளை மேற்கொண்டு இணைந்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ

## இளமாணி, முதுமாணி கலாநிதிப் பட்டங்களை இந்தியாவில் தொடர்வதற்கான புலமைப்பரிசில்

இந்திய அரசானது இளமாணி, முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டங்களைப் இந்தியாவில் தொடர்வதற்கான கலாசார உறவுகளுக்கான இந்தியப்பேரவையின் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 180 புலமைப்பரிசுகளை அறிவித்துள்ளது.

மருத்துவம் தவிர்ந்த ஏனைய துறைகளில் உயர்கல்வியை தொடர்வதற்காக இவை வழங்கப்படுகின்றன. விபரங்கள் வருமாறு,

அ)நேரு ஞாபகார்த்த புலமைப் பரிசில் திட்டம். மருத்துவம் தவிர்ந்த ஏனைய இளமாணிக் கற்கைகளான பொறியியல், விஞ்ஞானம், வியாபாரம், பொருளியல், மனிதப் பண்பியல் மற்றும் கலைகள் உள்ளிட்ட பாடங்களுக்கு இத்திட்டத்தின்கீழ 100 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆ) மௌலானா ஆசாத் புலமைப்பரிசில் திட்டம்: முதுமாணிக் கற்கைக்காக பொறியியல், விஞ்ஞானம், வர்த்தகம், பொருளியல், மனிதப்பண்பியல் மற்றும் கலைகள உள்ளிட்ட பாடங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் 50 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. எனினும் பொறியியல், விஞ்ஞானம் மற்றும் விவசாய கற்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சுதேச வைத்தியம் உள்ளிட்ட மருத்துவக் கற்கைகள் இத்திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

இ)ராஜீவ் காந்தி புலமைப்பரிசில்: தகவல் தொழில் நுட்ப துறையில் பொறியியல் இளமாணி மற்றும் தொழில்நுட்ப இளமாணிப் பட்டம் ஆகிய இளமாணிப் பட்டங்களுக்கு 25 இடங்கள்

ஈ)பொதுநலவாய புலமைப்பரிசில் திட்டம்: மருத்துவம் தவிர்ந்த ஏனைய பாடங்களில் முதுமாணி மற்றும் கலாநிதிப்பட்ட ஆய்வுக்கு 5 இடங்கள்

2.இந்திய அரசானது இப் புலமைப்பரிசில்களுக்கு இலங்கைப் பிரஜைகளை திறமை அடிப்படையில் தெரிவு செய்யும். இந்தியாவின் மிகஉயர்ந்த ஒருசில பல் கலைக்கழகங்களில் ஆய்வு உள்ளிட்ட உயர்கல்வி கற்பதற்காக இலங்கை அரசின் உயர்கல்வி அமைச்சினுடைய ஆலோசனைகளின் படி புலமைப் பரிசில் பெறும் நபர் தெரிவு செய் யப்படுவார்.


3.எல்லாப் புலமைப்பரிசில்களும் கல்விக்காலம் முழுமைக்குமான முழுமையான கல்விக்கட்டணத்துடன் மாதாந்த செலவுப்படிகளை உள்ளடக்கும். மேலும் தங்குமிடக்கொடுப்பனவுடன் புத் தகம் மற்றும் காகிதாதிக்கான ஒரு வருடாந்தக் கொடுப்பனவும் வழங்கப்படும். இவை தவிர இந்தியாவிலுள்ள கலாசார உறவுகளுக்கான இந்தியப் பேரவையின் அனை த்துப் புலமையாளருக்கும் சிறுசிறு உதிரி நன்மைகளுக்கு மேலாக முழுமையான சுகாதார வசதிகள், இந்தியாவில் மிகக் கிட்டிய விமான நிலையத்திற்கான விமானப் பயணச்சீட்டு கட்டணம், நாட்டின் பல பாகங்களுக்கான கல்விச் சுற்று லாவுக்கான வருடாந்தக் கொடுப்பனவு என்பன வழங்கப்படும்.

4.இலங்கை அரசின் உயர் கல்வி அமைச்சின் ஊடாகவே பயனாளர் தெரிவுகள் இடம்பெறும். இலங்கை அரசின் உயர் கல்வி அமைச்சு தகுதிவாய்ந்தவர் களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. உயர் கல்வி அமைசசின் இணையத்தளமான www. mohe. gov.lk எனும் முகவரியிலிருந்து விண்ணப்பப் படிவங்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட மேற்படி நான்கு வகைப் புலமைப்பரிசில்களுக்குமான விண்ணப்ப முடிவுத் திகதி 26.01.2015 ஆகும்.

5.தெரிவுசெய்யப்படக் கூடிய தகைமை வாய்ந்தவர்கள் தெரிவு நடைமுறை மற்றும் தகைமை நப்ந்தனைகள்பற்றி அறிய இலங்கை அரசின் உயர்கல்வி அமைச்சை அணுகவும். ஆர்வமுள்ளவர்கள் புலமைப பரிசில் பற்றிய மேலதிக விபரங்களை பெறுவதற்கு யாழ்ப் பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தை அணுகலாம்.

அத்துடன் தூதரக இணையத் தளத்திலும் (www. cgi jaf fna.org) பார்வையிடலாம் என யாழ்.இந்தியத் துணைத் தூதரகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது. (இ-5)

## பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் அமெரிக்கா இந்தியாவுடன் இணைவு



பயங்கரவாதத்திற்கு எதிரான போரை வலுப்படுத்த அமெரிக்கா இந்தியாவுடன் பணியாற்றுகிறது என்று அமெரிக்க வெளிவுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரி தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலத்தில் காந்தி நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமான எழுச்சிமிகு குஜராத் உச்சி மாநாட்டில் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரி பேசுகையில்,

பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பிற அதிகாரிகளுடனான ஆலோசனையின் போது, பொருளாதார உறவு முன்னேற்றம் குறித்து மறுஆய்வு செய்தோம். எப்படி முன்னோக்கி எடுத்து செல்வது என்றும் ஆலோசித்தோம்.

இந்தியாவில் அமெரிக்காவின் முதலீடு 24 பில்லியன் டொலரில் இருந்து, 28 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளது.

24/7 நேர மின்சாரம் வழங்குவதில் பிரதமர் நரேந்திர மோடியின் பார்வையுடன், அமெரிக்கா பணியாறறுகிறது.

எழுச்சிமிகு குஜராத் உச்சி மாநாடடில் நான் பார்த்த அனைத்தும் என்னை மிகவும் ஈர்த்தது என்று கூறினார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போரை வலுப்படுத்த அமெரிக்கா இந்தியாவுடன் பணியாற்றுகிறது என்றும் ஜோன் கெர்ரி தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1031

# அடுப்பு நிறையத் தங்கம்!

வடக்கு ஆப்கானிஸ்தானில் கானாபாத் என்ற கிராமத்தில் நூர் முகமது என்ற ஏழை இருந்தான்.

அவன் கடவுள்மீது மிகவும் பற்றுக் கொண்டவன்.

பகல் முழுவதும் வயலில் பாடு பட்டு உழைப்பான்.

கிடைக்கும் சொற்ப தொகை யைக் கொண்டுபோய் மனைவி யிடம் கொடுப்பான்.

தன் வறுமையை நினைத்துத் துயர்கொள்வான்.



ஒருநாள் அவன், கருணை யுடைய கடவுளே, வாழ்நாள் முழு தும் உன்னை வணங்கி வரும் எனக்கு நல்ல வழி காட்டக்கூடாதா? இதோ, என் அடுப்பில் பாதி நாள் பூனை தூங்குகிறது.

இந்த அடுப் பிலிருந்து தங்கக் காசுகள் கிடைக்கும்படி செய்ய மாட்டாயா? என்று மனம் உருகிப் பிரார்த்தனை செய்தான்.

பிரார்த்தனை முடிந்து, நூர் முகமது மற்ற வேலைகளைப் பார்க்கச் சென்றான்.

மீண்டும் பிரார்த்தனைக்கான நேரம் வந்த போது... அவன் தனது அடுப்பில் இருந்து தங்கக் காசு கள் கிடைக்க வேண்டும் என்று மீண்டும் வேண்டிக்கொண்டான்.

ஒருநாள் நூர் முகமது வய லில் வேலை செய்துகொண்டு இருந்தான். முட்செடிகளை வெட்டி அகற்றும்போது, முள்ளில் சிக்கி, அவன் சட்டை கிழிந்துவிட்டது.

அவன் மிகவும் வருத்தப்பட் டான். ஆயினும் அந்த இடத்தில் தொடர்ந்து வெட்டிக்கொண்டே இருந் தான்.

அப்போது மண்வெட்டி ணங் என எதன் மீதோ மோதும் ஓசை கேட்டது.

கவனித்துப் பார்த்தபோது நில த்துக்குள் பழைய செப்புக் குடம் ஒன்று இருந்தது. குடத்துக் குச் சேதம் ஏற்படாமல் அதை மெது வாக வெளியே எடுத்தான் நூர் முகமது. திறந்து பார்த்தால் குடத் தின் கழுத்து வரை தங்க நாண யங்கள் தகதகவென மின்னின.

ஏழையான நூர் முகமதுக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

ஆனால், அவனது மகிழ்ச்சி சட்டென்று துக்கமாக மாறியது.

அவன் கடவுளிடம் மன்றாடி னான்... கடவுளே! என் வீட்டு அடு ப்பில் தங்க நாணயங்கள் கிடை க்க வேண்டும் என்று தானே பிரா ர்த்தனை செய்தேன்.

இந்த வயலில் கிடைத்த தங் கக் காசுகள் எனக்கு வேண்டாம். இதை நீங்களே திரும்ப எடுத்துக் கொள்ளுங்கள் என்று வேண்டிக் கொண்டான். பிறகு குடத்தை அங்கேயே புதைத்துவிட்டு வீட்டிற் குச் சென்றான். வயலில் நடந்ததை மனைவியிடம் சொன்னான்.

கையில் கிடைத்த செல்வத்தை விட்டுவிட்டு வந்த கணவன் மீது மனைவிக்குப் பயங்கரக் கோபம்.

அவள் முணுமுணுத்தபடியே சாப்பாடு பரிமாறினாள். நூர் முக மது எதுவும் பேசாமல் சாப்பிட்டு விட்டுத் தூங்கிப் போனான்.

புதையலைப் பற்றியே நினைத் துக் கொண்டு இருந்த மனைவிக் குத் தூக்கம் வரவில்லை.

அடுத்த வீட்டில் இருந்த ஜன் முகமதுவையும் அவன் மனைவி யையும் எழுப்பினாள்.

தன் கணவனுக்குக் கிடைத்த புதையலைப் பற்றிச் சொன்னாள்.

தனக்கு உதவினால் புதைய லின் பாதியை ஜன் முகமதுக்குக் கொடுப்பதாக அவள் வாக்குக் கொடுத்தாள்.

பேராசைக்கார ஜன் முகமது, உடனே வயலுக்குப் புறப் பட்டான்.

புதையல் இருக்கும் இடத்தையும் கஷ்டப்பட் டுக் கண்டுபிடித்து விட் டான்.

குடம் அங்கேயேதான் இருந்தது. ஜன் முகமது பேராவ லுடன் குடத்தை எடுத்துத் திறந் தான்.

அடுத்த நொடி அஞ்சி நடுங்கிவிட்டான். குடம் நிறைய விஷப் பாம்புகள் நெளிந்து கொண்டு இரு ந்தன.

உடனடியாகக் குடத்தை மூடிவிட்டான். பாம்புக ளில் ஏதாவது ஒன்று அவ னைக்கொத்தி இருந்தால், அவன் உடனடியாக இற ந்து இருப்பான்.

இது நூர் முகமதின் மனைவி செய்த சதி வேலைதான். என்னை யும் என் குடும்பத்தை யும் அழித்து விட்டு, என் சொத் துக்களைக் கைப்பற்றும் நோக்க மாக இருக்கும் என்று தவறாக யூகித்தான்.

நூர் முகமதின் மனைவியைப் பழி வாங்க முடிபுசெய்தான்.

பிறகு ஜன் முகமது குடத்தைச் சுமந்துகொண்டு நூர் முகமதுவின் வீட்டை நெருங்கினான்.

ஏமாற்றுக்காரி உள்ளே தூங் கிக்கொண்டு இருக்கிறாள்.

நம் வேலையை முடிக்க வேண் டியதுதான் என்று நினைத்தவாறு வீட்டுக் கூரைமீது ஏறினான்.

சமையல் அறையின் புகை போக்கிக் குழாயை நெருங்கி, உள்ளே குடத்தைப்போட்டான்.

அழிந்து போகட்டும்! பாம்பு கள் கடித்து எல்லோரும் தொலை ந்து போகட்டும் என்று சபித்த வாறு திருப்தியுடன் கீழே இறங்கி னான் ஜன் முகமது.

ஒன்றும் அறியாதவனைப் போலத்தன் வீட்டுக்குச் சென்றான்.



வழக்கம்போல அதிகாலை யில் எழுந்தான் நூர் முகமது.

குளித்து முடித்துவிட்டுப் பிரா ர்த்தனை செய்துவிட்டுத் தன் வீட்டு அடுப்பைப் பார்த்தவனுக்கு ஆனந்தமும் ஆச்சரியமும் காத் திருந்தது.

அடுப்பு நிறையத் தங்க நாண யங்கள்! கடைசியில் கடவுள் கருணை காட்டிவிட்டார் என்று உற்சாகத் துடன் சொன்ன நூர் முகமது, தன் மனைவியை அழைத்து... தங்க நாணயங்க ளைக் காட்டினான்.

இதைப் பார்! இதை எல்லாம் நாம் எடுத்துக் கொள்ளலாம். என் அடுப்பில் செல்வம் தந்தால் தான் நான் எடுத்துக்கொள்வேன் என்று கடவுளிடம் வேண்டி இருந் தேன். என் பிரார்த்தனை பலித் தது. கடவுளுக்கு நன்றி! என்றான்.

அதன்பிறகு வெகுகாலம், நூர் முகமதுவும் அவன் குடும்பத்தின ரும் வளமாக வாழ்ந்தார்கள்.




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1610- கலிலியோ கலிலி வியாழனின் 4 ஆவது துணைக் கோளைக் கண்டுபிடித்தார்.
- 1658- இங்கிலாந்தின் இராணுவ மற்றும் அரசியல் தலை வருமான ஒலிவர் குரொம்வெல்லுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டிய எட்வார்ட் செக்ஸ்பி என்பவன் லண்டன் கோபுர சிறையில் இறந்தான்.
- 1830- லூசியானாவில் நியூ ஓர்லீன்ஸ் நகரில் பெரும்தீ பரவியது.
- 1847- கலிபோர்னியாவில் மெக்சிக்கோ-அமெரிக்கப்போர் காகுவெங்கா என்ற இடத்தில் எட்டப்பட்ட உடன்பாட் டின் மூலம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.
- 1930- மிக்கி மவுஸ் கார்ட்டூன் துணுக்குகளாக முதன் முதலாக வெளிவரத்தொடங்கியது.
- 1938- இங்கிலாந்து திருச்சபை சார்ல்ஸ் டார்வினின் கூர்ப் புக் கொள்கையை ஏற்றுக் கொண்டது.
- 1942 -ஹென்றி போர்ட் பிளாஸ்டிக்கினால் ஆன தானுந்து க்கான காப்புரிமம் பெற்றார்.
- 1953 -யூகொஸ்லாவியாவின் தலைவராக மார்ஷல் ஜோசிப் டீட்டோ தெரிவு செய்யப்பட்டார்.
- 1972 -கானாவில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.
- 2006 சீனாவின் தென்கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற நிலநடுக்கத்தினால் 13,000 வீடுகள் இடிந்து தரை மாட்டமாயின.

### பிறப்புகள்

- 1864 - வில்ஹெம் வியென், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானியர் (இ. 1928)
- 1879 - மெல்வின் ஜோன்ஸ், அரிமா சங்கத்தை அமெரிக்கர் (இ. 1961)
- 1911 - ஆனந்த சமரக்கோன், சிங்கள இசைக்கலைஞர் (இ. 1962)
- 1927 - சிட்னி பிரென்னர், நோபல் பரிசு பெற்ற பிரித்தானியர்
- 1946 - ஆர். பாலச்சந்திரன், கல்வியாளர், கவிஞர் (இ. 2009)
- 1949 - ராகேஷ் சர்மா, விண்வெளியில் பறந்த முதல் இந்தியர்.

### இறப்புகள்

- 1906 - அலெக்சாண்டர் பப்போவ், ரஷ்ய இயற்பியலாளர் (பி. 1859)
- 1941 - ஜேம்ஸ் ஜோய்ஸ், ஐரிய எழுத்தாளர் (பி. 1882)
- 2014 - அஞ்சலிதேவி, திரைப்பட நடிகை (பி. 1927)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு...

24

...“இந்தியில் வெளியான ஹராம்பூர்-கா-லட்சுமண்” என்ற படத்தை பார்த்தேன். அதில் சத்ருகன் சின்கா புதுமாதிரியாக நடித்திருந்தார். அந்தக் கதையைத் தமிழில் தயாரித்து, அதில் ரஜினி நடித்தால் சிறப்பாக இருக்கும் என்று எண்ணினோம்.

அதன்படி, அந்தக் கதையை வாங்கி, “மாங்குடி மைனர்” என்ற பெயரில் தயாரித்தோம்.

அதுவரை வில்லனாகவும், ஆன்டி ஹீரோவாகவும் நடித்து வந்த ரஜினி, முதன் முதலாக ஆக்ஷன் வேடத்தில் நடித்தார்.

**இரவு பகலாக நடித்தார்**

இந்த காலக்கட்டத்தில் ஏராளமான படங்களில் ரஜினி நடித்து வந்தார்.

எங்களுக்கு 17 நாட்கள் ஹகால்ஷீட் கொடுத்திருந்தார். அதில் 8 நாட்கள்ள மற்ற படங்களுக்கு ஒதுக்க நேர்ந்தது. எங்களுக்கு கிடைத்தது 9 நாட்கள்தான்.

ரஜினி, சிரமம் பாராமல் இரவு பகலாக நடித்தார். அப்போது **“மாங்குடி மைனர்”** படப்பிடிப்பு ஐதராபாத்தில் நடந்தது. காலை, விமானம் மூலமாக ஐதராபாத்துக்கு வருவார்.

பகல் முழுவதும் நடிப்பார். மாலை 7 மணிக்கு விமானம் மூலம் சென்னைக்குத் திரும்புவார். அங்கு இரவில் **“இளமை ஊஞ்சலாடுகிறது”** படப்பிடிப்பு நடக்கும். அதில் விடிய விடிய நடிப்பார்.

எங்களுக்கு அவர் கொடுத்த 9 நாள் கால்ஷீட்டில், அவர் சம்பந்தப்பட்ட எல்லா காட்சிகளையும் நடித்துக் கொடுத்தார். பட அதிபர்களுக்கு எவ்வித சிரமமும் ஏற்படக்கூடாது என்பதற்காக, தன்னை வருத்திக் கொள்ள தயங்காதவர் ரஜினி. இவ்வாறு குகநாதன் கூறினார்.

**பிற மொழிகள்**

முதன் முதலாக ரஜினி நடித்தது



வித்தியாசமான கெட்டப்பில் ரஜினி

## கதாநாயகனாக நடித்த முதல் படம்- “பைரவி”

தமிழ்ப்படம் (அபூர்வராகங்கள்) என்றாலும், அவருடைய ஸ்டைல் தென்னாட்டு ரசிகர்கள அனைவரையும் கவர்ந்தது.

தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்று பல்வேறு மொழிகளிலும் நடிக்கும்படி கேட்டு, பட அதிபர்கள் அவர் வீட்டில் முற்றுகையிட்டனர். யாருக்கு கால்ஷீட் கொடுப்பது என்று ரஜினி திணறினார்.

இந்தக் காலக் கட்டத்தில், இந்தியாவிலேயே மிகவும் பிசியான நடிகர ரஜினிதான்!

ரஜினியின் கலைப் பயணத்தில் குறிப்பிடத்தக்க படம் **“பைரவி”**. அதுவரை பல்வேறு முக்கிய கதாபாத்திரங்களில் ரஜினி நடித்திருந்தாலும், தனி ஹீரோவாக நடித்த முதல் படம் **“பைரவி”**. கலைஞானம் கதை எழுதி, வள்ளி வேலன் மூவிஸ் சார்பில் தயாரித்த படம்.

வசனத்தை மதுரை திருமாறன் எழுதினார். இளையராஜா இசை அமைக்க, எம்.பாஸ்கர் டைரக்ட் செய்தார். பாடலகளை கண்ணதாசனும், சிதம்பர நாதனும் எழுதினர்.

ரஜினியுடன் ஸ்ரீபிரியா, ஸ்ரீகாந்த், சுருளிராஜன், மனோரமா, ஒய்.விஜயா நடித்தனர்.

**கலைஞானம் பேட்டி**

ரஜினிகாந்துடன் ஏற்பட்ட அனுபவம் பற்றி கலைஞானம் கூறியதாவது:-

“நான் **“ஆறுபுஷ்பங்கள்”** படத்துக்கு கதை-வசனம் எழுதிக்கொண்டிருந்தபோது, தயாரிப்பாளரும், டைரக்டர் கே.எம். பாலகிருஷ்ணனும் எனக்கு ஒரு கண்டிஷன் போட்டார்கள். படம் எடுத்து முடியும்வரை கூடவே இருக்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனை.

அதற்கு ஒப்புக்கொண்டேன். இதனால் ஷூட்டிங் நடைபெறும் போதெல்லாம் நானும், ரஜினிகாந்த அவர்களும் நெருக்கமாக பழக நேர்ந்தது. இரண்டாவது ஹீரோவாக ரஜினிகாந்த் நடித்தார்.

நீண்ட வசனம் பேசும்போதெல்லாம் அவர் சற்று சிரமப்படுவது எனக்கு தெரியவந்தது. வசனத்தை வாங்கி, சற்று குறைக்க முற்படுவேன். அப்போது ரஜினிகாந்த் “கலைஞானம் சார்! எப்படியும் பேசி விடுவேன். வசனத்தை குறைக்க வேண்டாம்! என்பார்.

அதே போல தனியாக அமர்ந்து பலமுறை பேசிப்பேசி பழகி, ஒரே டேக்கில் ஓகே செய்துவிடுவார். முடியாது என்பதே அவருடைய அகராதியில் இல்லை.


**ஹீரோ**

ரஜினியின் வித்தியாசமான நடிப்பைப் பார்த்து என் மனதுக்குள்ளேயே ஒரு திட்டம் போட்டேன். ரஜினியை ஹீரோவாக போட்டு நாம் ஏன் ஒரு படம் எடுக்கக் கூடாது? என்று எனக்கு நானே கேட்டுக்கொண்டேன்.

அந்த எண்ணம் ஒரு நாள் நிறைவேறியது. அதுதான் அவர் முதல் முறையாக ஹீரோவாக நடித்த பைரவி. ரஜினிகாந்த் வீட்டிற்கு சென்று, நான் முதன் முறையாக தயாரிக்க இருக்கும் படத்தில், நீங்கள்தான் ஹீரோவாக நடிக்க வேண்டும் என்றேன்.

அவர் மகிழ்ச்சி அடைந்தார். கதை என்ன? என்று கேட்டார். உடனே கதையை சொன்னேன். அவருக்கு ரொம்பவும் பிடித்து விட்டது. நாளைக்கு வந்து அட்வான்ஸ் கொடுக்கிறேன் என்று சொல்லி விட்டு புறப்பட்டேன்.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்

**வைரமுத்து- 46**

...குடிக்க வைக்கிறது ஓம்பாடு. குடுத்துப்பாரு மூனே நாள்ல தீட்டு வந்திரும்; சக்கம்மா மேல சத்தியம்.

மருந்துன்னு சொல்லிக் குடுத்தா பெரியமூக்கி. நம்ம நல்லதுக்குத்தான் ஆத்தா குடுப்பாங்கிற நம்பிக்கையில கடகடன்னு குடிச்சா கருவாச்சி.

ரெண்டு நாளாச்சு .. மூணு நாளாச்சு குடுத்த மருந்து வேலைக்காகல.. சீல நனையல. பப்பாளிப் பழத்தையும் தின்டுபுட்டுக் கருவக் கெட்டியாப் புடிச்சுப் படுத்துக் கெடக்கு ஒரு அசையாத ஆத்மா..

ரெண்டு ரெண்டரை மாசக் கரு வரைக்கும்தான் பப்பாளளி பாத்திய ப்படும். அதுக்கு அங்கிட்டு அதுக்கு அதிகாரமில்ல. வேற மருந்திருக்கு.

இப்படித்தான் எண்டப் புளி ராசம்மா மூணுமாசமா இருக்க புருசன் செத்துப் போனான் பாம்பு கடிச்சு. கலைக்க வேண்டியாதப் போச்சு. கறுப்பு எள்ளு வருத்து கருப்பட்டி போட்டு இடிச்சு வெறும் வயித்தில தின்னக் குடுக்க மூணாம் நாளே பேறுகால வலி மாதிரி குத்திக்குடைய ஆள விடுங்கன்னு வெளிவந்து விழுந்திருச்சு விரல் தண்டிப் பண்டம்.

புருசன் ஜெயில இருக்க கொழுந்தன் கிட்டப் பிள்ள வரம் வாங்கினாளா இல்லையா குருவியப்பன் பட்டி மண்ணுத்தின்னி- இப்ப அவ இல்ல- அவளுக்கு சலாம்பூ வெதைய எடுத்துப் பொன்முறுவலா வறுத்து



ஓரல்ல போட்டு இடிச்சு கருப்பட்டி கலந்து உருண்ட தெரட்டிக் குடுக்க வெந்நியக் குடிச்சுட்டுப் படுத்துட்டா. அப்ப அவளுக்கு மாசம் நாலு நாலாம் நாளே வந்திருச்சு தீட்டு. அஞ்சாம் நாளுதீட்டோட தீட்டா எலிக்குஞ்சு மாதிரி தொப்புழ் கொடியோட வெளியேறி வந்திருச்சு பிஞ்சுப் பிண்டம்.

ஒடம்புல ரத்தச் சத்து உள்ள பொம்பளைகளுக்குத்தான் மேற்சொன்ன ரெண்டு மருந்தும் கேக்கும். கருவாச்சி ரத்தம் செத்த பொம்பளையா இருக்கா. அதுக்குண்டான மருந்து என்னான்னு யோசிச்சா வைத்தியச்சி.

கச்சேந்திர எலைன்னு ஒண்ணு கெடக்கும் காடுகள்ல. கசப்புன்னாக் கசப்பு வாயில வைக்க முடியாத கசப்பு. ஒரு எலைய மென்னு தின்னாலே வாய் வழியா வெளியே வந்து விடுந்திடும் கொடலு. அந்த எலைய மடி நிறைய கொண்டாந்தா ரங்கம்மா. ஒரல்ல போட்டு இடிச்சா. சாறு எடுத்தா கால் செம்பு சாறுக்கு அரை வீச கருப்பட்டி போட்டா. அடுப்பக் கூட்டிக் கொதிக்க வச்சா. ஏறக்கி ஆற வச்சா. கசாயம்னு சொல்லி விடிய வெறும் வயித்துல குடிக்க வச்சுட்டா. பாதியக் குடிச்சிட்டுப் பாதியத் துப்பிட்டுப்படுத்துக்கிட்டா கருவாச்சி.

உள்ள யானக்குட்டியே இருந்தாலும் மூணே நால்ல முழுசா வந்திரும் வெளிய. சொல்லி நாலு நாளாகியும் ஒண்ணும் நடக்கல; ஒருபொட்டுத் தீட்டு இல்ல. ரங்கம்மா மெரண்டு போனா. அவ ஆயுசில இப்படி ஆனதில்ல.

வைத்திய சாஸ்த்திரத்துக்கே விரோதமாயிருக்குடி யாத்தா இந்த வெவகாரம். கருவாச்சி வகுத்துக்குள்ள பிண்டம்ங்கற பேர்ல ஒரு பிசாசு படுத்திருக்குடி ரங்கம்மா பொலம்ப பத்துக் கொறடு போட்டாக்கிலும் இருக்கிற கருவ எடுத்து விட்ரு தாயின்னு பதறிச் சொல்றா .

கடைசியா ஓரே ஒருவழிதான் இருக்குன்னு. ஆனா கருவாச்சி உசுருக்கு உறுதி சொல்ல மாட்டேன்.

ரங்கம்மாவோட ரெண்டு கையையும் இழுத்து நெஞ்சில வச்சுக்கிட்டு கருவக் கலைச்சு மகளக் காப்பாத்துன்னு கெஞ்சுறா பெரியமூக்கி.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக ரீதியில் மகிந்த விலகவில்லை

## ரஞ்சன் ராமநாயக்க தெரிவிப்பு

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனநாயக ரீதியில் பதவியை விட்டு விலகினார் என்பது பொய்யான தகவல் என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார். தேர்தல் தோல்வியை ஒப்புக்கொண்டு அமைதியான முறையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ஆட்சி மாற்றத்திற்கு வழியமைத்தார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் கூறுகின்றனர். எனினும் இந்த கூற்றுக்களில் உண்மையில்லை என்பதனை நான் குறிப்பிட விரும்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதியும் பிரதமரும் இதனை ராஜதந்திர அணுகு முறையில் அணுகியுள்ளனர்.

இந்த தகவல்களை வெளியிடுவதன் மூலம் எனது பதவிகள் பறிபோகக் கூடும்.

எனினும் நாட்டு மக்கள் உண்மையை அறிந்து கொள்ள வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் நான் இதனைக் குறிப்பிடுகின்றேன்.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களை தப்பிச் செல்ல அனுமதிக்கக் கூடாது.

அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் உரிய முறையில் நிறைவேற்றப்படாவிட்டால் ஆறு ஆண்டுகளில் மகிந்த ராஜபக்ஷவிற்கு நடந்ததே நமக்கும் நடக்கும்.

முதலில் புலிகள் இல்லா தொழிக்கப்பட்டதாக கூறிய மகிந்த தற்போது மைத்திரிபால சிறிசேன புலிகளின் வாக்குகளினால் வெற்றியீட்டியதாக கூறுகின்றார். இந்தக் கூற்றுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது என ரஞ்சன் ராமநாயக்க நேற்று முன தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார். (இ-5)

## தகுதியற்றவர்களை தன்வசம் வைத்திருந்ததால் மகிந்த தோல்வியடைந்தார்-சீலரத்ன தேரர்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சுற்றியிருந்த தகுதியற்றவர்களே அவரை இல்லாமல் செய்தனர் என பத்தரமுல்லே சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சுற்றியிருந்தவர்களை அமைச்சர்களாக, அதிகாரிகளாக நியமித்துக் கொள்ள வேண்டாம் என புதிய ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் கோருகின்றோம். மகிந்தவை சுற்றி இருந்தவர்களை எருமை மாடுகள் என குறிப்பிடுவதில் தவறில்லை. ஏனெனில் அவர்களுக்கு மக்களின் பிரச்சினைகள் தெரிந்திருக்கவில்லை.


இவ்வாறான கூட்டமொன்று ஜனாதிபதி மைத்திரிபாலவைச் சுற்றி இணைந்து கொள்ளக் கூடாது என பிரார்த்தனை செய்கின்றோம் என சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 200 | 150 | 160 |
| உருளைக்கிழங்கு | 70 | 90 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 550-570 | 600 | 400 | 500 |
| தக்காளி | 110 | 100 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 45 | 50 | 50 | 50 |
| கோவா | 110 | 130 | 130 | 140 |
| கரட் | 140 | 200 | 200 | 200 |
| பூசணி | 35 | 40 | 50 | 60 |
| புடோல் | 100 | 120 | 120 | 140 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 50-80 | 120 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 110 | 100 |
| பாகற்காய் | 300 | 350 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 140 | 200 | 150 | 140 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 170-200 | 280 | 260 | 240 |
| லீக்ஸ் | 260 | 320 | 250 | 400 |
| பீற்றூட் | — | 200 | — | 240 |
| கறிமிளகாய் | — | 350 | 300 | 280 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | — | 350 | 300 | 240 |
| கத்தரிதம்புள்ள | — | 180 | 150 | 150 |
| கீரை - 1 பிடி | 15 | 25 | 50 | 50 |
| தேசிக்காய் | 50 | 100 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 45-50 | 50 | 40 | 40-50 |
| இராசவள்ளி | 120 | 120 | 100 | 120 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 251

டொறின் மன்மதநாயகம்




கோகுல் கோகுலன்




மது மதுசாயினி




யாழன் மகேந்திரகுமார்




அசோக் குமார்




தீபன் சற்குணம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த விடயங்களை செயற்படுத்துவதற்கு த.தே.கூட்டமைப்பினர் ஒத்துழைப்பு வழங்குவர்

## சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

(குருமன்காடு)

நல்ல செயற்பாடுகளுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

புதிய அரசிடம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் எதிர்பார்ப்புகள் என்ன வென்று அவரிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்கள் குறிப்பாக மலையக மக்களும் இந்த நாட்டில் ஆட்சி மாற்றம் வேண்டும் என்பதை கருத்தில் வைத்தே இத்தேர்தலில் வாக்களித்துள்ளார்கள்.

கடந்த 10 வருட காலமாக இருந்த மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில், சிறுபான்மை மக்கள் சொல்ல முடியாத பல்வேறு கஷ்டங்களை அனுபவித்துள்ளனர். இதன் காரணமாகவே மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவை வழங்கியுள்ளனர்.

ஆகவே, மைத்திரிபால சிறிசேன தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளோடே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதனால், அவருக்கு மிகப்பெரிய பொறுப்புகளும் சவால்களும் காத்திருக்கின்றன.




அவற்றில் முக்கியமாக, போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுடைய மனிதாபிமான பணிகள் மற்றும் இந்நாட்டில் நீண்ட காலமாக தீர்க்கப்படாது உள்ள இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வை காண வேண்டிய தேவை இருக்கின்றது.

அந்த வகையில் 100 நாட்கள் வேலைத் திட்டத்தின் கீழ், உடனடியான மனிதாபிமான பணிகள் இருக்கின்றன. குறிப்பாக இந் நாட்டில் 20 வருடங்களுக்கு அதிகமாக பல இளைஞர்கள் இலங்கையின் பல சிறைகளிலும் அரசியல் கைதிகளாக தண்டனைக்கு மேல் தண்டனையை அனுபவித்து இன்று ஒரு மனநோயாளிகளாக ஆக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்களது குடும்பம், பிள்ளைகள், கல்வி என்பன மிக மோசமாக பாதிப்படைந்துள்ளது. எனவே, ஜனாதிபதி என்ற வகையில் அவர்களுக்கு பொது மன்னிப்பை வழங்கி விடுதலை செய்யவேண்டும்.

வடக்கு, கிழக்கில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் சொந்த மண்ணில் மீளக்குடியேற முடியாமல் வாழ்கின்றார்கள். அவர்களுக்கான காணிகளை ஒப்படைத்து மீளக்குடியேற அனுமதிக்க வேண்டும்.

அத்துடன், போர் காரணமாக 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட, பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்கள் நிர்க்கதியற்று வாழ வழியில்லாமல் இருக்கின்றார்கள். அதிலும் கணவனை இழந்த இளம் பெண்கள் தமக்கான கல்வி, பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.



காணாமற்போனோரின் குடும்பங்கள் பல ஆயிரக்கணக்கில் இருக்கின்றார்கள். அவர்களுக்கு காணாமற்போன உறவுகள் இருக்கின்றார்களா? இல்லையா? என்பது தொடர்பில் உடன் அறிவிக்க வேண்டும். இல்லையேல் அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் இவை உட்பட தமிழ் மக்களிடம் இருந்து பறிகக்கப்பட்ட காணி, மீள் ஒப்படைக்கப்பட வேண்டும். இவ்வாறான உடனடி மனிதாபிமான பணிகளுள்ளன.

இவற்றுடன் கடந்த 60 வருடங்களுக்கு மேலாக பல ஒப்பந்தங்கள் பேச்சுவார்த்தைகள செய்யப்பட்டு எதுவும் பயனளிக்கவில்லை. ஆகவே பல எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் தமிழ் மக்கள் இந்த வாக்குகளை அளித்துள்ளார்கள்.

ஆகவே தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வை காணுவதற்கும் நிரந்தர சமாதானத்தை காணுவதற்கும் இந்த அரசாங்கம் கவனத்தில் கொண்டு செயற்படவேண்டும். இந்த நல்ல விடயங்களை செயற்படுத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு எப்போதும் தயாராகவுள்ளது.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூட எமது மனிதாபிமான பிரச்சினைகளை முன்வைக்கவில்லை என்ற ஆதங்கம் எமது கட்சிக்குள்ளும் இருந்தது. இது தமிழ் மக்கள் மத்தியிலும் இருந்தது. இவ்வாறு இருந்தாலும் கூட ஆட்சி மாற்றத்தின் ஊடாக இவர்கள் இந்த பணிகளை செய்வார்கள் என்று நம்பிக்கை இருக்கின்றது என்று தெரிவித்தார்.

மேலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தேசிய அரசாங்கத்தில் இணைந்து கொள்வதற்கும் அமைச்சு பதவிகளை பெறுவதற்கும் தயாராக உள்ளதா? என்று வினவிய போது, இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய அங்கங்களான நாடாளுமன்ற குழு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான ஒருங்கிணைப்புக் குழு என்ற இரு முக்கிய அமைப்புகளும் கூடி, அரசாங்கத்துடன் எதிர்காலத்தில் எவ்வாறு எப்படி செயற்படுவது என்பது தொடர்பில் முடிவெடுக்கும என்று தெரிவித்தார். (2-250)

# மக்களுக்கு வன்னி யுத்தத்திற்கு பின்னர் இரண்டாவது சுதந்திரம் கிடைத்துள்ளது

## ஐ.தே.கட்சியின் முல்லை.மாவட்ட அமைப்பாளர் பெருமிதம்

(முல்லைத்தீவு)

இனவாதம், மதவாதங்களை பிரயோகித்து அரசியல் செய்ய முடியாது என்பதை மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் நிரூபித்துள்ளார்கள்.

வன்னி யுத்தத்துக்கு பின்னர் மக்களுக்கு இரண்டாவது சுதந்திரம் கிடைத்துள்ளது என ஐக்கிய தேசியக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் ஜமால்தீன் ரிசாம் தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மைத்திரிபால சிறிசேன வெற்றியடைந்துள்ளமையைக் கொண்டாடும் விசேட நிகழ்வொன்று கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு நெடுங்கேணி சந்தியில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு மக்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்,

கடந்த முப்பது வருடங்களாக நாட்டில் புரையோடிக்கிடந்த யுத்தம் முடிவடைந்து சுதந்திரம் ஏற்பட்ட போது கூட, மக்கள் இவ்வாறானதொரு மகிழ்ச்சியைக் கொண்டாடவில்லை. அந்தளவுக்கு முன்னாள் ஜனாதிபதி மீது மக்கள் வெறுப்புடன் இருந்துள்ளார்கள்.

இனவாதங்களைப் பேசி இனங்களுக்கிடையில் அமைதியின்மையை ஏற்படுத்தி அதன்மூலம் அரசியலின் இருப்பை தக்க வைத்துக்கொள்ளலாம் என்று எதிர்பார்த்தவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டியுள்ளனர்.

எனவே, தற்போதைய புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசாங்கத்தில், இனவாதம், மதவாதம், பிரதேசவாதம் என்பவற்றுக்கு இடம் கிடையாது. நாம் எல்லோரும் ஒரே நாட்டு மக்கள் என்ற உணர்வுடன் ஒற்றுமையாக செயற்படுவோம்.

புதிய அரசாங்கத்தின் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்தை மேலும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இங்கு வாழும் தமிழ், முஸ்லிம் மக்களை இணைத்துக்கொண்டே அபிவிருத்திப்பணிகளை செய்வதற்கு ஆசைப்படுகிறோம்.

எனவே, எதுவிதமான பேதங்களுமின்றி எல்லோரும் ஒற்றுமைப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

## சிறப்பு பொங்கல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் நீரை விவசாய நிலங்களுக்கு பாய்ச்சியதன் 95 ஆவது ஆண்டு நிறைவையொட்டி சிறப்பு பொங்கல் நிகழ்வு எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கனகாம்பிக்க அம்பாள் ஆலய முன்றிலில் 95 பொங்கல் பானைகள் வைத்து பொங்குவதற்கு ஏற்பாடாகியுள்ளதாக இரணைமடு விவசாயிகளின் சம்மேளனத்தின் செயலாளர் உ.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் வடமாகாண சபையின் பிரமுகர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார். (2-277)

# வீதிப்புனரமைப்பு பணிகளை விரைந்து செயற்படுத்துங்கள்

## பொதுமக்கள் வேண்டுகோள்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் ஸ்கந்தபுரம் முதல் அக்கராயன் மகா வித்தியாலயம் வரையான 2 கிலோமீற்றர் நீளம் வரையான வீதி குன்றும் குழியுமாக இருப்பதால் அக்கராயன் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் தொடக்கம் பொதுமக்கள் வரை பெரும் சிரமப்படுகின்றனர்.

1 ஏ.பீ பாடசாலையான மேற்படி பாடசாலையில் வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் [illegible], அமதிபுரம், ஸ்கந்தபுரம், [illegible], கண்ணகைபுரம், யூனியன்குளம், கோணாவில், அக்கராயன் கிழக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 800 வரையான மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

மாணவர்கள் பாடசாலைக்கு செல்லும் இந்த வீதியானது மழை காலங்களில் சேறும் சகதியாகவும், வெயில் காலங்களில் புழுதி படர்ந்த நிலையிலும் உள்ளது.

இந்த வீதியை புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்களும் பாடசாலை நிர்வாகமும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

எனினும் இந்த வீதி இதுவரையில் திருத்தப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரியின் 100 நாட்கள்

அமெரிக்க இரட்டைக் கோபுரம் மீது விமானங்கள் மோதிய பொழுதில் அமெரிக்க ஜனாதிபதி புஸ் ஒரு கோடு கிழித்தார். எம்முடன் நிற்கலாம். இல்லையென்றால் அவர்களுடைனேயே.

அதனைப் போன்றதொரு தெரிவே தமிழர்களுக்கு இந்த இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் கொடுக்கப்பட்டு இருந்தது.

அறுபது ஆண்டுகளாக தொடரும் இனப்பாரபட்சம், இன அடையாளம் சிதைத்தல், இன அழிப்பு என்பனவற்றை உச்சமாக நிகழ்த்தியவன் ஒரு பக்கம், அவனுக்கு பாதுகாப்பு மந்திரியாக இருந்தவன் இன்னொரு பக்கம்.

ஆனாலும் தமிழர்கள் தமது சத்திய ஆவேசத்தை வாக்குகளின் காட்டி இருந்தார்கள்.

இனப்படு கொலையாளி மகிந்த தோற்று அம்பாந்தோட்டையின் தனது சொந்த ஊருக்கு மூட்டை கட்டிவிட்டார். மைத்திரி பால சிறிசேனா இலங்கை ஜனாதிபதியாக பதவி ஏற்றுமுள்ளார்.

சீனாவின் அரசின் வெளிவிவகார பேச்சாளர் கொங் லீ மற்றும் அமெரிக்க ஜோன் கெரி அனைவரும் புதிய ஜனாதிபதியுடன் சேர்ந்து செயலாற்ற விருப்பம் தெரிவித்துள்ளனர்.

ஆனால், அவரோ தனது வேலை இன்னும் நூறு நாட்கள்தான் என்று நூறு நாள் திட்டத்தை அறிவித்துள்ளார்.

இந்த 100 நாட்களில் பலதரப்பினரை அவர் சமாளித்தாக வேண்டும்.

இதனையே இன்னொரு பக்கமாக சொல்வது என்றால் பல தரப்பினர் தாம் உறுதி கொடுத்த தமது மக்கள் இவரை தொடர்ந்து நம்ப வைத்தாக வேண்டிய தேவையும் இருக்கிறது.

இந்திய அரசியல்வாதிகளுக்கு சற்றேனும் குறைந்தவராக தம்மை காட்டிக் கொள்ளாமல் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவும் ஏராளம் சலுகைகளையும் மானியங்களையும் கொடுப்பனவுகளையும் அறிவித்திருக்கிறார்.

இந்த மானியங்கள், இலவசங்கள் என்பவற்றை வழங்குவதால் ஓரளவுக்கு



சிங்கள மக்கள் மத்தியில் இந்த 100 நாள் காலத்தை பெரிய பிரச்சினைகள் ஏதும் இன்றி கடந்து விட முடியும் என்று நம்புகின்றார்.

இவற்றை வழங்க அல்லது நிறைவேற்ற பல பில்லியன் நிதி தேவைப்படும்.

இந்த நிதிக்கான தேடலாக சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் கடன் வழங்கும் நாடுகளை அணுகும் போது நிதி வருகின்றதோ இல்லையோ அந்த அமைப்புகள், நாடுகள் போடும் புதிது புதிதான நிபந்தனைகள் வந்துசேரும் என்பது இக்காலத்தின் மிகப்பெரிய பிரச்சினை, சமாளித்தே ஆகவேண்டும்.

இப்படியான ஒரு அழுத்தத்துடன் கூடிய நிபந்தனையினால்தான் யூகோஸ்லாவியாவின் முன்னாள் அதிபர் ஸ்லோபடான் மிலோசவிச்சை சர்வதேச நீதிமன்றத்துக்கு 28 யூன் 2001 இல் மேற்குலகம் கொண்டு வந்ததையும் புதிய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனா மறந்திருக்க மாட்டார்.

எரிக்சொல்கெய்முக்கே வரிப்புலி சீருடை அணிவித்து கொழும்பில் கொடும்பாவி கொளுத்திய இனம் அல்லவா சிங்கள இனம்.

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனா நாட்டின் மானத்தை விற்றுவிட்டார் என்று பெரும் குழப்பம் ஏற்படுவதை இந்த 100 நாள் காலத்துள் தவிர்க்கவே அவர் விரும்புவார்.

இந்த 100 காலத்தில் தமிழ் பாராளுமன்ற அரசியல் தரப்பு, முஸ்லிம் தரப்பு, மலையகத் தரப்பு என்பன ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனாவை வைத்து தமது மக்களுக்கு இருக் கின்ற அழுத்தங்களை பயங்களை ஓரளவு குறைக்கவே முனைவர். அது யதார்த்தமே.

ஆனால், இதிலே மிக முக்கியமானது என்னவென்றால், யார் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனாவுக்கு ஆக பக்கத்தில் நெருங்குவது என்பதே, அதற்கான ஆதாரமாக இந்த மூன்று தரப்புகளும் தங்களது நாலு லட்சம் வாக்குகளே மைத்திரியின் வெற்றிக்கு காரணம் என்று சொல்லி வைக்கும்.

அந்த நாலு லட்சமா இந்த நாலு லட்சம் என்று குழப்பி போகத்தான் முடியும் மைத்திரியால்....

100 நாளின் முதல் ஊடல் இந்த தரப்பிலிருந்தே முதல் ஆரம்பித்துள்ளது.

பதவியேற்ற பின்னர் உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா தமது வெற்றிக்கு உழைத்தவர்களின் பெயர்களில் தமிழ்கட்சிகளின் தலைவர்கள் பெயரை சொல்லாமல் விட்டுவிட்டதை மனோகணேசன் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆனால், கடந்த கால சிங்கள தலைமைப்பீடத்தில் அமர்பவர்களின் அரசியல் என்பது வடக்கு- கிழக்கு தமிழர்கள், முஸ்லிம் மக்கள், மலையக மக்கள் ஆகிய மூன்று தரப்பினுள்ளும் பேதங்களை பிரிவுகளை முரண்களை உருவாக்கி அதனூடாக எப்படித்தான் அரசியல் ரதத்தை செலுத்தினார்கள் என்பது இந்த 100 நாள் திட்ட காலப் பகுதியில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனா கற்றுக்கொள்ளப் போகும் பால பாடம்.

தேர்தல் விஞ்ஞாபனத்திலோ தென்னிலங்கையின் முக்கிய தேர்தல் பிரச்சார கூட்டங்களிலோ இனப் பிரச்சினை தீர்வு சம்பந்தமாக எதுவுமே சொல்லாத ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அந்த மௌனத்தையே ஜனாதிபதி நாற்காலியிலும் தொடர முடியாது என்பதை இப்போதே 13 ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்து, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்து அது இது என்று பக்கத்து உபகண்டத்திலிருந்து குரல்கள் வரத் தொடங்கியுள்ளன.

சர்வதேசம் அடிக்கடி உச்சரிக்கும் அதே வார்த்தையான தமிழர்களின் பிரச்சினைக்கு கௌரவமான ஒரு தீர்வை காணும்படி மேற்குலகும் சொல்லத் தொடங்கியுள்ளன.

தமிழர்களுக்கு ஏதும் வழங்கினால் அதனை எதிர்ப்பதையே அரசியலாக பல தசாப்தங்களாக நடத்தி சிங்கள மக்களை உசுப்பேத்தி வைத்திருக்கும் தார்மீக பொறுப்பு புதிய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனாவுக்கும் உண்டு (ரணிலுக்கும் கூட)

ஆக, இப்போது ஏதாவது ஒப்புக்குத்தன்னும் வழங்கியே ஆகவேண்டிய இடத்தில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனா.

இவரால் தமிழின எதிர்ப்பை சொல்லியே அரசியல் செய்த சிங்கள மக்கள் இன்னமும் அதே மாறாத சிங்கள பேரினவாத நினைப்புடனும் தமிழின விரோதத்துடனுமே...

100 நாள் திட்டத்தின் மிகப்பெரும் சவால் இதுவே...

இன்னுமொரு பெரும் பிரச்சினை இந்த தொண்ணூறு நாட்களுக்குள் காத்திருக்கிறது.

மகிந்தவை விட்டு கடைசி நேரத்தில் கழன்று வந்தவர்கள் எல்லோரும் ஏதோ ஒரு பதவி கனவுடனேயே இருப்பார்கள்.

அதிலும் கனமான அதிகாரம் நிறைந்த பதவிகளையே.

எல்லோருக்கும் கிள்ளிப் போட்டாலும்கூட பலர் ஒன்றுமே இல்லாமல் விடப்படப்போகிறார்கள்.

பெரிய ஒரு எதிர்ப்பு கூட்டணியை கொள்கை ஏதுமற்று உருவாக்குவது பெரிய விடயமே அல்ல.

ஆனால், அதிகாரம் வந்தவுடன் அந்த கூட்டணியில் உள்ள அனைத்து அரசியல் தரப்புகளையும் திருப்திப்படுத்துவது லேசுப்பட்ட விடயமே அல்ல.

பல குழப்பங்கள், அறிக்கை போர்கள், உள்வெட்டுகள், பிளவுகள் வரப் பார்க்கும்.

அதுவும் இந்த 100 நாள் திட்ட கால பிரச்சினைகளில் ஒன்றே.

முரண்பாடான பல தரப்புகள், மிக மிக வேறுபட்ட அபிலாசைகளுக்காக பலவிதமான எதிர்பார்ப்புகளுடன் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி இவை எல்லாவற்றையும் எப்படி சமாளிக்கப்போகிறார் என்பதே வரப்போகின்ற 100 நாள் திட்டக் காலத்தின் முக்கிய விடயம்.

எல்லோர்க்கும் நடுநிலையாளனாக சர்வதேசத்துக்கு, இந்தியாவுக்கு, சீனாவுக்கு என்று எல்லோருக்கும் நண்பனாக காட்டுவதற்கு வெகுவாக முயற்சித்து பார்ப்பார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. ஆனால், அது முடியவே முடியாது.

ஒரு கட்டத்தில் இப்போது அணிந்திருக்கும் வெள்ளந்தியான முகமூடியை கழற்றி எறிந்துவிட்டு வழமையான தனது இனவாத முகத்துடனே தொடவும் செய்வார்.

ஏனென்றால் எந்தவொரு இனவாதியும் மிக நீண்ட நாட்கள் கௌதம புத்தராக வேடம் தரித்து நின்ற வரலாறே கிடையாது.


100 நாள் காலத்தினுள்ளேயே இது நடந்தாலும் நடந்துவிடும். பார்ப்போம்.

-ச.ச.முத்து-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கில் வாழும் தமிழ் மக்கள்

# அரசியல் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை கோருகின்றனர்



## முன்னாள் அமைச்சர் டிலான் தெரிவிப்பு

(கொழும்பு)

**வடக்கின் வசந்தம் போன்ற பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதை மக்கள் கண்கூடாக பார்த்தனர். இருந்த போதிலும் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு வடக்கு மக்களின் ஆதரவு கிடைக்கவில்லை. யாழ்தேவி புகையிரதப் பாதையை விடவும் வடக்கு மக்கள் அரசியல் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தையே கோரி நிற்கின்றனர் என்ற உண்மையை உணர்ந்தவராக முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா ஆதங்கத்துடன் தெரிவித்துள்ளார்.**

அதேவேளை வடக்கு, கிழக்கு மக்களின் வாக்குகள் கிடைக்கவில்லை எனவும் முன்னாள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலில் ஆளும் கட்சி அடைந்த தோல்வி தொடர்பில் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனை தெரிவித்தார்.

ஏதாவது ஓர் வகையில் அதிகாரத்தை பகிர வேண்டுமென நான் அரசாங்கத்தை கோரியிருந்தேன். அது நடைபெறவில்லை.

வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் போன்ற பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களை மக்கள் கண்கூடாக பார்த்த போதிலும், தேர்தல்களில் ஆதரவு கிடைக்கவில்லை.

யாழ்தேவி புகையிரத பாதையை விடவும் வடக்கு மக்கள் அரசியல் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தையே கோரி நின்றனர்.

மகிந்த ராஜபக்ஷவா? அல்லது மைத்திரிபால சிறிசேனவா? என்பதனை கருத்துக் கணிப்புக்கள் மூலம் தீர்மானிக்க முடியாது.

அதனை தீர்மானிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவிடமே காணப்படுகின்றது.

கருத்துக் கணிப்பு நடத்தும் ஒவ்வொரு நபரும் ஏதேனும் ஓர் வகையில் ஓர் வேட்பாளரைச் சார்ந்தே இருக்கின்றார்கள்.

எனவே கருத்துக் கணிப்புக்கள் பற்றி எனக்கு எவ்வித நம்பிக்கையும் கிடையாது என டிலான் பெரேரா தீர்மானித்துள்ளார். (இ-5)

# மைத்திரியின் புதிய அரசாங்கத்திற்கு மாகாணசபை உறுப்பினர் எச்சரிக்கை

அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாவிட்டால் மகிந்த ராஜபக்ஷவை விடவும் விரைவில் ஆட்சியை விட்டு வெளியேறிச் செலல நேரிடும் என மேல் மாகாண சபை உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

கட்சி பேதமின்றி, இன, மத, பேதமின்றி மைத்திரி ஆட்சிக்காக மக்கள் எமக்கு வழங்கிய ஆணையை நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு புரிந்து கொள்ளத் தவறினால் ராஜபக்ஷாக்களை விடவும் விரைவில் வெளியேற நேரிடும்.

கொலன்னாவ பிரதேசத்தில் போதைப் பொருள் பயன்பாட்டை இல்லாதொழிக்குமாறு நாம் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தோம்.

கொலன்னாவ பிரதேசத்திற்கு யார் போதைப் பொருள் கொண்டு வந்தார்கள் என்பது எமக்கு நன்றாகத் தெரியும்.

போதைப் பொருள் வர்த்தகர்கள் தலைதூக்க இனி இடமளிக்க முடியாது என மரிக்கார் தெரிவித்துள்ளார்.ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிட்ட போது அவர் இதனை தெரிவித்தார். (இ-5)

# மகிந்தவின் அரசியல் சாணக்கியத்தால் மேற்குலக நாடுகள் படுதோல்வியாம்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கூறுகிறது

(கொழும்பு)

நாட்டில் மக்கள் கிளர்ச்சியை ஏற்படுத்தி ஆட்சி மாற்றத்தை உருவாக்க முயன்ற மேற்குலக நாடுகளின் முயற்சிகள் தோல்வி கண்டுள்ளதோடு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசியல் சாணக்கியத்தோடு ஆட்சி மாற்றத்திற்கு வழிவகுத்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும் எனத் தெரிவித்த தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச்செயலாளர் வசந்த பண்டார புதிய பிரதமரின் கீழ் புதியதொரு அமைச்சரவையே இயங்குமென்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக வசந்த பண்டார மேலும் தெரிவிக்கையில்,



அரபு நாடுகளை போன்று மக்கள் கிளர்ச்சியை இலங்கையில் ஏற்படுத்தி இரத்த ஆற்றை ஓட வைத்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதே மேற்குலக நாடுகளின் நிகழ்ச்சி நிரலாக இருந்தது.

ஆனால், முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் அரசியல் சாணக்கியத்தால் சுமுகமான முறையில் ஆட்சி மாற்றம் நடைபெற்றது. இது மகிழ்ச்சியளிக்கும் விடயமாகும்.

அத்தோடு தேர்தலும் நீதியும் சுதந்திரமானதுமாக நடைபெற்றது. இதுவும் வெளிநாடுகளின் தலையீடுகளுக்கு இடமளிக்க முடியாத நிலைமையை ஏற்படுத்தியது.

அதேவேளை, அரசியலமைப்புக்கமைய புதிய பிரதமரின் கீழ் புதியதொரு அமைச்சரவையே நியமிக்கப்படும்.

இதன் கீழ் இப்பாராளுமன்ற காலம் முடியும் வரை ஆட்சி தொடரும் என்றும் வசந்த பண்டார மேலும் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## களிப்பு–மகிழ்ச்சி–ஆனந்தம்

"எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போய்விட்டது சேர்'' என்று கூறிக்கொண்டு என்னிடம் ஒருவர் வந்தார். என்னிடம் சிறிதுநேரம் பேசிவிட்டு அதன்பின் அப்படி கூறியிருந்தால், அதிலே ஒரு அர்த்தம் இருந்திருக்கும்.

என்னிடம் வருவதற்கு முன்னரே வாழ்க்கை வெறுத்துவிட்டது என்று கூறிவிட்டாரே.

"என்ன சேர் விடயம் "என்று விசாரித்தேன்.

"எங்கள் வீட்டிலே தினமும் மூன்று வேளையும் ஒரே மாதிரி சாப்பாடு. வித்தியாசமே இல்லை.... இப்படியாக மூன்று மாதங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். அதைவிட பட்டினி கிடந்து இறந்து விடலாம் என்று நினைக்கிறேன்" என்றார்.

ஒரு பெரியவர் (ரஜினீஷ்) கூறிய தத்துவத்தைக் கூற ஒரு நபர் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தேன். இப்போது அந்த ஒருவர் கிடைத்துவிட்டார். விடுவேனா? சொல்ல ஆரம்பித்தேன்.

நாம் அனுபவிக்கும் உணர்வுகளிலே மூன்று விதம் உள்ளது. அதாவது களிப்பு, மகிழ்வு,ஆனந்தம்.

"களிப்பு " என்பது உடம்பைப் பொறுத்தது.

"மகிழ்வு " என்பது மனதைப் பொறுத்தது.

"ஆனந்தம்" என்பது ஆன்மாவைப் பொறுத்தது.

இப்படி இந்த மூன்று வகையான சுவைப்புக்களின் தன்மையும் வேறுவேறாக உள்ளது.

முதலிலே "களிப்பு " எடுத்துக் கொண்டால், நமது புலன்களுக்குக் களிப்பைத் தரக்கூடிய பொருட்களுக்கு சில விசேட குணம் உள்ளது.

விரைவிலே சலிப்பை ஏற்படுத்தும் உணவு, உடை இவையெல்லாம் களிப்பை தரக்கூடிய பொருட்களாகும். புலன்களுக்கு களிப்பைத் தரக்கூடிய இதுமாதிரி பொருட்கள் எல்லாம் முதல்தடவை நமக்குக் கொடுக்கும் களிப்பை இரண்டாவது தடவையும் கொடுக்காது. மூன்றாவது தடவை இன்றும் குறையும் கடைசியிலே வெறுப்பாகவே மாறிவிடும்.

நாம் உணவு சாப்பிடுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். அதில் இட்லியை எடுத்துக்கொண்டால், ஒவ்வொன்றாக இட்லியைத் தொடர்ந்து சாப்பிடுகிறோம் என்று வைத்துக்கொள்வோம். முதல் இட்லி தரக்கூடிய சுவையை முப்பதாவது இட்லி சாப்பிடும் போது தருமா?

முதல் தடவையாக புதிய சட்டை அணியும் சந்தோஷம், அச்சட்டையை நாம் பத்தாவது தடவையாக அணியும் போது வருமா.... இதுதான் "களிப்பு " – அதாவது விரைவாகச் சலிப்பை தரக்கூடியது.

ஆனால் "மகிழ்வு" என்பது அப்படியல்ல.... ஒருவர் அனுபவிப்பதால் இன்னொருவருக்கு குறைந்து போகாது.

காலையிலே சூரிய உதயத்தை பார்த்து சந்தோஷப்படுகிறீர்கள். அதையே இன்னொருவர் பார்த்து சந்தோஷப்பட்டால் குறைவு ஏற்படாது.

மூன்றாவது சுகம் தரக்கூடியது. "ஆனந்தமே "

அது எப்படி?.....

இது நம்மில் இருந்து சுரக்கிறது. மனம் சலனங்களில் இருந்து விடுபடும்போது, இந்த ஆனந்தம் பிறக்கிறது. இது நிலையான சுகம். களிப்பிலிருந்து மகிழ்வுக்கும் மகிழ்விலே இருந்து ஆனந்தத்திற்கும் செல்வதுதான் மனிதன் நடத்த வேண்டிய முக்கியமான பயணம்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சத்தில் பணிந்துவிடக்கூடாது




இப்படி ஏன் நடக்கிறது? அரசியல்ரீதியாக இப்படியொரு வன்முறைத் தாக்குதல் நடக்கும் போதெல்லாம் எழும் அர்த்த பூர்வமான கேள்வி இது:

எதற்காக இப்படிக் கொலை வெறித் தாக்குதலை நடத்து கிறார்கள்?

இதன்மூலம் எந்த மாதிரி யான கருத்துகள் மக்களிடமிரு ந்து வரவேண்டும் என்று எதிர் பார்க்கிறார்கள் அல்லது வரக் கூடாது என்று எதிர்பார்க்கிறார கள்?

பிரெஞ்சுப் பத்திரிகை அலு வலகம் மீதான தாக்குதலில் 12 பேர் இறந்திருப்பதை யாரும் கவனிக்காமல் இருக்க முடியாது.

ஆயுதக் காவலருடன் இரு ந்த பத்திரிகை அலுவலகத்துக் குள்ளேயே நவீன ஆயுதங் களுடன் புகுந்து கொலைவெறித் தாக்குதலை நடத்தியிருக்கிறார் கள் என்றால், தாக்கப்பட்ட பத்திரி கையாளர்களுக்கு அனைத்து வகையிலான ஆதரவும் இப் போது தேவைப்படுகிறது.

கருத்துச் சுதந்திரத்தைத் தூக்கிப் பிடித்ததற்காகக் கொல்லப் படுகிறார்கள், படுகாயப்படுத்தப் படுகிறார்கள் என்றால், அவர் களுடைய தொழில் ஆர்வத் தைப் பாராட்ட வேண்டும். அவர் களுடைய இறப்புக்கு அஞ்சலி செலுத்தப்பட வேண்டும்.

ஆயிரம் வார்த்தைகளை அடுக்கடுக்காக எழுதித் தங்களு டைய கருத்தைச் சொல்கிறவர் களைவிட, சில கோடுகளாலும் புள்ளிகளாலும் தாங்கள் சொல்ல வருவதை ரத்தினச் சுருக்க மாகவும் மனதில் பதியும் வகை யிலும் நகைச்சுவை பொங்கச் சொல்கிற கேலிச்சித்திரப் பத்திரி கையாளர்கள் துணிச்சல் மிக்க வர்கள்.

தவறுகளைச் சுட்டிக்காட்டு வதில் கேலிச்சித்திரங்களுக்கு இணையான வடிவம் வேறு இல்லை. கொலைகாரர்களின் கைகளில் இருந்த நவீன துப்பாக் கிகள், ராக்கெட் லாஞ்சர்களைவிட அவர்களுடைய பேனாவும் தூரி கையும் வலுவானவை. ஜனநாய கத்தின் வலிமையான ஆயுதங் களில் ஒன்றுதான் கேலிச்சித்தி ரம். அதை வரையும் பத்திரிகை யாளர்கள் அதற்குத் தரும் விலை சமயத்தில் உச்சபட்சமாக இதைப் போன்ற உயிர்த் தியாகமாகவும் அமைந்துவிடுகிறது.

### பயங்கரவாதம் என்றொரு தொழில்நுட்பம

பயங்கரவாதத்தை ஒழிக்க எளிதான வழி ஏதும் இல்லை என்று அதை ஆய்வுசெய்த ரிச்சர்ட் இங்கிலீஷ் எழுதியதைத்தான் அனைவரும் ஒப்புக்கொள்கின் றனர். பயங்கரவாதம் என்பது பயங்கரவாதிகள் கையாளும் தொழில்நுட்பம்தானே தவிர, அது சித்தாந்தம் அல்ல. பயங்கரவா தம் என்பது ஒரு செயலைச் செய் யும் விளைவுதானே தவிர, அதற் கான காரணம் அதுவல்ல.

ஏராளமானோரின் உயிர்க ளைப் பலி வாங்குவதன் மூலம் பயங்கரவாதிகள் இரண்டு விடய ங்களைச் சாதிக்கப் பார்க்கிறார் கள். எங்களைப் பற்றி விமர்சித் தால் இதுதான் நடக்கும் என்று விமர்சித்தவர்களுக்கும் விமர் சிக்கப்போகிறவர்களுக்கும் எச்சரி க்கை செய்கிறார்கள். பிறெஞ்ச மக்களுடைய மனங்களில் தங்க ளைப் பற்றிய அச்சத்தைப் பரப்பி யிருக்கிறார்கள்.

வேறு மாதிரியாகச் சொல்வதா னால், சுதந்திரமாகச் சிந்திக்கும் மனிதர்களைக்கூட இனி குழு சார்ந்து சிந்திக்க வைக்க முயல் கிறார்கள். மேற்கத்திய ஜனநாய கம் அளிக்கும் சுதந்திரம் என்பது பெயரளவுக்குத்தான் என்று கரு தும் அவர்கள், தங்களுடைய (மதம் சார்ந்த) கட்டுப்பாடு ஒருமுக மானது, வலுவானது, துணிச் சலானது, நிரந்தரமான முத்திரை யைப் பதிக்கவல்லது என்று கருது கிறார்கள்.

### அடிப்படைவாதத்தைப் படிக்கத் தவறிவிட்டோம்

மேற்கத்திய நாடுகள் கடந்த 25 ஆண்டுகளாகவே மத அடிப் படைவாதத்தை ஊன்றிக் கவனி த்து, உரிய பாடம் படிக்கத் தவறி விட்டன. எகிப்தின் சையித் குதுப் தொடங்கிய முஸ்லிம் சகோதர அமைப்பு, ஆப்கானிஸ்தானின் தலிபான்கள், ஈரானின் அயதுல் லாக்கள், பின்லேடனின் அல்-காய்தா, சிரியா-ஈராக்கின் ஐ.எஸ். ஆகிய அமைப்புகளில் மேற்கத் திய எதிர்ப்பு என்பது வெவ்வேறு அளவுகளில் கொதிநிலையில் உள்ளது.

மத்திய கிழக்கில் மேற்கத்திய நாடுகளின் தலையீட்டுக்கு எதிரா கக் கிளர்ந்தெழுவது அவர்களு க்கு கலாச்சாரமாகவே ஆகிவிட் டது. இந்த இயக்கங்கள் தங்கள் மதததவர் வ்ாழும் நாடுகளிலேயே மதச்சார்பற்ற அரசுகளைக்கூடச் சகித்துக்கொள்ள முடியாமல் கவி ழ்ப்பதில் ஈடுபட்டன. [illegible] [illegible] பட்டன.

ரத்தத்துக்கு ரத்தம் என்ற வகையில் பழிவாங்குவது மனித இனத்தின் சாபக்கேடு. ஆனால், அல்-காய்தாவைப் போலவே அமெரிக்காவும் உணராததால் இரட்டைக் கோபுரத் தாக்குதலுக் குப் பிறகு, சில ஆண்டுகளுக்குத் தாக்குதல்கள் தொடர்ந்தன. அல்-காய்தாவின் கனவு பலித்தது. மூன்று டிரில்லியன் டாலர்கள் செலவாகும் அளவுக்கு மேற்கத் திய நாடுகள் எதிர்த் தாக்குதல் களில் ஈடுபட்டன. ஆயிரக் கணக் கான உயிர்கள் பலிவாங்கப்பட்டன.

ஏராளமான அரசுகள் நிலை குலைந்தன. ஜனநாயக நாடுகள் சர்வாதிகார நாடுகளாக மாறின. பல நாடுகள் தங்களுடைய மக்க ளுக்கு அளித்த சுதந்திர உரிமை கள் பலவற்றைப் பறித்தன. அமெ ரிக்கா, பிரிட்டன் போன்ற நாடு களில் ஆட்கொணர்வு மனு தாக் கல் செய்யும் உரிமை, தனிப்பட்ட நபரின் தகவல் தொடர்பு உரிமை, சட்டபூர்வமான நடவடிக்கைகளுக் கான உரிமை - ஏன் சில வேளை களில் பேச்சுரிமையும்கூட - மறுக்கப்பட்டன அல்லது குலைக் கப்பட்டன. அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்ட அரசுகள், நாட்டு நலனுக்காக அதைச் செய்வதாகக் கூறிக்கொண்டு தப்பித்தன.

### பயங்கரவாதிகளின் எதிர்பார்ப்பு

பிரான்ஸ் நாட்டில் இப்போது செயற்பட்டுள்ள பயங்கரவாதி களும், அரசு அதைப் போலவே செயற்பட வேண்டும் என்று எதிர் பார்க்கிறார்கள். அரசு தன்னு டைய கெடுபிடிகளை மேலும் இறுக்க வேண்டும் என்று எதிர் பார்க்கிறார்கள். ஊடகங்கள் தங்களுடைய செயல்களைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண் டும் என்று அரசு கூற வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

புதிய சட்டம், புதிய கட்டுப்பாடு கள், சுதந்திரமான செயல்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைப் பட்டியலில் மேலும் சில சேர்க் கபபட வேண்டும் என்பதே இதைச் செய்தவர்களின் நோக்கம். பிரிட் டன் உள்ளிட்ட மேற்கத்திய நாடு களில் கட்டுப்பாடுகளை அதிகரித் துக்கொண்டே செல்ல விரும்பும் அதிகார வர்க்கம், வாய்ப்புக்காக ஆவலோடு காத்துக்கொண்டிருப் பது அவர்களுக்குத் தெரியும்.

பலவீனமான, தோல்வியுற்ற அரசுகள்தான் இத்தாக்குதலைத் தங்கள் மீது தொடுக்கப்பட்ட போராகக் கருதும். அவைதான் தங்களுடைய தலைவர்களுக் குப் பாதுகாப்பை அதிகரித்து அவர்களை நிலவறைகளில் தங்கவைக்கும். மக்களுடைய உரிமைகளைக் கொடூரமாகக் கட்டுப்படுத்தும். உண்மையை வரவழைப்பதாகக் கூறிச் சித்ர வதைகளைக்கூடக் கட்டவிழ்த்து விடும். இப்படிப்பட்ட தாக்குதல்கள் எங்கு வேண்டுமானாலும் எப் போது வேண்டுமானாலும் நடக் கும் என்பதை அரசியல் தலை வர்கள் ஏற்க மாட்டார்கள். சுதந் திரமான சமூகமே அதைக் கட்டுப படுத்திவிடும் என்பதை அவர்கள் ஏற்க மாட்டார்கள்.

### அச்சம்தான் அடிப்படை


பயங்கரவாதம் சாதாரண மான குற்றச்செயல் இல்லை. அது ஏற்படுத்தும் விளைவுகளை யும் பொறுத்திருக்கிறது. ஒரு பிரதேசத்தைக் கைப்பற்றும் அளவுக்கோ அரசுகளைக் கவிழ் க்கும் அளவுக்கோ அது ஆற்றல் மிக்கது அல்ல. மக்களின் மனங் களில் அச்சத்தை மூட்டக்கூட அது செய்தி ஊடகங்களையும் அரசியல்வாதிகளையும்தான் நம்பியிருக்கிறது.

பயங்கரவாதத்தை அதனு டைய எல்லை, அதிகாரத்துக்கு உட்பட்டுச் சென்றே சந்தித்தாக வேண்டும். பதிலுக்கு அச்சமூட்டி னால் அது பயந்துவிடாது. பயங் கரவாதச் செயல் நடந்த பிறகு அச்சத்தைக் காட்டக் கூடாது, அதிக மாக உணர்ச்சிவசப்படக் கூடாது, நடந்த சம்பவங்கள் குறித்து அதிக விவரங்களை வெளியிடக் கூடாது. ஒவ்வொரு தாக்குதலை யும் ஒரு பயங்கர அனுபவமாக மட்டும் கருதி அதை அப்படியே கடந்து செல்ல வேண்டும். அப்ப டிச் செய்தால்தான் பயங்கரவாதி களுக்கு குரூரத் திருப்தி ஏற்படா மல் போகும். பயங்கரவாத்தை வெல்ல அது ஒன்றே வழி.

-'தி கார்டியன்'-

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 37 இலட்சம் மக்கள் ஒன்றிணைந்து பேரணி கமரூன் உள்ளிட்ட தலைவர்களும் பங்கேற்பு





**(பாரிஸ்)**

**பாரிஸ் நகரில் தீவிரவாதத்திற்கு எதிராக ஒற்றுமை பேரணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நேற்று நடந்த பேரணியில் 3.7 மில்லியன் பொதுமக்கள் மற்றும் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் உள்ளிட்ட உலக நாட்டு தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.**

புகழ்பெற்ற பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வாரப்பத்திரிகை 'சார்லி ஹெப்டோ' பத்திரிகை கடந்த புதன் கிழமை தீவிரவாத தாக்குதலுக்கு உள்ளானது.

தாக்குதல் நடத்தப்பட்ட 'சார்லி ஹெப்டோ' பத்திரிகை, அடிக்கடி சர்ச்சைகளில் சிக்குவது வழக்கம். கடந்த 2006 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், டென்மார்க் பத்திரிகை ஒன்றில் வெளியிடப்பட்ட நபிகள் நாயகம் பற்றிய கேலிச்சித்திரத்தை மறுபிரசுரம் செய்ததால் கடும் எதிர்ப்பை சந்தித்தது.

கடந்த 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம், மீண்டும் அதுபோன்ற கேலிச்சித்திரத்தை அட்டைப் படமாக வெளியிட்டதையடுத்து, அதன் அலுவலகம் குண்டுவீசி தாக்கப்பட்டது.

கடந்த 2012ஆம் ஆண்டு, முஸ்லிம்களுக்கு எதிரான அமெரிக்க படத்தை கண்டித்து பல நாடுகளில் வன்முறை சம்பவங்கள் நடந்த போது, மீண்டும் அதேபோன்ற கேலிச்சித்திர்த்தை வெளியிட்டது.

பத்திரிகை அலுவலக தாக்குதலில், 12 பேர் பலியானார்கள். அவர்களில், பத்திரிகை ஆசிரியர் ஸ்டெபானி சார்போனியர், கேலிச் சித்திரம் வரைபவர்களான சாபு, டிக்னஸ், வோலின்ஸ்கி ஆகியோரும், இரண்டு பொலிஸாரும் அடங்குவர்.

'சார்லி ஹெப்டோ' பத்திரிகை அலுவலகத்தில் தாக்குதல் நடத்திய சகோதரர்கள் செய்யதுவும், ஷெரீபும், பாரிசிலிருந்து 35 கி.மீ. தொலைவில் இருக்கிற 'தம்மார்டின் என் கோயெல்' என்ற இடத்தில் உள்ள ஒரு சிறிய அச்சுக்கூடத்தில் பதுங்கி இருந்தபோது, அவரை கமாண்டோ படையினர் சுட்டுக் கொன்றனர்.

அடுத்தடுத்து நடந்த இந்த தாக்குதல்களில் இதுவரை பொதுமக்களில் 17 பேர் உயிரிழந்தனர்.

பாரிசில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதலுக்கு எதிராக ஒற்றுமை பேரணி தொடங்கியது.

கடந்த வாரம் பாரிசில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதலில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நடைபெற்றது.

இந்த பேரணியில் பாரிஸ் நகரில் தீவிரவாதத்திற்கு எதிராக ஒற்றுமை பேரணி நடந்தது.

பேர ணியில் 3.7 மில்லியன் பொது மக்கள் மற்றும் உலக நாட்டு தலை வர்கள் கலந்து கொண்ட னர். பேரணி தீவிரவாத தாக்குத லில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் தலைமையில் நடை பெற்றது.

பேரணியையொட்டி அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சுமார் 5 ஆயிரத்திற்கும் அதிகமான பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

பாரிஸ் நகரில் தீவிரவாதத்திற்கு எதிரான ஒற்றுமை பேரணியில் கலந்துகொண்ட உலகநாட்டு தலைவர்கள் பேரணியில், பிரான்ஸ் ஜனாதிபதி ஹோலாண்டே, பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், இஸ்ரேல் பிரதமர் நெட்டன்யாகு, பாலஸ்தீன ஜனாதிபதி அப்பாஸ், ஜெர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்க்கல், ஸ்பெயின் பிரதமர் மாரியானோ ராஜேய், அமெரிக்காவின் அட்டர்னி ஜெனரல் எரிக் ஹோல்டர் உள்ளிட்ட உலகநாட்டு தலைவர்கள் கலந்து கொண்டனர்.

உலகின் தலைநகராக பாரிஸ் மாறியுள்ளது. ஒட்டுமொத்த நாடே எழுச்சி பெற்று ஒற்றுமையுடன் இருந்து நமது சிறப்பை விளக்க வேண்டும் என்று பிரான்ஸ் ஜனாதிபதி ஹோலாண்டே கூறினார்.

பாரிஸ் நகரில் நடந்த பேரணியில் 3.7 மில்லியன் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

நான் பிரஞ்சு நாட்டவர், எனக்கு பயம் இல்லை. உயிரிழந்தவர்களுக்கு இங்கு அஞ்சலி செலுத்துகின்றேன்.

வேடிக்கையை உருவாக்குங்கள், போரை அல்ல, பேனாமையே வழியவேண்டும், இரத்தம் அல்ல என்ற பனர்களையும் பேரணியில் கலந்து கொண்டவர்கள் வைத்திருந்தனர்.

பேரணியில் கலந்து கொண்ட மக்கள் சுதந்திரம்! சுதந்திரம், சார்லி! சார்லி என்று முழக்கமிட்டனர்.

உயிரிழந்த கார்டூனிஸ்ட்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக மக்கள் முழக்கமிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




## ஜாவாகடலில் விழுந்து விபத்துக்குள்ளாகிய ஏர்ஏசியா விமானத்தின் கறுப்புப் பெட்டி மீட்பு

ஜாவா கடலில் விழுந்து விபத்துக்குள் சிக்கிய ஏர்ஏசியா விமானத்தின் கறுப்பு பெட்டி மீட்கப்பட்டுள்ளது என்று இந்தோனேஷியா மீட்பு குழு தகவல் தெரிவித்துள்ளது.


இந்தோனேஷியா நாட்டின் சுரபவாவில் இருந்து சிங்கப்பூருக்கு கடந்த மாதம் 28ஆம் திகதி 162 பேருடன் புறப்பட்டு சென்ற ஏர் ஏசியா விமானம், சிறிது நேரத்தலேயே மாயமானது. அது, ஜாவா கடல் பகுதியில் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானதாக தெரிய வந்தது. இதனை தொடந்து ஜாவா கடலில் தேடல் மற்றும் மீட்பு பணிகள் நடைபெற்றன. 40இற்கும் மேற்பட்டோர்களின் சடலங்கள் மீட்கப்பட்டது. விமானத்தின் சிதைவுகளை தேடி கண்டுபிடிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் அந்த விமானத்தின் வால்பகுதி ஜாவா கடலுக்கு அடியில் கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

விமானத்தின் வால்பகுதியை நீண்ட நேர போராட்டத்திற்கு பின்னர் கிரேன் உதவியுடன் கடலில் இருந்து மீட்கப்பட்டது. ஆனால் வால்பகுதியில் விமானத்தின் கடைசி தருணத்தில் நடந்தது என்ன என்பதை கண்டறிய உதவும் கறுப்பு பெட்டியும், ஒலிப் பதிவு கருவிகளும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் ஜாவா கடலில் விழுந்து விபத்துக்குள் சிக்கிய ஏர்ஏசியா விமானத்தின் கறுப்பு பெட்டி மீட்கப்பட்டுள்ளது என்று இந்தோனேஷியா மீட்பு குழு தகவல் தெரிவித்துள்ளது.

தேசிய போக்குவரத்து பாதுகாப்பு குழுவிடம் இருந்து நேற்று காலை அதிகாரபூர்வ தகவல் ஒன்று எனக்கு கிடைத்தது. நாங்கள் விமான தகவல் ரெக்கார்டர் என அழைக்கப்படும் கறுப்பு பெட்டி ஒன்றை கடலில் இருந்து மீட்பதில் வெற்றிபெற்றுவிட்டோம் என்று மீட்புகுழு தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார். நாங்கள் இன்னும் விமானிகள் அறையில், குரல் ரெக்கார்டர் 'அடங்கியிருக்கும் ஒலிப்பதிவு கருவியை கண்டுபிடிக்க முய[illegible] என்று அவர் தெரிவித்தார். (இ-5)

**குரோஷியாவில்**

## முதல் பெண் ஜனாதிபதியாக கிராபர்-கிட்டாரோவிக் தேர்வு



குரோஷியா நாட்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முதன் முறையாக பெண் வேட்பாளரான கிராபர்-கிட்டாரோவிக் ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.


எதிர்க்கட்சி வேட்பாளராக போட்டியிட்ட கிராபர் அந்நாட்டு ஜனாதிபதியாகயிருந்த இவோ ஜோசிபோவிக்கை விட குறைவான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். கிராபருக்கு ஆதரவாக 50.5 சதவீத வாக்குகளும், ஜோசிபோவிக்குக்கு ஆதரவாக 49.5 சதவீத வாக்குகளும் கிடைத்தன. தனது தோல்வியை ஒப்புக்கொண்ட ஜோசிபோவிக் வெற்றி பெற்ற கிராபருக்கு வாழ்த்து தெரிவித்தார்.

கடந்த 1991ஆம் ஆண்டு யூகோஸ்லாவியாவிடமிருந்து குரோஷியாவிற்கு விடுதலை பெற்றுத் தந்த குரோஷிய ஜனநாயக தொழிற்சங்கத்தில் கிராபர் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது 46 வயதாகும் கிராபர் நேட்டோ படை பொதுச்செயலாளரின் உதவியாளராகவும், வெளியுறவுத்துறை அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் தொழில் தொடங்க வாருங்கள்

## பிரதமர் மோடி அழைப்பு



இந்தியாவில் தொழில் தொடங்க வாருங்கள் என வெளிநாட்டு முதலீட்டா ளர்களுக்கு பிரதமர் மோடி அழை ப்பு விடுத்துள்ளார்

குஜராத் மாநிலத்தின் தலைநகர் காந்திநகரில், எழுச்சிமிகு குஜராத் முதலீட்டாளர்கள் 7ஆவது உச்சி மாநாடு நேற்று முன்தினம் நடந்தது. இந்த மாநாட்டினை பிரதமர் நரே ந்திர மோடி தொடக்கி வைத்தார்.

முன்னதாக மாநில முதலமை ச்சர் ஆனந்தி பென் படேல் அனை வரையும் வரவேற்றார். சிறப்பு அழை ப்பாளர்களாக ஐ.நா.பொதுச செயலா ளர் பான் கீ மூன், அமெரிக்க வெளியு றவு அமைச்சர் ஜோன் கெரி, பூடான பிரதமர் செரிங் டாப்கே, மாசிடோ னியா பிரதமர் நிக்கோலா குருவன் ஸ்கி, உலக வங்கித்தலைவர் ஜிம் யாங்கிம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். இங்கிலாந்து, அமெரி க்கா, ஜப்பான், சிங்கப்பூர் உள்ளிட்ட 100 நாடுகளில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் இந்த 3 நாள் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

**120 கோடி மக்களின் மனஉறுதி**

இந்த மாநாட்டை தொடக்கி வைத்து பிரதமர் நரேந்திர மோடி உரையாற்று கையில், மாநாட்டில் உங்கள் கூட்டாளி த்துவம், 6 கோடி குஜராத்திகளின தொழில் ஆர்வத்தை பெருக்கி உள் ளது. 120 கோடி இந்தியர்களின மன உறுதியை மேம்படுத்தி இருக்கிறது.

ஒட்டுமொத்த உலகமுமே ஒரே குடும்பம் என்பதுதான் இந்தியாவின நம்பிக்கை. இதை நடைமு றையில் சிலர் பார்த்துள்ளனர். இந்த மாநா ட்டில் 100இற்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்றிருப்பதாக அறிகிறேன். இந்த மாநாடு, கரங்களை கோர்ப் பது மட்டுமல்ல, இதயங்களையும் கோர்ப்பதாகும்.

**வாய்ப்புகள் நிறைந்த நாடு**

வளர்ச்சி நடவடிக்கைகள் அனை. த்தும் சாதாரண மக்களுக்கும், தொழில் துறைக்கும் பலன் தர வேண்டும். இந்தியா இன்றைக்கு வாய்ப்புகள் நிறைந்த நாடாக திகழ் கிறது. அதிவேக வீதிகள், புகையிரத பாதைகளை உருவாக்குகிறோம். நகரங்களில் உட்கட்டமைப்பை ஏற்படுத்துகிறோம். நவீன நகரின் வசதிகள் அனைத்தையும், கிராம ங்களுக்கும் கொண்டு செல்கிறோம். எத்தனையோ விதங்களில் இந்தி யாவில் உலகளவிலான முதலீட்டா ளர்களுக்கு திரளான வாய்ப்புகள் இருக்கின்றன.

**கரம் கோர்ப்போம்**

இந்திய ஜனநாயகத்தின் வலிமை, நதித்துறையின் சுதந்திரம் ஆகியவை நீண்ட காலம் தொழில் நடத்துவதற் கான வாய்ப்புகளை உங்களுக்கு ஏற்ப டுத்தி தந்துள்ளன என்பதை இன்றை க்கு நம்பிக்கையுடன் சொல்வேன்.

நாங்கள் பெரிய அளவில் கனவு காணுகிறோம் எங்கள் கனவுகள் ,எண் ணற்றவை.

எங்கள் கனவுகள ,உங் கள் வளர்ச்சிக்கான விதைகளாக மாறும். எங்கள் எதிர்பார்ப்புகள், உங் கள் நோக்கங்களை முன்னெடுத் துச் செல்லும்.

நீங்கள் ஒருபடி நடந்தால், உங்க ளுக்காக நாங்கள் இரண்டு அடி எடு த்து வைப்போம். நாம் கரம்கோர்ப் போம். நாம் முனனேற்றத்துக்கு, வள த்துக்கு, அமைதிக்கு ஒன்றிணை ந்து பாடுபடுவோம். இவ்வாறு பிரத மர்நரேந்திர மோடி கூறினார்டு (இ-5)

பாரதச் செய்தி

# பான் கீ மூனுடன் பிரதமர் சந்திப்பு



பருவநிலை மாற்றம், பயங்கர வாத ஒழிப்பு உள்ளிட்டவை குறித்து பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்களுடன் பிரதமர் நரே ந்திர மோடி கலந்தாலோசித்தார். குஜராத் தலைநகர் காந்திநகரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை தொடங்கிய சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டில் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் உட்பட பல்வேறு நாடுகளின் பிரதி நிதிகள் பங்கேற்றனர்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைப் பயன்படுத்த இந்திய அரசு மேற் கொண்டு வரும் முயற்சிகளை மாநாட்டில் பான் கீ மூன் பாரா டிப் பேசினார். குஜராத்தின் வளர்ச்சி, கலாசாரம் போன்றவற்றையும் அவர் சுட்டிக் காட்டினார்.

மாநாட்டின் இடையே பான் கீ மூனை, பிரதமர் மோடி சந்தித்துப் பேசினார். பருவநிலை மாற்றம், சுற்றுச்சூழலைப் பாதிக்காத எரிச க்தி உள்ளிட்ட விடயங்கள் குறித்து அப்போது விவாதிக்கப்பட்டதாக பிரதமர் அலுவலக செய்திக் குறிப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், அமெரிக்க வெளிய றவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரியிடம் பேசிய மோடி, பயங்கர வாத ஒழிப்பு நடவடிக்கைகளை இணைந்து மேற்கொள்வது குறித்து விவாதித்ததாகத் தெரிகிறது.

கனடா அமைச்சர் கிரிஸ் அலெ க்ஸாண்டர், இஸ்ரேல் விவசாயத் துறை அமைச்சர் யாயிர் சமீர், ஈரான் ஜனாதிபதியின் ஆலோசகர் அக்பர் தோர்கான், உலக வங்கி யின் தலைவர் ஜிம் யாங் கிம் உட்பட பல்வேறு நாட்டு பிரதிநிதி களையும் மோடி சந்தித்து உரையா டினார். (இ-5)

# மகிந்தவின் நிலைதான் பிரதமர் மோடிக்கும்!

## காங்கிரஸ் எச்சரிக்கை

**இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போன்று சர்வாதிகாரி யாக வலம் வரலாம் என பிரதமர் நரேந்திர மோடி நினைக்கிறார். அப்படியாக நினைத் தால் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்பட்ட முடிவு தான் அவருக்கும் ஏற்படும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோ வன் தெரிவித்துள்ளார்.**



இது குறித்து செய்தியாளர்க ளிடம் ஈ.வி.கே.எஸ். இளங்கோ வன் நேற்று தெரிவிக்கையில்,

ஜல்லிக்கட்டுக்கு அனுமதி கோரி பல்வேறு போராட்டங்களை மக்கள் நடத்தி வருகின்றனர். அவர்களின் உணர்வுகளை மதி த்து தாமதமின்றி மத்திய-மாநில அரசுகள் சட்ட நடவடிக்கை எடுத்து வழக்கம் போன்று ஜல்லிக்கட்டு நடைபெற வழிசெய்ய வேண்டும்.

காங்கிரஸ் ஆட்சியின் போது தடை விதிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் தற்போது மத்திய அமை ச்சர் மேனகாகாந்தியின் வற்புறு த்தலால்தான் ஜல்லிக்கட்டுக்கு தடை அமுல்படுத்தப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் இதுபோன்ற விளை யாட்டுகள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

ராஜபாளையத்தில் 15இற்கும் மேற்பட்ட சிறுவர்-சிறுமிகள் காய்ச் சலால் பலியாகி உள்ளனர். போர்க் கால அடிப்படையில் நோய்களை யும் மாநில அரசு ஒழிக்க வேண்டும்.

தமிழக அரசின் செயற்பாடு கள் மிக மோசமாக உள்ளன. இலஞ்சம் தலைவிரித்தாடுகிறது. எனவே தனியார் பாடசாலை அங் கீகாரம் புதுப்பிக்கப்படுவதை 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை என மாற்ற வேண்டும்.

ஆட்சியில் அமர்ந்து 6 மாதங் களுக்கு மேலாகியும் தேர்தல் அறி விப்புகளை நிறைவேற்ற மோடி தலைமையிலான பா.ஜ.க. நிறை வேற்றவில்லை. அதற்கு மாறாக அவர்கள் ஆர்.எஸ்.எஸ். தூண்டு தலின் பேரில் சிறுபான்மையி னருக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் பிரித்தாளும் சூழ்ச்சியை கடைப் பிடிக்கின்றனர்.

இலங்கையின் மகிந்த போன்று சர்வாதிகாரியாக வலம் வரலாம் என மோடி நினைக்கிறார். அப்படி யாக நினைத்தால், மகிந்தவுக்கு ஏற்பட்ட முடிவுதான் அவருக்கும் ஏற்படும். பா.ஜ.க. 6 இலட்சம் உறுப் பினர்களை சேர்ப்பதாக சொல்கிறா ர்கள்.

அந்தக் கட்சியில் 6 ஆயிரம் பேர் கூட இல்லை. பின்னர் எப்படி 6 இலட்சம் பேரை சேர்க்கப் போகி றார்கள் என்பது வியப்பாக உள்ளது. சோனியா-ராகுல் இருவருமே காங் கிரசின் தலைவர்கள்தான்.

ஸ்ரீரங்கம் இடைத்தேர்தலில் காங்கிரஸ் போட்டியிடுவது குறித்து கட்சி மேலிடம் முடிவு செய்யும். அவ் வாறு போட்டியிடுவோமானால் தனி த்துத்தான் போட்டியிடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# தை முதல்நாளை தமிழ் புத்தாண்டாக கொண்டாட வேண்டும்

தமிழ் புத்தாண்டு தொடக்கமாக தை முதல் நாளை சீரும் சிறப்பு மாக கொண்டாடிட தமிழர்கள் அனைவரும் முன்வர வேண்டும் என்று தி.மு.க தலைவர் கருணா நிதி மீண்டும் கோரிக்கை விடுத்து ள்ளார்.

இது குறித்து கருணாநிதி வெளி யிட்டுள்ள அறிக்கையில், பொங்கல் திருநாளை தமிழ் புத்தாண்டாகத் தமிழர்கள் உள்ளம் தோறும் உவ கைப் பெருக்குடன் இல்லந்தோறும் இன எழுச்சியோடு கொண்டாட வேண்டும்

23.01.2008 அன்று தமிழகச் சட்டப்பேரவையில் ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா ஆற்றிய உரையில், தமிழர்களுக்கென்று "திருவள் ளுவர் ஆண்டு பிறக்கும் தை முதல் நாள் தான் தமிழ் புத்தாண்டுத் தொடக்கம் என்பது ஒட்டுமொத் தமாக எல்லா தமிழ் அறிஞர்களும் ஒப்புக்கொண்டுள்ள உண்மை என்பதால் தை முதல் நாளையே தமிழ் புத்தாண்டுத் தொடக்கம் என அறிவித்து நடைமுறைப்படுத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது" என்றும் அறிவித்தார்.

மறைமலை அடிகள் தலை மையில் வி.கல்யாண சுந்தரனார், கா.சுப்பிரமணியப்பிள்ளை, சச்சி தானந்தப் பிள்ளை, வெங்கடசாமி நாட்டார், சோமசுந்தர பாரதியார், கி.ஆ.பெ.விசுவநாதம் உள்ளிட்ட அறிஞர் பெருமக்கள் எல்லாம் கலந்து கொண்ட கூட்டத்தில், திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டாகப் பின்பற்றுவது. அத னையே தமிழாண்டு எனக்கொண் டாடுவது,வழக்கத்தில் திருவள் ளுவர் காலம் கி.மு.31 ஐக் கூட்டி னால் திருவள்ளுவராண்டு வரும் என்பதனை மேற்கொள்வது என்ப னவாகும்.

மலேசியா நாட்டில் தமிழர்கள் தற்போது தை முதல் நாளையே புத்தாண்டாக கொண்டாடி வரு கிறார்கள். தி.மு.க. ஆட்சியில் செந் தமிழரெல்லாம் பெரு மகிழ்ச்சியும், பெருமிதமும் கொள்ளத்தக்க வகை யில் செய்யப்பட்ட அறிவிப்பாக, ஆளுநர் பர்னாலா அறிவிப்பு கருத ப்பட்டு, தமிழ் மக்கள் எல்லாம் அந்த ஆண்டு பொங்கல் விழாவினை எப்போதும் இல்லாத வகையில் தமிழ் புத்தாண்டாக கொண்டாடி மகிழ்ந்தார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா புத்திசாலித்தனத்துடன் நடந்த தேர்தல் ஆணையாளர் தேசப்பிரிய



மஹிந்த தேசப்பிரிய

8 ஆம் நம்பர் தனக்கு மிகவும் பொருத்தமானது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நம்பியிருந்தார். அதன் காரணமாக தேர்தல்களை நடத்துவது உள்ளிட்ட முக்கிய நிகழ்வுகள் யாவும் 8 ஆம் நம்பரிலேயே நடத்தப்பட்டன.

பொதுவில் 8 ஆம் நம்பர் தொடர்பில் சோதிட உலகம் எச்சரிக்கையாக இருக்கும்போது, மகிந்த ராஜபக்ஷ மட்டும் தனக்கு எட்டாம் நம்பர் பொருத்தம் எனக் கருதினார்.

அதன்படியே ஜனவரி 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் தீர்மானிக்கப்பட்டது. தேர்தல் முடிபுகள் என்னவாயிற்று என்பது நீங்கள் அறிந்ததே. இதை நாம் கூறும்போது, அப்பட்டியானால் 8 ஆம் நம்பர் மகிந்தவைவிட மைத்திரிக்கல்லவா மிகவும் பொருத்தமாக இருக்கிறது என்று நீங்கள் கூறினால் யார்தான் அதை மறுத்து வாதிடமுடியும்.

ஆக, நம்பருக்கும் நாம் செய்த பாவபழிக்கும் தொடர்பு கிடையாது என்பதை மட்டும் இவ் விடத்தில் கூறிவிட்டு அந்த விடயத்தை முடித்துக் கொள்ளலாம்.

### தேர்தல் ஆணையாளரின் புத்திசாலித்தனம்

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் ஜனவரி 8 ஆம் திகதி இரவு 10 மணிக்கு முன்னதாக அறிவிக்கப்படும் எனத் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய முன் கூட்டியே தெரிவித்திருந்தார்.

தபால்மூல வாக்களிப்பின் முடிவுகள் இரவு 10 மணிக்கு வெளிவரும் எனக் காத்திருந்தவர்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது. தபால் மூல வாக்களிப்பின் முதலாவது அறிவிப்பை தேர்தல் ஆணையம் 8 ஆம் திகதி இரவு 11.30 மணிக்கே வெளியிட்டது.

தேர்தல் முடிபுகளில் சிலவற்றையேனும் அறிந்துவிட்டு உறங்கலாம் என்றிருந்தவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவேளை, இரத்தினபுரி மாவட்டத்தின் தபால்மூல வாக்களிப்பின் முடிபு அறிவிக்கப்பட்டது. அந்த முடிவின்படி மகிந்த ராஜபக்ஷ 11864 வாக்குகளையும் மைத்திரிபால சிறிசேன 9053 வாக்குகளையும் பெற்றிருந்தனர்.

தபால்மூல வாக்களிப்பில் மைத்திரிபால சிறிசேன முதல் நிலையில் உள்ள மாவட்டத்தை தேர்தல் ஆணையர் அறிவித்திருந்தால் மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் குழப்பமடைந்திருப்பர். எனினும் தேர்தல் ஆணையர் புத்திசாலித்தனமாக மகிந்த ராஜபக்ஷவுக்குக் கூடுதல் வாக்குக் கிடைத்த இரத்தினபுரி மாவட்டத்தின் முடிவை முதலாவதாக அறிவித்தபோது மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் ஆறுதலடைந்தனர்.

பொதுவில் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியுற்றால் நாட்டில் கலவரம் ஏற்படும் என்று அறியப்பட்டதே தவிர, மைத்திரிபால சிறிசேன தோற்றால் அதனால் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் கருதப்பட்டது.

நிலைமை இதுவாக இருக்கையில் மகிந்தவின் ஆதரவாளர்களில் உறங்கியவர்கள் தவிர, விழித்திருப்பவர்களை மகிழ்ச்சியோடு உறங்க வைக்கவேண்டுமென தேர்தல் ஆணையர் நினைத்தார் போலும். அதனை நிறைவேற்ற அவர் கையாண்ட தந்திரமே தபால் மூல வாக்களிப்பில் மகிந்த ராஜபக்ஷ முதல் நிலை பெற்றிருந்த இரத்தினபுரி மாவட்டத்தை முதலில் அறிவித்ததாகும்.

இதில் ஆச்சரியம் என்னவெனில் 25 சத வீதமான தேர்தல் முடிபுகள் வெளிவருவதற்கு முன்னதாக மகிந்த ராஜபக்ஷ அலரிமாளிகையை விட்டு வெளியேறியமை



மொஹான் பீரிஸ்

யாகும். தேர்தலுக்கு மறுநாள் 9ஆம் திகதி காலை 6.30 மணியளவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அலரி



மாளிகையிலிருந்து வெளியேறினார். தேர்தல் முடிபுகளை உடனுக்குடன் அறிந்து கொண்டிருந்தவர்களின் இதயத்துடிப்பு வேகமாகிக் கொண்டிருக்கிறது. மகிந்தவா? மைத்திரியா? என்ற புரியாத விடைக்காகவே இதயம் தனது துடிப்பை வேகப்படுத்தியிருந்தது.

தென்பகுதியில் உள்ள தேர்தல் தொகுதிகளின் முடிபுகளை அறிவிக்கும்போது அந்தந்தத் தொகுதிகளில் மகிந்த ராஜபக்ஷவே முதல் நிலையிலிருந்தார்.

அதேநேரம் மைத்திரிபால சிறிசேனவின் மொத்த வாக்குகளின் எண்ணிக்கை மகிந்த பெற்ற வாக்குகளை விட ஒரு இலட்சம் மேலதிகமாக இருந்தது.

ஆயினும் தென்பகுதியின் தேர்தல் முடிபுகள் மகிந்தவுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கும் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியிருந்தன.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களின் தேர்தல் முடிபுகள் மைத்திரிக்குச் சாதகமாக இருந்ததன் காரணமாக அந்த முடிபுகளை இறுதியாக அறிவிப்பது எனத் தேர்தல் ஆணையாளர் முடிபெடுத்திருந்தார்.

இவையெல்லாம் நடந்து கொண்டிருக்கும் போது, 9 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு மகிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையை விட்டு வெளியேறினார் எனில் அவருக்கு முன் கூட்டியே தேர்தல் முடிபுகள் தெரிந்திருந்தது என்று கூறலாம்.

### நள்ளிரவு 12மணிக்கு முடிபு தெரிய வந்தது

ஜனவரி 8 ஆம் திகதி மாலைப் பொழுது மந்திராலோசனையில் அலரிமாளிகை சுறுசுறுப்பாகியது. சிலவேளை மகிந்தவுக்குத் தோல்வி ஏற்படுமாயின் என்ன செய்வது? என்பதே மந்திராலோசனையின் தொனிப்பொருள். அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துவதா? பாராளுமன்றத்தைக் கலைப்பதா? எதுவுமே புரியாமல் கோபம் மட்டுமே பொங்கி எழுகிறது.

சுருங்கக்கூறின் துச்சாதனன் இறந்த போது துரியோதனன் எத்தகைய மனநிலையில் இருந்தானோ! அந்த நிலைக்கு மகிந்த ராஜபக்ஷவின் மனநிலை வந்திருந்தது.

தேர்தலுக்குப் பின்னர் மகிந்த வீடு செல்ல மறுத்தால், என்ன? நடவடிக்கை எடுப்பது என்ற திட்டம் எங்களிடம் உள்ளது. உரிய நேரத்தில் அந்தத் திட்டத்தை வெளியிடுவோம் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்கனவே கூறியிருந்தார்.

சந்திரிகா கூறியவிடயமும் மகிந்தவை மனம் குழம்பவைத்தது. ஒட்டு மொத்தத்தில் ஜனவரி 8 மகிந்த உச்சமாகத் துன்பப்பட்ட நாள் எனலாம்.

## ரணிலின் பெருந்தன்மையை மகிந்தவும் உணர்ந்திருந்தார்

ஜனவரி 8ஆம் திகதி நண்பகல் அளவிலேயே தேர்தல் ஆணையம் இறுதி முடிபை வெளியிட்டதாயினும் ஜனவரி 8 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியளவில் தனது தோல்வியை மகிந்த ராஜபக்ஷ அறிந்திருந்தார். இந்த அறிதல் எப்படி நடந்தது என்பது வெளிவராத உண்மையாயினும் மகிந்த அறிந்த செய்தியை மைத்திரிபால சிறிசேனவும் அறிந்திருந்தார் என்பது நிஜம்.

### அலரி மாளிகையில் பிரதம நீதியரசர்

ஒரு கோப்பைத் தேநீருடன் ரணிலை எனது பக்கம் இழுப்பேன் என்று கூறியவர் மகிந்த ராஜபக்ஷ. ரணில் பற்றிய மகிந்தவின் வார்த்தை மகிந்தவின் மதிப்பைக் குறைத்ததே தவிர, ரணிலின் மதிப்பை அல்ல என்பது உணரப்படவேண்டியது.

எதுவாயினும் ரணில் விக்ரமசிங்கவிடம் இருக்கக்கூடிய ஒரு உயர்ந்தகுணம் ஒத்துப்போகும் தன்மையாகும். 2002 ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவுமே ஒப்பமிட்டிருந்தனர்.

அதேபோல் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சியின் தலைவராக இருந்த போதெல்லாம் மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்று மதித்து அவரைச் சந்தித்திருந்தார்.

இவற்றுக்கெல்லாம் முன்னதாக, ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்க வெற்றியீட்டிய போது அப்போது ஜனாதிபதியாக இருந்த டி.பி.விஜயதுங்க பதவி விலக மறுத்தார்.

இவ்விடத்தில் ரணில் விக்கிரமசிங்க தலையிட்டு டி.பி.விஜயதுங்கவை வீட்டிற்கு அனுப்பிவைத்து விட்டு, சந்திரிகா பதவியேற்பதற்கு வழிசெய்து கொடுத்தார்.

இவ்விதம் இசைந்து போகக் கூடியவர் ரணில் விக்கிரமசிங்க என்பது உறுதியாகிறது.

தேர்தல் தோல்வியை அடுத்து அலரிமாளிகையில் இருந்து வெளியேறுவதற்கு முன்னதாக, 9 ஆம் திகதி அதிகாலைப் பொழுதில் ரணில் விக்கிரமசிங்கவை அலரி மாளிகைக்கு வருமாறு மகிந்த ராஜபக்ஷ அழைத்தார்.

ஒரு கோப்பை தேநீருடன் ரணிலை எனது பக்கம் இழுப்பேன் என்று கீழ்த்தரமாகப் பிரசாரம் செய்த மகிந்த இப்போது தேர்தலில் தோல்வியுற்றார் என்பது தெரிந்திருந்தும் மகிந்தவின் அழைப்பை ஏற்று உடனடியாகவே ரணில் அலரிமாளிகைக்குச் சென்றார்.

இது அவரின் பெருந்தன்மையைக் காட்டுகிறது. ரணிலின் பெருந்தன்மையால், மகிந்த ராஜபக்ஷ அலரிமாளிகையை விட்டு அமைதியாக வெளியேறினார்.

ரணில் விக்கிரமசிங்க அலரி மாளிகைக்கு சென்றதால், பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அலரி மாளிகையில் மகிந்தவுடன் இருப்பதையும் நேரில் காண முடிந்தது.

அலரி மாளிகையில் பிரதம நீதியரசருக்கு என்னவேலை என்ற கேள்வி எழுந்தபோது, இலங்கையின் நீதி பரிபாலனம் தலை குனிந்தது.

**விதுரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு கச்சான் இனங்கள் உருவாக்கம்

## கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திணைக்கள மேலதிகப்பணிப்பாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு பிரதேசத்தில் பயிரிடப்பட்டு வரும் உள்ளூர் இனமான கச்சானில் இருந்து பயனுள்ளதும் அதிக விளைச்சலைத் தரக்கூடியதும் நுகர்வோரின் விருப்பு குன்றாததும் குறுகிய வயதுடையதுமான புதிய தெரிவுகள் உருவாகியுள்ளதாக கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலைய மேலதிக பணிப்பாளர் கலாநிதி சி.ஜே.அரசகேசரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

வட பிரதேச மக்களால் அதிகம் விரும்பப்படும் முல்லைத்தீவு பிரதேசத்தில் பயிரிடப்பட்டு வரும் கச்சான் இனத்திலிருந்து குறுகிய கால வயதில் அதிக விளைச்சலைத் தருவதுமான நான்கு கச்சான் இனங்களும் தெரிவாகியுள்ளன.

இதைவிட காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற வகையில் குறுகிய காலத்தில் பயன் தரக்கூடிய குரக்கன், திணை மற்றும் கச்சான் போன்ற இனங்கள் வயற்துண்ட ஆராய்ச்சிகளுக்காக வட பிராந்திய விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

வெங்காயத்தில் கூடிய விளைச்சலையும் பெரும்போகம் மற்றும் சிறுபோகங்களில் பூத்து உண்மை விதைகளும் உற்பத்தியாகும் இனங்கள் தெரிவாகியுள்ளன. மிளகாய் அதிக பயன்தரும் பல்வேறுபட்ட இனத்தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஏற்கனவே திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் வெளிவிடப்பட்ட புடோல் (திருநெல்வேலி நீட்டு), பாகல் (திருநெல்வேலி வெள்ளை), கத்தரி (திருநெல்வேலி ஊதா) போன்றவற்றுடன் கிளிநொச்சியில் உருவான உலர்வலயத்தில் வெப்ப நிலையை தாங்கி வளரக்கூடிய KC-1 எனும் தக்காளி இனம் வெளிவிடப்பட்டுள்ளன.

இவை நன்கு பலன் தரும் புதிய இனங்களாகும். இவற்றோடு வட பிராந்திய தனித்துவமுள்ள உள்ளூர் வெங்காய இனத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஓர் வெங்காய இனமும் உண்டு. இவ்வினம் 48 நாட்களில் முற்றுவதுடன் பெரும்போகத்தில் 55 நாட்களில் 20 தொன்னிற்கு (20,000Kg) மேலான குமிழ் விளைச்சலை தரக்கூடியது.

அத்துடன் அதிகரித்த எண்ணெய்த் தன்மையும் வரட்சியைத் தாங்கி விளைச்சலை தரக்கூடியதுமான இரு எள்ளினங்கள் முறையே TMV-3 மற்றும் TMV-4 (திண்டி வனம் 3,4) இனங்கள் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டு அவற்றின் அறிமுகமாக்கல், ஆராய்ச்சிகள் கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்திலும் அங்குணுகொல பல்லசயிலுள்ள எண்ணெய் மற்றும் அவரை இன ஆராய்ச்சி நிலையத்திலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பள்ளிச்சிறார்களுக்கு வழங்கும் சத்துணவில் சேர்த்துக்கொள்ளும் வகையில் ஓரளவு இனிப்புச் சுவையுள்ள சோளத்தெரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. தாவர இன விருத்திக்கு ஏற்ற வகையில் உதவுமாறு வலைவீடு ஒன்று வெங்காயத்தின் நீண்ட நாள் ஆராய்ச்சிக்கு உதவும் வகையில் வெங்காய சேமிப்பு அறையொன்றும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)




## மக்கள் மீள்குடியேறியும் வீதி திருத்தம் இடம்பெறவில்லை

### பொதுமக்கள் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி சோலைநகர் கிராமத்தில் இருந்து கிளிநொச்சி மேற்கு பிரதேசத்திற்கான இணைப்பு வீதி நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படாமையினால் அப்பாதையூடான போக்குவரத்தில் ஈடுபடும் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

மக்கள் குடியேற்றத்தின் பின்னர் இவ்வீதி புனரமைப்பு செய்யப்படாததுடன் குறித்த வீதியினை குறுக்கறுத்து வயல் நீர் பாய்வதால் மாரி காலத்தில் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

இதேவேளை குறித்த கிராமத்திற்கான மின்சாரம் இதுவரை வழங்கப்படவில்லையெனவும் அப்பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

நகரப்புறங்களின் அபிவிருத்தி வேகமாக நடைபெற்று வரும் நிலையில் கிராமங்களின் அபிவிருத்தி பின்தங்கிய நிலையில் உள்ளதாக அப்பகுதி வாள் மக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே உரிய அதிகாரிகள் இக் கிராமத்திற்கு வருகை தந்து மக்களின் பிரச்சினையை கேட்டறிந்து கிராமத்திற்கான அபிவிருத்தியில் அக்கறை கொள்வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர். (2-272)



நாட்டில் அண்மை நாட்களாக பெய்த கடும் மழை காரணமாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஆனந்தபுரம் கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 17 குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகள் நேற்று முன்தினம் மாலை ஆனந்தபுரம் கிராம அலுவலகத்தில் வைத்து முல்லைத்தீவு மாவட்ட வடமாகாணசபை உறுப்பினர் திருமதி மேரிகமலா குணசீலனினால் வழங்கி வைக்கப்பட்டன. (படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

## நிதி கிடைக்கப்பெறாமையையடுத்து 300 பணியாளர்கள் பணி நீக்கம்

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனமான ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பணியாற்றும் 300 பணியாளர்களை இம்மாதம் 31 ஆம் திகதி முதல் வேலையில் இருந்து நீக்கப்போவதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்திடம் இருந்து நிதி கிடைக்காமையால் 300 பணியாளர்களுக்கு சம்பளம் வழங்க முடியாதுள்ளது, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தொழில் வாய்ப்பற்று மிகவும் பின்தங்கிய குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 800 பேர் வரையில், கடந்த 2010ஆம் ஆண்டு ஹலோ ட்ரஸ்ட கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றி வருகின்றனர்.

எதிர்வரும் 2017ஆம் ஆண்டு வரை இவர்கள் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுவார்கள் என ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை, இம்மாதம் 31ஆம் திகதி முதல் பணிநீக்கம் செய்வதற்கான ஒப்புதல் கடிதம் அவர்களிடம் இருந்து பெறப்பட்டதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது. (2)

## மேய்ச்சல் தரையில் கட்டப்படும் மாடுகள் திருடர்களால் திருட்டு

கிளிநொச்சி திருவையாறு பகுதியில் மேய்ச்சல் தரையில் விடப்படும் பசுமாடுகள் அடிக்கடி திருடர்களால் திருடப்பட்டு வருவதாக பாதிக்கப்பட்ட மாட்டு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

திருவையாறு 2 ஆம் பகுதியில் வசித்து வரும் வீடொன்றில் தமது வாழ்வாதார முன்னேற்றத்திற்காக 40 இற்கும் மேற்பட்ட பசு மாடுகள் வளர்க்கப்பட்டு அவை மேய்ச்சல் தரைகளில் விடப்பட்ட சமயம் அவற்றில் 5 பசு மாட்டினை திருடர்கள் அண்மையில் கள்வாடிச் சென்றுள்ளனர்.

இதுபோன்ற சம்பவங்கள் இப்பகுதியில் அடிக்கடி நிகழ்ந்த வண்ணமுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இம் மாடுகள் களவாடப்பட்டு விற்பனை செய்யப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்படுவதாக பாதிக்கப்பட்ட மாட்டின் உரிமையாளரினால் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறையிட்டும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையெனவும் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் எதிர்வரும் காலங்களில் இடம்பெறாது இருக்க உரிய கமக்கார அமைப்பினரும் அதிகாரிகளும் நடவடிக்கையெடுக்க வேண்டுமென மாடுகளின் உரிமையாளர்களினால் தெரிவிக்கப்படுகின்றது. (2-273)

## சிறுபான்மை மக்களின் வாக்களிப்பை புதிய ஜனாதிபதி மறக்கக்கூடாது

### இலங்கை மக்கள் காங்கிரஸ் தெரிவிப்பு

இன்று ஏற்பட்டிருக்கின்ற இந்த ஆட்சி மாற்றம் இம்மக்களின் மனங்களில் பெரும் ஆறுதலை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்நிம்மதி நிரந்தரமாகத் தொடர்வதற்கு புதிய ஆட்சி தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் செயலாளர் நாயகம் வை.எல்.எஸ். ஹமீட் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்காக ஒன்றுபட்டு வாக்களித்த சிறுபான்மை மக்களுக்கு நன்றி தெரிவித்து கட்சி சார்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒன்றுபட்டு வாக்களித்த முஸ்லிம், தமிழ் சிறுபான்மை சமூகங்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வரலாற்றில் முதல் தடவையாக ஒரு ஆட்சியாளரைத் தெரிவு செய்வதற்கு சிறுபான்மை மக்கள் 95 சதவீதத்துக்கு மேல் ஒன்றுபட்டு பெரும்பான்மை சமூகத்தில் சமாதானத்தையும் ஒற்றுமையையும் விரும்புகின்ற சிங்கள மக்களுடன் ஒன்று சேர்ந்து மைத்திரிபால சிறிசேனவை அரியாசனத்தில் அமர்த்தியிருக்கின்றார்கள். இதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எந்நேரமும் மனதில் இருத்தி செயற்படுவார் என்ற நம்பிக்கையோடு இம்மக்களின் சார்பாகவும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாகவும் புதிய ஜனாதிபதியினை மனதார வாழ்த்துகின்றோம்.

கடந்த இரண்டு வருடங்கள் சிறுபான்மை சமூகங்கள் பொதுவாகவும், முஸ்லிம் சமூகம் குறிப்பாகவும் இனவாதிகள் தொடுத்த தாக்குதல்களினால் ஏற்பட்ட பெரும் மன அழுத்தத்தோடு வாழ்ந்து வந்தார்கள். எனவே, பொது எதிரணி ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு தொடர்பாக முடியுமானால் மீள் பரிசீலனை செய்து ஜனாதிபதியின் தேவையற்ற அதிகாரங்களை நீக்கி ஜனாதிபதி ஆட்சி முறை தொடர்வது தொடர்பாக சிந்திக்க வேண்டும்.

அல்லது அம்முறை ஒழிக்கப்படத்தான் வேண்டுமென்றால் பொதுத் தேர்தல் முறைச் சீர்திருத்தத்தில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் அவர்களின் விகிதாசாரத்துக்கு ஏற்ப பெறப்படுவதை உறுதிப்படுத்துவது மட்டுமல்லாமல், மத்திய அரசாங்கத்தில் சிறுபான்மைகள் பார்வையாளர்களாக பங்கு பெறாமல் பங்குதாரர்களாக இடம் பெறக்கூடிய தேர்தல் முறையாக அது அமைவதை உறுதிப்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகத்தான சாதனைகள் அனைத்தும் முடியும் நடக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் எடுத்து வைக்கப்படும் முதல் அடியில் இருந்து ஆரம்பமாகும். – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii.lk

## மகிந்தவின் தோல்வியில் தமிழர்கள் மகிழ்ந்தது ஏன்?

புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மென்மை யான போக்குடையவர் என்பதை அவரின் செயற்பாடு களில் இருந்து உணர முடிகின்றது.

இரண்டாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மாட்டேன் என்று ஜனாதிபதி மைத்திரி அறி வித்தமை ஒரு தலைவனுக்கு இருக்கக் கூடிய சிறப் பைக் காட்டுவதாகும்.

இரண்டாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மாட்டேன் என மைத்திரி அறிவித்த நேரம், காலம் என்பன மிகவும் பொருத்தமானவை. இந்த அறிவிப்பு அவர் மீது நம்பிக்கை கொள்ள வைக்கிறது.

அதேநேரம் கண்டி தலதா மாளிகையின் எண்கோண மண்டபத்தில் இருந்து நாட்டு மக்களுக்கு அவர் ஆற் றிய உரையில் சாந்தமும், நிதானமும் தெரிகிறது.

எனினும் அதீத நல்ல குணம் பலவீனமாகக் கருதப் படும் என்பதன் அடிப்படையில், ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன நிதானமாகவும் தீர்மானங்களை எடுப் பதில் மிகத் தெளிவாகவும் இருப்பது அவசியம்.

பொதுவாக கூட்டுக்கட்சிகளின் ஆதரவோடு ஆட்சி செய்கின்றவர்கள் உறுதியான தீர்மானங்களை எடுக்க முடியாத சந்தர்ப்பங்கள் இருந்துள்ளன.

ஆட்சிக்கு ஆதரவளிக்கும் கட்சித் தலைவர்கள் தத்தம் செல்வாக்கினைப் பிரயோகிக்க முற்படுவர். இத னால் ஆட்சித் தலைவர் எதுவும் செய்ய முடியாத இழு பறி நிலைக்கு ஆட்படுவது வழக்கம். இத்தகையதொரு சூழ்நிலை, புதிய ஜனாதிபதி மைத்திரியால சிறிசேனவு க்கும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் உண்டு.

அதாவது மைத்திரிபால சிறிசேனவின் வெற்றி என் பது மைத்திரி என்ற தனிமனித செல்வாக்கினால் ஏற் பட்டதன்று. மாறாக சந்திரிகா குமாரதுங்கவின் ஆத ரவு; ரணிலினதும் அவரது கட்சியினதும் ஆதரவு; முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மற் றும் மகிந்தவை விட்டு மைத்திரியின் பக்கம் வந்து சேர் ந்த அமைச்சர்கள்; தமிழ், முஸ்லிம் தலைமைகளின் ஆதரவு என அனைத்தும் சேர்ந்தே மைத்திரிபால சிறி சேனவை ஜனாதிபதி ஆக்கியது.

இந்நிலையில் மைத்திரி ஜனாதிபதிப் பதவியை பெறுவதற்கு நாங்களே காரணம் என்று கூட்டுச்சேர்ந்தவ ர்கள் உரிமை கோரும் போது எல்லாம் குழம்பி விடும்.

எனவே யாருடைய ஆதரவில் பதவியைப் பெற்றிருந் தாலும் மைத்திரிபால தனது சொந்தப் புத்தியில் செயற் படுவது அவசியமானதாகும். அதேநேரம் நூறு நாள் வேலை திட்டத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியின் அதிகாரத்தை குறைக்கின்ற திட்டங்களும் உண்டு.

குறித்த திட்டம் நல்லதாயினும் அந்தத் திட்டம் முன் னாள் ஜனாதிபதிகள் மீண்டும் ஆட்சி அதிகாரத்திற்கு வருவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தாத வகையிலும் நிலைமை யைப் பார்த்துக்கொள்வது காலத்தின் கட் டாய தேவையாகும்.

எதுவாயினும் புதிய ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன தெரிவாகியதில் அதிகூடிய மகிழ்ச்சி அடை பவர்கள் தமிழர்களாகவே இருக்க முடியும். அதற்குப் போதுமான நியாயமும் உண்டு. வன்னிப் போரை நடத்தி முடித்த மகிந்த ராஜபக்ச, தமது பிரச்சினைக்குத் தீர்வு காணுவார் எனத் தமிழ் மக்கள் நம்பியிருந்தனர்.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்ற மகத்தான பலமும் அவரிடமிருந்தது. அதே நேரம் தமிழர்களின் உரிமைகளை மகிந்த ராஜபக்ச வழங்கும் போது பேரினவாதத்தைச் சேர்ந்த எந்தக் கொம்பனும் எதிர்க்க முடியாது. அவ்வாறு எதிர்த்தால் மகிந்த பதிலடி கொடுப்பார் என்றும் நம்பப்பட்டது.

ஆனால், மகிந்த ராஜபக்ச போர் வெற்றிக்கு விழா எடுத்தாரே தவிர, தமிழ் மக்களின் கண்ணீரைத் துடை க்க எதுவும் செய்யவில்லை. பயங்கரவாதத்திற்கு எதி ரான போர் என்று கூறிய மகிந்த அப்பாவித் தமிழ் மக்க ளை காப்பாற்றத் தவறியதும், வெற்றிக்குப்பின் உங்க ளுக்கு என்ன தீர்வு என்று கேட்டது போல நடந்து கொண் டதுமே அவரின் தோல்வியில் – உங்களின் வெற்றியில் தமிழர்களுக்கு மகிழ்வு. இந்த உண்மையை புதிய ஜனாதிபதி அறிந்து அதற்கேற்றால் போல் செயற்பட வேண்டும் என்பதே நம் விருப்பம்.

### வங்கிக்கு செல்வதாக கூறிச்சென்ற

## தாயையும் மகளையும் காணவில்லை என முறைப்பாடு

யாழ்ப்பாணம், கற்கோவளம், தபால் பெட்டி சந்தியைச் சேர்ந்த 30 வயதான தாயொருவரையும் அவரது நான்கு வயது மகளையும் காணவில்லை என அவர களின் உறவினர்கள், பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை முறைப்பாடொன் றைப் பதிவு செய்துள்ளனர்.

பிரதாப் ஜெனிஸ்ரலா விஜயகுமார் மற்றும் அவரது மகள் பிரதாப் சரணியா ஆகிய இருவருமே இவ்வாறு காணாமல போயுள்ளனர் என்று பொலிஸ் முறைப் பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடியிலுள்ள வங்கியொன்று க்கு சென்று வருவதாக நேற்று முன்தினம் காலை சென்ற இவ்விருவரும், இது வரையில் வீடு திரும்பவில்லை எனவும் காணாமல் போயுள்ள பெண்ணின் அலைபேசி நிறுத்தப்பட்டுள்ளது என்றும் முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

குறித்த பெண்ணும் குழந்தையும் பருத்தித்துறை, ஆனைவிழுந்தான் பற்றைப்பகுதிக்குள் நஞ்சருந்திய நிலை யில் மயங்கிக் கிடப்பதாக காணாமற் போன பெண்ணின் நண்பியொருவ ரின் கணவன், பெண்ணின் உறவி னர்களை அலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளார். எனினும், உறவினர்கள் அவ்விடத்திற்குச் சென்று பார்த்தபோது அங்கு எவரும் இருக்க வில்லை.

இதனையடுத்து, பொலிஸ் நிலை யத்தில் உறவினர்கள் முறைப்பாடு செய ததையடுத்து, பொலிஸார் ஆனை விழுந்தான் பகுதிக்குள் சென்று நேற்று தேடுதல் நடத்தினர்.

எனினும் நேற்றைய தினம் எவ் வித தகவல்களும் கிடைக்கவில்லை. இன்றைய தினம் குறித்த பகுதியில் மேலும் தேடல் நடத்தவுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித் தனர். (செ-60)

## பிரசாரங்களை முடித்த தூதுவர்கள் திரும்பினர்

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது அழைக்கப்பட்டிருந்த இலங்கையின் தூதுவர்கள் பலரும் மீண்டும் கடமைகளுக்கு திரும்பியுள் ளனர்.

அந்த வகையில் பலர் நேற்று முன் தினம் கட்டுநாயக்க விமானத்தளம் ஊடாக புறப்பட்டு சென்றதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

பிரான்ஸ்க்கான தூதுவர் கருணா ரட்ன ஹங்காவத்த, ஜப்பானுக்கான தூதுவர் அட்மிரல் வசந்த கருணாகொட, சீனாவுக்கான தூதுவர் ரஞ்சித் உயன்கொட, ஜோர்தான் தூதுவர் காமினி ராஜபக்ஷ, இலங்கையின் அவுஸ்திரேலிய உயர்ஸ்தா னிகர் அட்மிரல் திஸ்ஸர சமரசிங்க ஆகி யோரே கடமைகளுக்கு திரும்பியுள்ளனர்.

இவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் தேர்தல் பிரசாரங்களுக்காக அழைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது. (செ-11)

## மல்சலகுழி சுத்திகரித்த வேளை வெடி விபத்தில் ஒருவர் பலி

ஹற்றன் பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் உள்ள மலசலகூடத்தின் குழியை சுத்திகரிப்பதற்காக காபைட் இர சாயன பொருளை போட்டதனால் அது வெடித்ததால் ஒருவர் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ள தாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்த னர்.

மலசலகூடத்தின் குழியை சுத்திகரி ப்பதற்காக குறித்த நபர் காபைட் இரசா யன பொருளை போட்டதனால் அது வெடி த்துள்ளதாக ஹற்றன் பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந் துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் நோர்வூட் பகுதியை சேர்ந்த சுரேஸ் என அடைய ாளம் காணப்பட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா மாவட்ட வைத்தியசாலை க்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## அமைச்சரவையில் இணைய மாட்டோம் ஜே.வி.பி

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான அமைச்சர வையில் இணைந்துகொள்ளப் போவ தில்லை என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம் 100 நாட்களை மாத்திரமே கொண்டது. இவற்றின் செயற பாடுகள் குறுகிய காலத்தை அடிப்படை யாக கொண்டவை. எனவே இந்த அமை ச்சரவையில் இணைவதில் எவ்வித பய னும் இல்லை என்றார் அவர். (செ-11)

## புனித பாப்பரசரே வருகவே!

மண்ணகத் திருச்சபையின்
மயண்புறு தலைவரே!
புத்தாண்டில் உம்வரவு புதுவிடியல்
தரட்டும்!
விண்ணரசின் திறவுகோலைப்
பெற்றவர் வாரிரே!
விசுவாச வாழ்வெமக்குத் தருகின்ற
மறைக்குன்றே!
மண்ணுயிர்கள் மாண்புறவே
குரல்தரும் வெண்புறாவே
மண்ணகத்தில் மனுமகனின்
கனண்பரிய .....!
புண்ணியத்தின் புனிதவாழ்வை
போற்றுகின்ற புனிதனே
பாப்பிறையே பிரான்சிஸ்சே வருக!
வருகவே!!
தன்னுயிரை துச்சமென பாராது
முன்வந்து
எம்மண்ணில் விசுவாச
மறைவாழ்வின் ஒ ளியேற்றி
பென்னெழுத்தில் உம்பெயரை
பொறித்திட்ட புனிதரே
புவியாட்சி உள்ளளவும் உம்பெயர்
நிலைபெறும்
அன்னை மண்ணில் அருளாளர்
யோசப் வாசை
அகிலம் போற்றம் புனிதராய்
அருட்பொழிவு
செய்ய அன்றலர்ந்த தாமரை
போல் அருளே பொழியும்
ஆன்மீகத் திருவிளக்கே பாப்பரசே
வருக வருகவே!!

## மோ.சைக்கிள் விபத்து; படுகாயமடைந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழையில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமுற்று ஆபத் தான நிலையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞரும் நேற்றுத் திங்கட் கிழமை மரணம் அடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் நிறுத் திவைக்கப்பட்டிருந்த உழவு இயந்திர த்துடன் மோட்டார் சைக்கிள் மோது ண்டதில் வெளிநாட்டில் இருந்து வந்த வர் ஸ்தலத்திலேயே மரணம் அடை ந்தார்.

அவருடன் மோட்டார் சைக்கிளின பின்புறமாக இருந்து வந்த சுன்னாகம் சிவன்கோவிலடியைச் சோந்த இளை ஞரான திருஞானம் பிரகாஸ் (வயது 23) என்பவர் மிகவும் ஆபத்தான நிலை யில் தெல்லிப்பழை வைத்தியசாலையில இருந்து யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு உடனடியாக கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அங்கு அவர் சிகிச்சை பலனளிக் காத நிலையில் நேற்றுத் திங்கட்கி ழமை மரணம் அடைந்தார். (செ-11)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### கடவுளுக்கு இதுவே மகிழ்ச்சி




- அறிவோடு செயல்படும் போது தான் பிழைகளை அகற்ற முடியும். இதையே அறிவியலும் ஏற்றுக் கொள்கிறது.
- உன்னை நீயே வெறுப்பது கூடாது. வெறுப் பினால் அழிவுக்குரிய வாசல் திறந்து விடப்படுகிறது.
- தாய், தந்தையரை ஒருவன் மகிழ்ச்சிப்படுத்தி விட்டால் கடவுளே மகிழ்ச்சியில் திளைக்கிறார்.
- அன்பின் அடிப்படையில் செய்யப்படும் எந்த ஒரு செயலின் முடிவும் ஆனந்தத்தில் நிறைவு பெறும்.
- பெற்றுக் கொள்வதில் எந்த பெருமையும் இல்லை. கொடுத்து மகிழ்பவனே பேறு பெற்றவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுபிளெஸிஸ் சதம்

# கிறிஸ் கெய்லின் அதிரடி ஆட்டத்தால் மேற்கிந்திய தீவுகள் அபார வெற்றி



தென் ஆபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது இருபது 20 போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 4 விக்கெட் வித்தியா சத்தில் வெற்றி பெற்றது.

நியூலேண்ட்ஸ் மைதானத்தில் நடந்த முதல் போட்டியல் மேற்கிந்திய தீவுகள் அணி தனது முதல் வெற்றியை பதிவு செய்திருந்தது.

இதனையடுத்து 2 ஆவது இருபது 20 போட்டி நேற்று முன்தினம் ஜோகன்னஸ் பர்கில் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய் தது.

இதைத் தொடர்ந்து முதலில் துடுப்பெடுத்தாடிய தென் ஆபிரிக்கா அபாரமாக விளையாடி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 231 ஓட்டங்கள் குவித்தது.

மிரட்டலாக விளையாடிய அணித்தலைவர் டுபிளெஸிஸ் 56 பந்துகளில் 119 ஓட்டங்கள் (5 சிக்சர், 11 பவுண்டரி) குவித்தார். டேவிட் மில்லர் 47 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

232 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி மேற்கிந்திய தீவுகள் அணி துடுப்பெடுத்தாடியது.


தொடக்க ஆட்டக்காரர் 17 ஓட்டங்களில் வெளியேற, அடுத்து களமிறங்கிய கிறிஸ் கெய்ல் அதிரடியில் அசத்த ஆரம்பித்தார். இவருடன் சாமுவேல்ஸ் ஜோடி சேர்ந்தார்.

இருவரும் தென் ஆபிரிக்க பந்துவீச்சை புரட்டியெடுத்தனர். கெய்ல் (7 சிக்சர், 9 பவுண்டரி) 90 ஓட்டங்களும், சாமுவேல்ஸ் (2 சிக்சர், 7 பவுண்டரி) 60 ஓட்டங்களும் குவித்து ஆட்டமிழந்தனர்.

இதனால் மேற்கிந்திய தீவுகள் அணி 19.2 ஓவர்களிலே 6 விக்கெட் இழப்பிற்கு 236 ஓட்டங்களை பெற்று அபார வெற்றி பெற்றது.

அதிரடியில் மிரட்டிய கிறிஸ் கெய்ல் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

மூன்றாவது மற்றும் கடைசி போட்டி டர்பனில் நாளை நடைபெறும். (க)



## ஹாட்லிக் கல்லூரி வெற்றி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி றிபேக் தாரகை மற்றும் ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் அணிகள் மோதிக்கொண்ட சிநேகபூர்வ 50 பந்து பரிமாற்ற போட்டி நேற்றைய தினம் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய றிபேக் தாரகை ஆரம்பத்தில் விக்கெட்டுக்களை வேகமாக இழந்தது.

ஒரு கட்டத்தில் 3 ஓட்டங்களுககு 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. பின்னர் சுதாகரி தது ஆடிய சாவ கச்சேரி றிபேக் தாரகை 46.4 பந்து பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 230 ஓட்டங்களை பெற்று கொண்டது. துடுப்பாட்டத்தில் நிலான் 31, பிரதாபன் 38, ஹரிகரன் 30, லக்சன் 32, கோபி 21 என பின் வரிசை வீரர்களின் பொறுப்பான ஆட்டத்தால் கௌரவமான ஓட்டத்தினை பெற்று கொண்டது. பதிலளித்து ஹாட்லிக் கல்லூரி அணி 44.5 பந்து பரிமாற்றங்களில் 7 விக்கட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் ஹரி 73 ஓட்டங்களை பெற்றார். (க-29)

## மரதன் ஓட்ட போட்டி

(மானிப்பாய்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளில் மாபெரும் மரதன் ஓட்டப்போட்டி அதிக போட்டியாளர்களுடன் விமர்சையான நிறைவை சந்தித்திருக்கிறது.

கடந்த 11ஆம் திகதி காலை 6 மணிக்கு இளவாலை சித்திரமேழி சந்தியில் இருந்து அதிகளவான போட்டியாளர்களுடன் இந்தப்போட்டியை வலி.வடக்கு பிரதேச சபையின் உறுப்பினர் வே.சண்முகநாதன் ஆரம்பித்து வைத்தார்.

15 கிலோ மீற்றரை தூரமாக கொண்டு இடம்பெற்ற இப்போட்டியில் 15 வீரர்கள் ஓட்டப்பாதையை பூரணப்படுத் தினர்.

SPORTS விளையாட்டுச் செய்திகள்

இவர்களில் முதலாமிடத்தை அபில்ராஜ்ும் 2ஆம் இடத்தை தமிழ்ச்செல்வனும் 3ஆம் இடத்தை யசிந்தனும் பெற்று கொண்டனர்.

இவர்களுக்கான பரிசில்கள் பொங்கல்விழாவில் வைத்து வழங்கப்பட இருக்கிறது. (க-23)



## தைப்பொங்கலை முன்னிட்டு

# சண்டிலிப்பாய் பிரதேச இ.கழக மாவட்ட ரீதியிலான மென்பந்தாட்டம்

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் வருடாந்தம் நடத்தும் "தைப்பொங்கல்" மாவட்ட ரீதியிலான மாபெரும் மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி இவ்வருடமும் 4ஆவது தடவையாக இடம்பெறுகின்றது.

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் நடத்தும் வருடாந்த மாபெரும் "தைப்பொங்கல்" மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் (10, 11) மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் ஆரம்பமாகியது

இதில் இடம்பெற்ற போட்டிகளின் படி,

மல்லாகம் எஸ்.எம்.எஸ் விளையாட்டுக் கழகமும் சுன்னாகம் காந்தி நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் காந்தி நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் 75 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்த மல்லாகம் எஸ்.எம்.எஸ் விளையாட்டுக் கழகம் டிவோனின் அதிர டியான 31 ஓட்டங்கள் கைகொ டுக்க 3.2 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது.

ஆனைக்கோட்டை வராகி விளையாட்டுக் கழகமும் உடுவில் ஸ்டைல் போய்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் முதலில் துடுபபெடுத்தாடிய ஆனைக்கோட்டை வராகி விளையாட்டுக் கழகம் 49 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்த உடுவில் ஸ்டைல் போய்ஸ் விளையாட்டுக் கழகம் 3.1 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது.

கொட்டடி இளங்கதிர் விளையாட்டுக் கழகமும் இணுவில் கலையொளி விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொட்டடி இளங்கதிர விளையாட்டுக் கழகம் 70 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்த இணுவில் கலையொளி விளையாட்டுக் கழகம் கோகுலனின் ஆட்டமிழக்காது பெற்ற 31 ஓட்டங்களின் துணையோடு 4.1 ஓவர்களில் 1 இலக்கை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

கொக்குவில் ஏ.பி விளையாட்டுக் கழகமும் தலையாழி இந்திரா விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தலையாழி இந்திரா விளையாட்டுக் கழகம் 56 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்த கொக்குவில் ஏ.பி விளையாட்டுக் கழகம் சிலோஜனின் 29 ஓட்டங்கள் கைகொடுக்க 4.2 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது.

இடம்பெற்ற முதலாவது காலிறுதிப் போட்டியில் மல்லாகம் எஸ்.எம்.எஸ் விளையாட்டுக் கழகமும் உடுவில் ஸ்டைல் போய்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதியது. இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மல்லாகம் எஸ்.எம்.எஸ் விளையாட்டுக் கழகம் 60 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்த உடுவில் ஸ்டைல் போய்ஸ் விளையாட்டுக் கழகம் 57 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்களையும் இழக்க மல்லாகம் எஸ்.எம்.எஸ். விளையாட்டுக் கழகம் அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகமும் சங்கானை வை.எம்.எஹ்.ஏ விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் முதலில் துடுபபெடுத்தாடிய சங்கானை வை.எம். எச்.ஏ விளையாட்டுக் கழகம் 79 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்த அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகம் ரகீமின அதிரடியான 41 ஓட்டங்கள் கைகொடுக்க இலக்கை அடைந்தது.

இடம்பெற்ற 2ஆம் சுற்று போட்டியொன்றில் இணுவில் கலையொளி விளையாட்டுக் கழகமும் கொக்குவில் ஏ.பி விளையாட்டுக் கழகமும் மோதியது. இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இணுவில் கலையொளி விளையாட்டுக் கழகம் கோகுலனின் அதிரடியான 35 ஓட்டங்களினால் 97 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்த கொக்குவில் ஏ.பி விளையாட்டுக் கழகம் இறுதிவரை போராடிய போதும் 81 ஓட்டங்க ளையே பெற முடிந்தது. இதனால் இப் போட்டியில் வெற்றி பெற்று இணுவில்கலை யொளி விளையாட்டுக் கழகம் காலி றுதிக்கு முன்னேறியது,

ஆறுகால்மடம் லெவின் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆறுகால் மடம் லெவின்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 57 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்த கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகம் சத்தியனின் அதிரடியான 35 ஓட்டங்கள் கைகொடுக்க இலகுவாக ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது.

அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டி என்பன பொங்கல் தினத்தன்று இடம்பெறும். வெற்றிபெறும் அணிகளுக்கு கடந்த வருடத்தைப் போன்று பணப்பரிசில் மற்றும் வெற்றிக்கிண்ணங்கள், போட்டியின் சிறப்பாட்டக்காரன் உள்ளிட்ட பலபரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அமைச்ச...

த்தின் பிரகாரம் முன்னெடுப்பதாக அவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தனர்.

புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறும் இந்நிகழ்வில் 28 அமைச்சர்கள், 8 இராஜாங்க அமைச்சர்களும், 7 பிரதிய மைச்சர்களும் சத்தியபிரமாணம் செய்தனர்.

அவர்களின் பெயர்களும், அமைச்சு விபரங்களும் வருமாறு,

ரணில் விக்ரமசிங்க - கொள்கைத் திட்டமிடல், சரத் பொன்சேகா-தேசிய பாதுகாப்பு, ஜோன் அமரதுங்க -சட்டம் ஒழுங்கு மற்றும் அனர்த்த முகாமைத்துவம், ஜோசப் மைக்கல் பெரேரா - உள்விவகாரம், காமினி ஜயவிக்ரம பெரேரா - உணவுப் பாதுகாப்பு, மங்கள சமரவீர - வெளிவிவகாரம், கரு ஜயசூரிய - பௌத்த சாசனம், லக்ஸ்மன் கிரியல்ல - பெருந்தோட்டத்துறை, ரவி கருணாநாயக்க - நிதி, ரவூப் ஹக்கீம் - நகர அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசனம் நீர்விநியோகம், சம்பிக்க ரணவக்க - மின்வலு எரிசக்தி, ராஜித சேனாரட்ன - சுகாதாரம், துமிந்த திஸாநாயக்க - வடிகாலமைப்பு, கபீர் ஹாசீம் - பெருந்தெருக்கள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு, எம்.கே.டி.எஸ். குணவர்தன - காணி, சஜித் பிரேமதாச -வீடமைப்பு மற்றும் சமுர்த்தி, விஜயதாச ராஜபக்ஸ - நீதி, கயந்த கருணாதிலக்க - ஊடகம், அர்ஜுனரணதுங்க - துறைமுகம் மற்றும் விமான சேவைகள், அகிலவிராஜ் காரியவசம் - கல்வி, பழனி திகாம்பரம் - தோட்ட உட்டமைப்பு, டி.எம். சுவாமிநாதன் - இந்து மத விவகாரம் மற்றும் மீள்குடியேற்றம், தலதா அதுகோரல - வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ரஞ்சித் மத்தும பண்டார - உள்நாட்டு போக்குவரத்து, பீ.ஹரிசன் - சமூக சேவைகள், சாந்தனி பண்டார - மகளிர் விவகாரம்- ரிசாட் பதியூதின் - கைத்தொழில் மற்றும் வர்த்தகம்- நவீன் திஸாநாயக்க -சுற்றுலாத்துறை

**இராஜாங்க அமைச்சர்கள்**

நந்திமித்ர ஏக்கநாயக்க- கலை, கலாசார விவகாரம், பைசர் முஸ்தபா- சிவில் விமான சேவைகள், பாலித ரங்கே பண்டார-மின்வலு மற்றும் எரிசக்தி, துலிப் வெத ஆராச்சி- மீன்பிடி, ரோஸி சேனாநாயக்க- சிறுவர் விவகாரம், ரஜீவ விஜேசிங்க- உயர்கல்வி, ருவன விஜேவர்தன- அரச பாதுகாப்பு , நிரோஷன் பெரேரா- இளைஞர் விவகாரம்

**பிரதி அமைச்சர்கள்**

சம்பிக்க பிரேமதாச- கைத்தொழில் மற்றும் வர்த்தக பிரதி அமைச்சர், ஹர்ஷ டீ சில்வா- நிதி விவகாரங்கள் மற்றும் கொள்கை செயல்படுத்தல் பிரதி அமைச்சர், ஹெரான் விக்ரமரத்ன- நெடுஞ்சாலை மற்றும் முதலீட்டு பிரதி அமைச்சர்,சுஜீவ சேனசிங்க- பிரதி நீதி அமைச்சர், வசந்த சேனாநாயக்க- சுற்றாடல் துறை பிரதி அமைச்சர், விஜயகலா மகேஸ்வரன்- பெண்கள் விவகார பிரதி அமைச்சர், அஜித் பி.பெரேரா- வெளிவிவகார பிரதி அமைச்சர், அஜித் பி.பெரேரா - வெளிவிவகார பிரதி அமைச்சர். (செ-11)

# பாதுகாப்பு...

அமைச்சை ஆட்சியில் இருந்த ஜனாதிபதிகள் எவருக்கும் வழங்கவில்லை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியிடமே பாதுகாப்பு அமைச்சு இருந்து வந்தது. கட்சிக்குள்ளும் வெளியிலும் தமக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களில் இருந்து தற்காத்து கொள்ளவே அவர்கள் பாதுகாப்பு அமைச்சை தம்வசம் வைத்திருந்தனர்.

எனினும் மைத்திரிபால சிறிசேன, இராணுவத்தில் நீண்டகாலம் பணியாற்றிய சரத் பொன்சேகாவுக்கு அந்த பதவியை வழங்கியுள்ளார். (செ-11)

# பிரதி அமைச்...

னர் விஜயகலா மகேஸ்வரன் புதிய அமைச்சரவையில் பெண்கள் விவகாரங்கள் தொடர்பான அமைச்சின் பிரதி அமைச்சராக பொறுப்பேற்று கொண்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று அவர் பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டில் இடம் பெற்ற நாடாளுமன்ற தேர்தலில் ஐ.தே.க கட்சியின் சார்பில் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருந்த இவர் தற்போது பிரதியமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து தனது அரசியலில் ஏற்றம் கண்டுள்ளார். (செ)




# INVITATION FOR BIDS TEACHING HOSPITAL JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital,Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Renovation of Hospital Boundary Wall (From JICA Building to OPD) | 500.00 | 76,000.00 | 91 | 3.78 | C8 |
| Construction of Corridor close to Office premises and Aluminium Partition for Plastic Surgical Unit | 500.00 | 20,000.00 | 91 | 0.97 | C10 |
| Renovation of Nursing Quarters Roof & Construction of NTS Boundary Wall | 500.00 | 19,000.00 | 91 | 0.91 | C10 |
| Painting to the Catheterization Laboratory, Renovation of Telephone Exchange Room & Side Shed Fitting in the Oxygen Plant | 500.00 | 15,000.00 | 91 | 0.71 | C10 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure

2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).

3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 14.01.2015 up to 27.01.2015 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.

5. Sealed bids shall be delivered to the address below at before 10.00 hrs on 28.01.2015, late bides will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders' representatives who choose to attend.

**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**

**Director (Chairman),**
13/01/2015.

(C-9819)

# போர்க்குற்ற...

கொடியுடன் வந்தவர்கள் சுடப்பட்டமை மற்றும் சரணடைந்தவர்கள் கொல்லப்பட்டமை போன்றவை தொடர்பிலான சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டிருந்தால், அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். ஏனெனில், சரணடைந்தவர்களை அவர்கள் கொல்ல முடியாது.

ஆனால், நாங்கள் எவரையும் சர்வதேச விசாரணைக்காக ஒப்படைக்கமாட்டோம். இது தொடர்பில் உள்நாட்டிலேயே விசாரணைகளை மேற்கொண்டு, தேவையானவற்றை இங்கேயே செய்வோம்.

புதிய அரசாங்கத்தின் மீது சர்வதேச சமூகம் பெரிய எதிர்பார்ப்புடன் இருக்கிறது, ஏனெனில் நாம் நல்லாட்சிக்கான வாக்குறுதிகளை அளித்திருக்கின்றோம் என ராஜித தெரிவித்தார். (செ-11)

# ஊழலில் ஈடு...

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் ஜனாதிபதி செயலகத்தில் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

ஊழல் மோசடிகளில் ஈடுபடும் தரப்பினர் அமைச்சர்களா, பிரதி அமைச்சர்களா, பாராளுமன்ற உறுப்பினர்களாக அல்லது சாதாரண பொதுமக்களா என பாரபட்சம் பார்க்கப்படாது அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய அமைச்சரவை அந்தஸ்து உடைய அமைச்சர்களின் எண்ணிக்கையை 30க்கும் குறைவாக பேண முடிந்துள்ளது.

அமைச்சரவை பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட சிலர் அமைச்சுப் பதவி கிடைக்கப் பெறாதவர்கள் சில வேளைகளில் வருத்தமடையக் கூடும்.

இதனை விடவும் சிலர் தரமான அதிகம் வேலை செய்யக் கூடிய அமைச்சரமை எனக்கு கிடைக்கவில்லை என வருந்தக் கூடும் எனினும் அவற்றை விடுத்து மக்கள் பணியில் அனைவரும் முன்னின்றி உழைக்க வேண்டும்.

நீண்ட கால அரசியல் வாழ்க்கையில் எமக்கு இந்த விதமான அனுபவங்கள் உண்டு .

எனினும், இந்த அமைச்சரவை பெரும்பாலும் மூன்று மாத காலத்திற்கே பதவி வகிக்கும எனவும் அதன் பின்னர் மாற்றங்கள் ஏற்படும்.

பௌத்த மதத்தைச் சேர்ந்தவர் என்ற வகையில் ஆசைகளை துறக்க வேண்டியது அவசிமாகின்றது. பதவிகள் மீதான பற்று ஆபத்தானது.

சுகாதார அமைச்சர் மற்றும் பிரதமர் பதவி ஆகிய ஆசைகளை துறந்த காரணத்தினால் இன்று ஜனாதிபதியாக பதவி வகிக்க முடிந்துள்ளது.

அண்மைக்காலமாக அரசியல்வாதிகளின் நடவடிக்கைகள் மிகவும் விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்கிறது.

சில அரசியல்வாதிகள் மிகவும் இழிந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் ஏனையவர்களுக்கு முன்னுதாரணமாக திகழ வேண்டும்.

தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமானது என மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (செ-11)

# புதிய பாப்ப...

கிழமை காலை இலங்கை வருகின்றார். இன்று கொழும்பு வரும் பாப்பரசர் எதிர்வரும் 15-ம் திகதி வியாழக்கிழமை காலை வரை இலங்கையில் தங்கியிருப்பார்.

பாப்பரசரின் இலங்கை விஜயத்தின் போது காலி முகத்திடலில் விசேட ஆராதனை நடத்துதல், ஜோசப் வாஸ் அடிகளாரை புனிதராக திருநிலைப்படுத்துதல் மற்றும் மடு தேவாலயத்துக்கு விஜயம் செய்தல் என்பவை மிகவும் பிரதான முக்கியமான விடயங்களாக உள்ளன.

இன்று காலை 9 .00 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையும் பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸ் திருத்தந்தையை இலங்கை ஜனநாயக சோஷலிஷ குடியரசின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தியோகபூர்வமாக வரவேற்பார்.

ஜனாதிபதியுடன் அரசாங்கத்தின் பிரதமர ரணில் விக்கிரமசிங்க முக்கியஸ்தர்கள் இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் மல்கம ரஞ்சித் மற்றும் ஆயர்கள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

**தைப் பொங்கலை முன்னிட்டு குறைந்த கட்டணங்களில் கற்கை நெறிகள்**

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது

**Spoken English With Grammar - Quick Learning Course**

Duration: (1 1/2 Months)

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம்.
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

**நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.**

**Diploma In English** Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

**B1 Exam** Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)

**IELTS** Acadamic/General We do Official Online Registration for Exam Candidates Duration: (2 Months)

(International English Language Testing System)

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**We gurantee success rate 6.5 band and above**

**A1 Exam** Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

Duration: (2 Months)

(சி-9811)

Batch1:14.01.2015@9AM
Batch2:15.01.2015@3PM
Batches Starts on
Batch3:16.01.2015@12PM
Batch4:17.01.2015@8AM

No.15, Sirambiyadi Lane, Off Stanley road (Above Sathosa SM), Jaffna.
Tel : 021-2224550
Head Office: No.30 15/2, W.A. D. Silva Mawatha, Colombo -06. Tel : 0112500207
Hot Lines : 0777585913, 0777222422, 0714299935


# கடமைகளை...

யான முறையில் நடந்தது.

இந்த நிகழ்வில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் பலர் கலந்து கொண்டதுடன், ஜனாதிபதியின் 100 நாள் வேலைத் திட்டத்திற்கு ஆதரவு வழங்க இணங்கியுள்ளனர். (செ-11)

# நீதிமன்றில்...

உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட நீதிபதி சுஜாதா அழகபெரும இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். (செ-11)

# தமிழ் ஆளுநர்...

மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அரசாங்கத் தரப்புக்குமிடையிலான சந்திப்பு நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, தர்மலிங்கம் சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் அரசாங்கத் தரப்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது ஜனாதிபதித் தேர்தலின் போது வடகிழக்கு மக்கள் தமக்கு வாக்களித்தமைக்காக முதலில் மிக்க நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதாக மைத்திரிபால சிறிசேன கூறினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த இரா. சம்பந்தன் தமது பிரச்சினைகளுக்கு ஒரு நியாயமான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தான் மக்கள் தங்கள் வாக்குகளை தங்களுக்கு அளித்துள்ளார்கள் என்றார்.

அத்துடன் இதுவரை காலமும் நாங்கள் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திடம் பல கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம்.

ஆயினும் அவர்கள் எந்த ஒரு கோரிக்கையையும் நிறைவேற்றவில்லை என்றும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அரசாங்கத்திடம் சில கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இதன்படி, இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்தக் காணிகளில் மீள்குடியமர அனுமதிக்க வேண்டும்.

நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை பொது மன்னிப்பின்கீழ் விடுதலை செய்யவேண்டும்.

காணாமற் போனவர்கள் விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடகிழக்கு ஆளுநர்கள், அரசாங்க அதிபர்கள் மற்றும் மாகாண அமைச்சின் செயலர்களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டது.

அத்துடன் ஒரு நல்லிணக்க சமிக்ஞையாக முதலில் வடக்கிற்காவது தமிழ் ஆளுநர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்றும், வவுனியா, மன்னார் மற்றும் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர்களை மாற்றுவது தொடர்பிலும் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், திருகோணமலையில் எட்டு வருட காலமாக இராணுவ அதிகாரி ஒருவர் அரச அதிபராக இருப்பதும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

மற்றும் சுன்னாகம் மின்சார சபையினால் ஏற்பட்டிருக்கும் கழிவு எண்ணெய் கசிவானது பல கிராமங்களை பாதித்திருப்பதுடன் அது வடக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதையும் சுட்டிக்காட்டி, இதனால் மேலும் பல கிராமங்களும் பாதிக்கப்பட்டு வருவதும், குடிநீர் கெட்டுப்போய், குளிப்பதற்குக் கூட பயன்படுத்த முடியாத நிலைமையிருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டு இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்கப்பட்டது.

அத்துடன் வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான பாஸ்நடைமுறை உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டது. அத்துடன் இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான அரசியல் தீர்வு காலக்கிரமத்தில் முன்வைக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்கு அரச தரப்பினர் பதிலளிக்கையில்,

இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினை தொடர்பில் குழுவொன்றை அமைத்து இடங்களை இனங்கண்டு அவர்களை மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் விபரங்கள் திரட்டப்பட்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆளுநர்களை மாற்றுவதைப் பொறுத்தமட்டில் ஒன்பது ஆளுநர்களையும் மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளோம்.

ஆகவே ஆளுநர்கள் மாற்றத்தின் போது இந்த விடயமும் கவனத்திற் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

அமைச்சின் செயலாளர்கள் மற்றும் அரசாங்க அதிபர்கள் மாற்றம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும்.

வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கான பாஸ் நடைமுறையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் குழுவொன்றை நியமித்து அதனூடாக அவ்விடயம் முன்னெடுத்துச் செல்லப்படும் என்று ஜனாதிபதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# பஷில், நாமலுக்கு...

தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். ஹெஜின் உடன்படிக்கை தொடர்பில் இவர்களுக்கு எதிராக ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்படும்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தோல்வியடைந்ததை அடுத்து ஊழல் மோசடி தொடர்பான முக்கியமான பல கோப்புகள் தமது கட்சிக்கு கிடைத்துள்ளது எனவும் அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# நாளை 14ஆம்...


நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது. (செ-11)


யாழில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்

அருள் ஒளி தர்சன மாலையும் புது வருட மற்றும் ஜெயந்தி தின சிறப்புப் பூஜையும்



இடம் : இளம் கலைஞர் மண்டபம்
சட்டநாதர் வீதி நல்லூர்.
காலம் : 18.01.2015.
ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30 மணி



(9132)

வரமருளிக் காத்தருள மனோன்மணி அம்மனாக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையின் அருள் ஒளி தர்சன மாலையும் புது வருட மற்றும் ஜெயந்தி தின சிறப்புப் பூஜையும் இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

ஏற்கனவே டென்மார்க்கிலிருந்து எடுத்துவரப்பட்ட அம்பாளின் திருவடிக்குப் பால் அபிசேக பூஜை சிறப்பாக இடம்பெறும் பால் அபிசேகம் செய்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொள்ள விரும்புபவர்கள் மண்டபத்திலே பாலினைப்பெற்று வழங்கி அம்பாளின் திருவருளை பெற்றுய்யும்வண்ணம் வேண்டுகின்றோம்.

குறிப்பு : ஒவ்வொரு மாதத்தின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் மாத இறுதி ஞாயிற்றுக்கிழமையில் சந்தச்சோலை வீதி பூந்தோட்டம் வவுனியா ஜெம் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தில் சிறப்புப் பூஜைகள் இடம்பெறுகின்றன.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பி.ப 4.30 மணிக்கு இலங்கை வானொலி தமிழ் சேவையில் சிறப்பு நிகழ்ச்சி இடம்பெறுகின்றது.

யாழ் தொடர்புகளுக்கு 0779825004 ஆலய தொடர்புகளுக்கு 0045 97180192



ஒலிம்பியா ஸ்போட்ஸ்

வாடிக்கையாளர்களுக்கு தைத்திருநாள் நல் வாழ்த்துக்கள்

(சி-9813)




விளையாட்டு உபகரணங்கள், உடற்பயிற்சி சாதனங்கள், பாண்ட்வாத்தியம் மற்றும் இசைக்கருவிகளுக்கு ...

இல. 6, ஜும்மா பள்ளிவாசல் லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel: 021 222 3490 Hotline: 077 8060267


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.